# திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"



OFFICE OF THE STATE EDITOR
24 | GU/74
2 - MAR 1974
GAZETTEER UNIT, MADRAS

தமிழ் நாடு அரசின் அறநிலைய
ஆட்சித்துறை வெளியீடு



தமிழக முதல்வர்
'தமிழவேள்' மாண்புமிகு டாக்டர்
கலைஞர் அவர்கள்



அறநிலைய அமைச்சர்
மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர்
அவர்கள்

---

## பொருளடக்கம்


1. சீர்காழிக் கோவை
2. தசகாரியம்
3. தற்சோதனை
4. பக்தி சூத்திரமும் திருவாசகமும்
5. திருவாய்மொழிப் பிள்ளை
6. மாலைமாற்றுப் பதிகம்
7. திருவாசகத்தில் விஞ்ஞானம்
8. சிற்பக்கலையின் அடிப்படை
9. ஒப்புரவு
10. அருளுடைமை
11. எந்நாளும் இன்பமே துன்பம் இல்லை
12. சங்க காலப் பொங்கல் விழா


---

### சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூபா பத்து மட்டும். தனிப் பிரதி விலை ரூபா ஒன்று மட்டும்.

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது அவ்வவ்வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல் இதழ்கள் தவறுமற் சேர்வதற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்

83
OFFICE OF THE STATE ...
2-MAR 1974




மாலை 16 | பிரமாதீச—மாசி | பிப்ரவரி—1974 | மணி 5

# சீர்காழிக் கோவை

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை :

நம் நாட்டில், சென்ற பத்தொன்பதாம் நூற்றுண்டில், தமிழ்ப் புலமை வானில் மிகவும் ஒளிபரப்பிப் புகழ் பெற்றுத் திகழ்ந்தவர்களுள் பெரிதும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர்கள் மூவர்! அவர்கள் முறையே பெரும்புலவர் **மீனுட்சிசுந்தரம் பிள்ளை** *(1815—1876)*, வடலூர் வள்ளல் அருட்டிரு இராமலிங்க அடிகளார் *(1823—1874)*, யாழ்ப்பாண நல்லூர் சிவத்திரு **ஆறுமுக நாவலர்** பெருமான் *(1822—1879)* என்பவர்கள் ஆவர். இம் மூவரையும் 19-ஆம் நூற்றுண்டின் 'முப்பெருஞ் சுடர்மணிகள்' என்று கூறுதல் பொருந்தும்.

கவிஞரும் நாடும் :

ஒரு நாட்டின் பெருமைக்கும் புகழுக்கும் காரணமாவன பலவற்றுள், அந் நாட்டில் தோன்றும் புலவர் பெருமக்களின் சிறப்பும் ஒன்ருகும். 'இந்தியாவை இழந்தாலும் இழப்போம்; எங்கள் ஷேக்ஸ்பியரை இழக்க ஒரு போதும் ஒருப்படோம்' என்று தாமஸ் கார்லைல் (Thomas Carlyle) குறிப்பிட்டிருப்பதும், ஈண்டு நாம் நினைக்கத் தகுவது.

''பெருங்கவிஞர் ஓமர் வாழ்ந்த பண்டைக் கிரேக்க அரசியலுலகம் அழிந்துபட்டதாயினும், அவர்தம் கவிதைகள் இன்றும் உயிர்ப்புடன் உலவி வருகின்றன. உரோம நாட்டின் பழம் பெருஞ் சிறப்பெல்லாம் மறைந்து போயிற்றெனினும், **வர்ஜில்** என்பவரின் கவிதைகள் இந்நாளிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. எந்த உச்சயினி மாநகரம் **காளிதாசர்** பெருமானல் அணி செய்யப் பெற்றதோ, அந்த உச்சயினி மாநகரம், தன் நினைவைக் காளிதாசர்பால் ஒப்படைத்துவிட்டு நிலை குலைந்து தளர்ந்தது; ஆனல் காளிதாசர் கண்ட கவிதைக் கற்பனைக் கனவுகள், உயிருடைய ஒருவனின் குரலொலியைப் போல, இன்றும் நம்மைக் கவர்ந்து இயக்கி நிற்கின்றன. இடைக் காலப் பெருவேந்தர்கள் பலரும் இறந்து போனர்கள். ஆனல் தாந்தேயின் கவிதைகள் இன்னும் விரும்பிப் பயிலப்பெறு

*சீர்காழியில் நடைபெற்ற, சென்னைச் சைவசித்தாந்த மகாசமாசத்தின் (திருநெறிப்பேரவையின்) 68-ஆம் ஆண்டு நிறைவு விழாவில், பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனர் அவர்கள் தலைமையில் நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது. *(31—12—73)*.

கின்றன. ஷேக்ஸ்பியர் காரணமாக, எலிசபெத் அரசியாரின் காலம் ஆங்கில மொழி நிலைத்துள்ள அளவும் பாங்குற நினைத்துப் பாராட்டப்பெறும்*''

158589

## அழியாப் புகழாளர் :

அந்நிலையில் தமிழ்நாடு உள்ள வரையில், தமிழ் நாட்டில் தலங்கள் உள்ள வரையில், அத்தலங்களிற் கோயில்களுள்ள வரையில், தலங்களும் கோயில்களும் பற்றிய இலக்கியங்கள் உள்ள வரையில், அவ்விலக்கியங்களைக் கற்றுச் சுவைத்து மகிழ்ந்து போற்றச் சமயவுணர்வும் தமிழறிவும் உடைய தமிழ் மக்கள் உள்ள வரையில், பெரும் புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் அருமை பெருமைகளும், அவர் தம் பேரும் புகழும், என்றும் நிலைபெற்று ஓங்குதல் திண்ணம்.

## உத்தமக் கவிஞர் :

ஜான் ரஸ்கின் (John Ruskin) என்னும் மேலைநாட்டு அறிஞர் 'உண்மைக் குரலொலிகள்' (Genuine Voices) என்றும், 'வெறும் எதிரொலிகள்' (Mere Echoes) என்றும், கவிஞர்களை இரு வகையாகப் பிரித்துரைப்பார். அவர்களுள் முதல் வகையினரைச் சேர்ந்தவராய் முத்தமிழ்த் துறையின் முறை போகிய உத்தமக் கவிஞர், நம் பெரும் புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள்! கவிஞர்கள் 'பொதுமக்கட் கவிஞர்' (Poets of the Masses) என்றும், 'பெருமக்கட் கவிஞர்' (Poets of the classes) என்றும் இரு திறப்படுவர். அவர்களுள், நூலாருள் நூல் வல்ல நம்முடைய மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள், பெருமக்கட் கவிஞர் ஆவர்!

## மதிநுட்பம் நூலோடுடையார் :

கற்றவர்கள் எல்லோருமே, கவிஞர்களாக ஆகிவிடுவதில்லை; கவிஞர்கள் என்போர் எல்லோருமே, கற்றறிந்தவர்களாக இருப்பதில்லை. ஆனால் நம் பெரும் புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களோ, மில்டன் போல ஆழ்ந்தகன்றோங்கிய அரும்பெருங் கல்வியாளர்! ஷேக்ஸ்பியர் போன்று இயல்பாகவே பாடுந் திறம் பெற்ற இணையற்ற மாபெருங் கவிஞர்! கல்வி நலமும் கவிதைத் திறமும் இவர்பால் ஒருங்கே சிறப்புறப் பொருந்தியிருந்தன. அதனாலேயே ''மதி நுட்பம் நூலோடுடையார்க்கு அதிநுட்பம் யாவுள? முன் நிற்பவை'' என்னும் திருக்குறள் மொழிக்கு ஏற்ப, இவர் தமிழுலகில் தமக்கிணை தாமேயாகத் தலைசிறந்து விளங்கினார்.

## சீர்காழிக் கோவை :

இத்தகைய பெரும் புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய, எத்தனையோ பல நூல்களுள், சீர்காழிக் கோவை என்பது சிறந்ததொன்றாகும். மணிவாசகப் பெருமான் பாடிய திருச்சிற்றம்பலக் கோவையார் முதலாக, நம் தமிழ் இலக்கியங்களில் எத்தனையோ பல கோவை நூல்கள் இருக்கின்றன. கோவை என்ற அமைப்பு ஒன்றேயாயினும், அதனை அவரவர்கள் பாடியிருக்கும் திறம் வெவ்வேறாகும். அந்தந்த ஆசிரியரின் புலமை நலம், மனப் போக்கு, பண்பு நலம் முதலியன, அவ்வந் நூல்களில் இயல்பாகப் புலப்படக் காணலாம்.

அகப் பொருள் இலக்கண நெறி முறைகளைப் பிறழாமல் தழுவியிருப்பது மட்டுமின்றி, ஒவ்வொரு பாடலிலும் சீர்காழியின் சிறப்பு, அங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமானின் அருட்டிறம், சீர்காழியைச் சுற்றியுள்ள பிற தலங்களின் மாட்சி, சீர்காழியில் தோன்றியருளிய சம்பந்தரின் மாண்பு, பிற நாயன்மார்களின் வரலாற்றுச் செய்திகள், சைவ நூற் கருத்துக்கள், சங்க இலக்கியப் பொருள் நலங்கள், உலகியல் அநுபவக் குறிப்புக்கள், நல்ல இனிய கவிதை வளம், சொற் பொருள் நுட்பச் சுவைகள் முதலிய பலவகைக் கலைக் கூறுகளும் அமையும்படி, பெரும் புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள், சீர்காழிக் கோவையை இயற்றியுள்ளார். பொதுவாகக் கோவை நூல்களுள் 400 பாடல்களும் துறைகளுமே அமைந்து காணப்படும். ஆனால் அவற்றையே நமது பெருங் கவிஞர் அவர்கள், 531 கவிதைகளும் துறைகளுமாக அமையும்படி யாத்துள்ளார்கள். அவை அனைத்தையும் விரிப்பிற் பெருகும், தொகுப்பின் எஞ்சுமாதலின், அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும், ஈண்டுக் கண்டு அமைவோம்.

## சீர்காழியின் சிறப்பு :

சோழ நாட்டுச் சிவ தலங்களுள், சீர்காழி மிக்க சிறப்புடைய தொன்று. அதற்குப் பன்னிரு பெயர்கள் உண்டு. பிரமன் பூசித்ததனால் பிரமபுரம் என்று அதற்கு ஒரு பெயர் வழங்

*"The political world of **Homer** is dead while his song is living today. The splendour of Rome has vanished but the poetry of **Virgil** is yet vital. The dreams of **Kalidasa** still move us like the cry of a living voice, with their poignant sense of tears in human relations, while the Ujjain of which he was the ornament has left her memory to his keeping. The great mediaeval potentates are forgotten, but the song of **Dante** is still cherished ; and the Elezabethan age will be remembered as long as the English language lives on account of its **Shakespeare.**"

—Dr. S. RADHAKRISHNAN,
*East and West in Religion, p.* 130.

கும். மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூவகைச் சிறப்பும் சீர்காழிக்கு உண்டு. அங்குள்ள திருக்குளம் **பிரமதீர்த்தம்** எனப்படும். அதன் கரையில்தான் சம்பந்தர் ஞானப்பால் உண்டார். சிவபெருமான் இங்கு இலிங்கம் குரு சங்கமம் என்னும் மூவகை நிலையிலும் காட்சி தருகின்றார். பிரமன் வழிபட்ட இலிங்கமாதலின், இங்குள்ள பெருமானைப் **பிரமலிங்கேசுவரர்** என வழங்குவர். அம்பிகைக்குத் திருநிலை அழகி என்பது பெயர். நம்முடைய அழகும் இளமையும் பிறவும் நிலையில்லாதவை. அம்பிகையோ, நிலைபேறுடைய அழகும் இளமையும் பிறவும் உடையவள். இங்கே கட்டுமலையின் மீது **தோணியப்பர்** எழுந்தருளியுள்ளார். அதற்கும் மேலே உயரத்தில் சட்டைநாதப் பெருமான் சந்நிதி உள்ளது. இவரை **வடுகர்** என்றும் வழங்குவர். இவர் சங்கமர் என்னும் அடியார் வடிவில் திகழ்கின்றார். இத்தலத்தில் இவரே வேண்டுகோட்குரிய அருட்டெய்வமாகப் போற்றப்படுகின்றார். சீர்காழியில் திருஞானசம்பந்தர்க்குச் சிறப்பான ஒரு தனிச் சந்நிதி அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இங்ஙனம் சீர்காழியிற் கண்டு மகிழ்வதற்குரிய பலவற்றையும், பின்வரும் ஒரே பாடலில் ஆசிரியர், ''தலைவன் தன்பதி அடைந்தமை தலைவிக்குச் சாற்றல்'' என்னும் துறையில் அமைத்துப் பாடியிருத்தல், அறிந்து மகிழ்தற்குரியது.

''திகழும் **பிரமபுரம்** இஃது, அப்பெயர்த் தீர்த்தம் இது ;
நிகழும் **பிரமலிங்கேசர்**இல் ஈது; நிலையழகி
புகழும் இல்ஈது; இது **தோணிப்பிரான்** இல்;
புகும்துயர் எற்கு
அகழும் **வடுகன்**இல் ஈது; இது சம்பந்தனார்
இல்மின்னே.''

இவ்வாறே சீர்காழிக்கு அருகில் உள்ள **திருக்கோலக்கா, வேளூர், திருக்கடவூர், திருவாரூர்** முதலிய பற்பல தலங்களைப் பற்றியும், அகப்பொருள் துறைக்கு ஏற்றபெற்றியில் இயைத்துப் பாடியிருக்கும் திறன், நூலைப் பயின்றறிந்து பாராட்டி மகிழத்தகும்.

**சம்பந்தர் :**

(1) சீர்காழிக் கோவையில், சீர்காழியில் தோன்றியருளிய சம்பந்தரைப் பற்றிய பலவேறு வரலாற்றுச் செய்திகளையும், அகப்பொருள் துறைகளுக்கும் இலக்கணத்திற்கும் பொருந்த, ஆங்காங்கே கற்பனை நலம் சிறந்து திகழும் வண்ணம் அமைத்துப் பாடிச் செல்கின்றார், பெரும் புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள்! தலைவியின் கண்கள், தலைவனுக்கு முதலில் காதல் நோய் தோன்றக் காரணமாயின. அவைகளே பின்னர், அந் நோய்



தணிக்கும் மருந்தாகவும் ஆயின. அத்தன்மை, திருஞானசம்பந்தப் பெருமான் மதுரையில் பாண்டிய மன்னனுக்கு முதலில் தீப்பிணியைப் 'பையவே செல்க' எனப் பணித்து வெப்பு நோய் உண்டாகச் செய்ததனையும், அவரே பின்னர் 'மந்திரமாவது நீறு' என்னும் திருநீற்றுப் பதிகம் பாடித் திருநீறு பூசி அவ்வெப்பு நோயைத் தணித்ததனையும் போன்று இருந்ததாம்.

''அருளாற் பரமர் புகலியிற்
பாலுண்ட ஐயர், தென்னற்கு
அருளாற் புகுத்திய நோய், அவரே
ஒழித்தாங்கு, இவர்எற்கு
அருளாற் புகுத்திய நோய்,இவரே
தெறல் அன்றி, மற்றோர்
அருளாற் புகல் மந்திரம்
ஆதியான் ஒழியாது அதுவே''

(2) தலைவன் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிகின்றான். ''சம்பந்தர்க்கு ஆயிரம் பொன் வழங்கியருளிய **திருவாவடுதுறைப்** பெருமானின் திருவருளால், செல்லுதற்கரிய பாலைநில வழியே சென்று, உங்கள் தலைவிக்குரிய முலைவிலைப் பொருளை யான் விரைவில் தேடிக் கொணர்வேன்'' என்று தோழியிடம் தலைவன் கூறிச் செல்கின்றான்.

''ஒருவா வளச்சண்பை ஓவார்
கவுணியர்க்கு ஓங்குபைம்பொன்
**திருவா வடுதுறை** யிற்கொடுத்தார்
தம் திருவருளால்,
மருவா அருஞ்சுரம் போய்வருவேன்;
உங்கள் மங்கைகொங்கைப்
பொருவா விலைகொண்டு மாதே
புகல்தி, அப் பூங்கொடிக்கே''.

(3) தலைமகன் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலை உணர்ந்த தலைமகள், ''தலைவர் பொருள்தேடி வருதல் குறித்துச் செல்ல இருக்கின்றார் போலும்! சீர்காழியில் **கவுணியர்** குலத்தில் தோன்றிய திருஞானசம்பந்தப் பெருமான், பாலை நிலத்தை நெய்தல் நிலமாக மாறும்படியும், திருமயிலையில் என்பை அழகிய பெண்ணாகும்படியும் அற்புதங்கள் நிகழ்த்தி அருளினார். தம்முடைய பிரிவாற்றாமையால் யான் உயிர் துறந்து இறந்து போயினால், மீளவும் என்னை உயிர்ப்பித்து எழுப்புவதற்கு, நம்முடைய தலைவர் அத்தகைய அற்புதச் செயல்களை நிகழ்த்துதற்குக் கற்றுக் கொண்டிருக்கின்றாரோ?'' என்று தோழியிடம் வினவுதல், சுவை மிக்குத் திகழ்கின்றது.

''சீரார் கவுணியர் போற்பாலை
நெய்தல் செயவும்,என்புஓர்
ஏரார் மயில் செயவும்,
கற்றுளார்கொல்? இறைபுகலித்
தாரார் புயத்தர், தமையும்
எமையும் தழூஉம்துயரம்
ஓரார், பொருள் குறித்தே
சுரம் போயினது ஒத்ததன்றே.''

(4) தலைமகள் முன்பனிப் பருவம் கண்டு வருந்துகின்றாள். தம்முள் இகல்கொண்டு போரிட முனைந்த அரசர்கள் இருவரை ஒற்றுமைப்படுத்தி வைத்து, போர் நிகழாமல் தடுத்து அமைதி ஏற்படுத்துதற்காகச் சென்ற தலைவன், தான் மீளுதற்குரிய கார்காலம் கடந்து கழிந்ததாயினும், இன்னும் வந்து சேர்ந்திலன். ஆனால் கொடுமை மிக்க முன் பனிப் பருவம் வந்து சேர்ந்தது. அது தலைவனைப் பிரிந்த தலைவியைப் பெரிதும் வருத்துகின்றது. அந்நிலையில் என் செய்வது என்று தலைமகள் கவலை கொள்கின்றாள். ''கொங்கு நாட்டில் திருக்கொடிமாடச் செங்குன்றூர் என்னும் தலத்திற்குச் சம்பந்தர் சென்றிருந்தபோது, அங்கே முன் பனிப்பருவ காலத்தின் கொடுமையான குளிர் மிகுதியால், கொடியதொரு நளிர் சுரம் எங்கும் பரவி மக்களை வருத்தியது. அப்போது சம்பந்தர் ''அவ்வினைக்கு இவ்வினையாம் என்று சொல்லும் அஃது அறிவீர்; உய்வினை நாடாதிருப்பதும் உந்தமக்கு ஊனம் அன்றே; கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாம் அடியோம்; செய்வினை வந்து எமைத் தீண்டப்பெறா திருநீலகண்டம்'' என்னும் திருப்பதிகம் பாடி, அக்கொடிய நோயை நீக்கியருளினார். ஆதலின், நாமும் அத்திருநீலகண்டத் தமிழ்த் திருப்பதிகத்தைப் பாடி, நம் வருத்தத்தைத் தணித்துக் கொள்வோம்'' என்று தலைவி ஒருவாறு ஆறுதல் அடைகின்றாள்.

''இருகா வலர்வெம் பகைதணிப்பான்
துணிந்து எய்தியநம்
ஒருகா வலர்வந் திலர்; வந்தது
முன்னுறு பனியே;
அருகா அலர் செறியும் பொழிற்
காழி அரன்அருள்பால்
பருகு ஆவலர் திருநீல
கண்டத்தமிழ் பாடுவமே''.

(5) தலைவன் தலைவியைப் பிரிந்து, பரத்தையின் இல்லத்திற்குச் செல்லப் புறப்படுகின்றான். அப்போது தலைவியின்பால் இருந்த சிறு புதல்வன் ஓடிச்சென்று, தேம்பித் தேம்பி அழுது தன் தந்தையை அழைத்தான். தன் மகன் தன்னை விடாமல் பொருமிப் பொருமி அழுதலைக் கண்ட தலைவன், அதனால் பரத்தையின் இல்லத்திற்குச் செல்ல முடியாமல் வீட்டிலேயே தங்கிவிட்டான். இந்நிகழ்ச்சியைத் தலைவி தன் தோழியிடம் சொல்லி, தன் குழந்தையைப் பாராட்டி மகிழ்கின்றாள். ''தோழியே! இன்று நம்முடைய இந்தச் சிறுவன் யாது செய்தான் தெரியுமா? தன் தந்தைக்கு இரக்கம் உண்டாகுமாறு பொருமிப் பொருமி அழுது, அப்பா அப்பா என்று அழைத்தான். அதனால் அவர் தாம் விரும்பிய அந்த இடத்திற்குச் செல்ல முடியாமல், இங்கேயே தங்கி இருந்துவிட்டார். இச் சிறுவனின் செயல், தன் தந்தையாகிய சீர்காழித் தோணியப்பரை அருள்மிகுமாறு பொருமிப் பொருமி அழுது அழைத்த ஞானசம்பந்தப் பெருமானின் செயலைப் போல இருந்தது'' என்கின்றாள் தலைவி.

''களிமிகும் மாமயிற் சாயல்நல்லாய்!
கடையேன் இதயத்து
அளிமிகு வாழ்வுடையோன் சண்பை
யூரில், தன் தந்தைதனை
அளிமிகு மாறு பொருமிப்
பொருமி அழுதழைத்தான்;
ஒளிமிகு ஞான சம்பந்தன் கொலோ?
என் ஒருமகனே''.

பிற நாயன்மார் குறிப்புகள் ;

(1) தலைவன் தலைவியை அடைதற் பொருட்டுப், பலகால் அவள் தங்கியிருக்கும் தினைப் புனத்திற்குச் சென்று வருகின்றான். அப்போது தலைவியின் தோழி, தலைவனுக்கு அருமை செய்து அயர்த்து, அவன்பால் சினங் கொண்டவள்போலச் சீறிப் பேசிப் பலவாறு அலைக்கழிக்கின்றாள். ஆயினும் அத்தோழியே பின்னர்த் தலைவனையும் தலைவியையும் சேர்த்து வைத்து, அவர்கள் முறைப்படி மணந்துகொள்ளுதற்குத் துணை புரிகின்றாள். அந்நிலையில் ''செறுஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும் உறுஅர்போன் றுற்றார் குறிப்பு'' என்று, திருக்குறள் கூறும் உண்மையை உணர்ந்துகொண்டு, தலைவன் மகிழ்கின்றான்.

''திருநாவுக்கரசர்க்குத் திருவதிகை வீரட்டானேச்சுரப் பெருமான் முதலில் தம் மறக் கருணையால் கொடிய சூலை நோயை உண்டாக்கினார்; அப்பெருமானே பின்னர் அதனை நீக்கித் தம் அறக்கருணையால் அவரைப் பெரிதும் ஆட்கொண்டு அருள் புரிந்தார். அதுபோலவே இந்தத் தோழி என்னைப் பலகால் வன்சொல்

கூறி வருத்தினளாயினும், இதுபோது என் பாற் பெரிதும் தண்ணளியுடையவளாய்ப் பெருநலம் புரிந்துள்ளாள்'' என்கின்ருன் தலைவன்.

''துருத்தி அவாம்சண்பை நாயகர்
அப்பர்க்குச் சூலைவெந்நோய்
பொருத்திய வாறு அவர்பால்
அருளாகிப் புகுந்ததுபோல்,
இருத்திய ஆர்வத்து இவர்
பலகால் வன்சொல் ஈந்து,நம்மை
வருத்திய வாறுநம் மாட்டு
அருள்ஆகி மலிந்ததுவே.''

(2) தலைவன், ஓர் அழகிய பூம்பொழிலில் தலைவியை முதற்கண் கண்டு தலைப்படுகின்ருன். அவள்பால் தன் காதலைப் பல வகைகளில் கூறி இணக்குவித்து, 'யான் நின்னைப் பிரியேன், பிரிந்தால் உயிர் தரியேன்' என்று சூளுரை புகல்கின்ருன். இதனை அகப்பொருள் இலக்கணத்தில் ''பிரியேன் என்றல்'' என்னும் துறையாகப் புலவர்கள் கூறுவர். இவ்வகப் பொருள் இலக்கணத்துறைக் கருத்து, நம் சீர்காழிக் கோவையில் பின்வருமாறு பாடப் பெற்றிருக்கின்றது. ''சீர்காழியைப் போல் விளங்கும் தலைவியே! முன்னெரு காலத்தில், திருவொற்றியூரில், மகிழமரத்தின் அடியில், சுந்தரமூர்த்தி சுவாமிகள் உன்னைப் பிரியேன் என்று சங்கிலி நாச்சியாருக்குச் சூளுரை செய்து கொடுத்துப் பின்னர் அச்சூளுரை தவறியதனுல் அடைந்த துன்பங்களை, யான் நன்ருக அறிவேன். ஆதலின் நான் சூளுரை தவறுவேன் என்று நீ கருதற்க. யான் நின்னை எஞ்ஞான்றும் பிரியமாட்டேன் என்று, நம் சீர்காழியில் உள்ள கண்கண்ட அருட்பெருந் தெய்வமாகிய சட்டைநாதர் முன்னே, யான் உனக்குச் சத்தியம் செய்து தருகின்றேன்'' என்கின்ருன் தலைவன்.

''வரியேன் மதர்விழிச் சங்கிலி
காண, மகிழ் அடியிற்
பிரியேன் என்ருேதிப் பிரிந்து, வன்
தொண்டர் முன் பெற்றதையான்
தெரியேன் அலேன்; வண் புகலியன்னீர்
நுமைத் தீர்ந்தும் உயிர்
தரியேன், பிரியேன் எனச்
சட்டைநாதர் முன் சாற்றுவனே''

(3) அகப்பொருள் நூல்களில், ''அறத்தொடு நிற்றல்'' என்னும் பகுதியில், பூத்தரு புணர்ச்சி, புனல்தருபுணர்ச்சி, களிறுதரு புணர்ச்சி எனப் பலதுறைகள் வரும். அவற்றுள் 'புனல்தரு புணர்ச்சி' என்பது ஒன்று. தலைவி தினைப்புனத்தின் அணிமையில், ஓர் அருவி அல்லது ஆற்றில் நீராடச் செல்கின்ருள். அங்கே அவள் வெள்ளத்தால் ஈர்க்கப்பெற்று உயிர் துறக்கும் நிலையில் தத்தளிக்கின்ருள். அதுபோது எதிர்பாராதவகையில் அங்குவந்த தலைமகன் அவளைக் காப்பாற்றுகின்ருன். தோழி அந்த நிகழ்ச்சியை எடுத்துக்கூறி, தலைவி அவனையே மணக்க விரும்புதலைத் தாய்க்குத் தெரிவிக்கின்ருள். சீர்காழிக் கோவையில் இத்துறைக்குரிய செய்யுள் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகத் திகழ்கின்றது.

''திருவிடைமருதூரில் ஏகநாயகன் எனப் பெயர் பெற்று விளங்கும் சீர்காழிப் பெருமானின், சோழவள நாட்டுக்குரிய காவிரியாற்றின் ஒரு துறையில், தலைவி நீராடுவதற்காக இறங்கினுள். வெள்ளத்தின் வேகம் அவளை ஒரு சுழியில் இழுத்துச் சென்றது. அவள் அச்சுழித் தலைப்பட்டு அழுந்தி மயங்கி மிதந்தாள். திருக்கயிலையில் ஒரு பொய்கையில் மூழ்கிய திருநாவுக்கரசர், திருவையாற்றுக் குளத்தில் எழுந்தமைபோல, ஒரு துறையில் மூழ்கிய தலைவி, இத்தலைவராற் காவிரியின் மற்ருெரு துறையின் கரையில் காப்பாற்றி விடுக்கப்பெற்ருள். அதனுல் தன்னுயிரைக் காப்பாற்றிய தலைவனையே தலைவி மணக்க விரும்புகின்ருள்'' என்பது, தாய்க்குத் தோழியின் கூற்று.

''மருதுறை ஏகன் புகலிப்பிரான்
வள நாட்டு நதி
ஒருதுறை மூழ்க உள்நீர் ஈர்த்தலால்,
மற்ருெரு துறைபோய்க்
கருதுறை நாவுக்கரசு எனத்
தோன்றும் அக்காலையின், ஓர்
விருதுறை வேலவனுற் கரை
ஏறினள் மெய்ம்மை இதே''

(4) அகப்பொருள் இலக்கணத்தில் ''நாண் அழிபு இரங்கல்'' என்பது ஒருதுறை. தலைவனுடன் உடன்போக்குச் செல்ல நேரும் தலைவி, தான் தன்னுடைய நாணத்தை இழந்து, பிறர் பழிக்கும்படியாகக் களவு நிலையில் தலைவனுடன் செல்ல நேர்ந்தமை குறித்துக் கவல்கின்ருள். ''உயிரினும் சிறந்த நாணத்தைக் கைவிடுதலும் ஒரு பெண்ணிற்கு அடுக்குமோ? நாணத்தைக் கைவிட நேரும் பெண் பிறப்பைக் காட்டிலும், பேய்ப் பிறப்பே மேலாகும். அதனுலன்ருே, காரைக்கால் அம்மையார் தம் பெண் பிறப்பை ஒழித்து, இறைவன்பால் வானமும் மண்ணுமெலாம் வணங்கும் பேய்ப் பிறப்பை வேண்டிப் பெற்ருர்'' என்று தலைவி குறிப்பிடுகின்ருள்.

''எண் பிறப்பைத் தவிர்த்தார்
காழி நாதர் இமயத்தினுல்
நண் பிறப்பைத் தரலால்
நம் பிறப்பு நகுபிறப்பே;
ஒண் பிறப்பைத் தரு வண்
காரைககாலம்மை ஓர்ந்தலவோ?
பெண் பிறப்பைத் தவிர்த்துற்ருள்
ஒருகரும் பேய்ப் பிறப்பே''

(4) சைவசித்தாந்தம் :

(1) பெருங்கவிஞர் மீனட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் சைவசித்தாந்தத் தனிப் பெரும் ஞானநிலையமாகிய திருவாவடுதுறை ஆதீனப் புலவராக விளங்கியிருந்தவர். சைவ சித்தாந்தச் சான்ருேர்களாகிய **சிவஞான முனிவர், கச்சியப்பமுனிவர்** போன்ற, பற்பல பெருமக்களின் நூல்களையெல்லாம் ஆய்ந்து தோய்ந்து, தம் வாழ்நாள் முழுவதும் திளைத்த வர். ஆதலின் அவர்தம் பாடல்கள் அனைத்தி லும் சைவசித்தாந்தத் தமிழ்மணம் யாண்டும் கமழ்ந்து நிற்கக் காண்கின்ருேம். சிவவழிபாடு மந்திரம் கிரியை பாவனை என்னும் மூன்ற னுலும் நிகழ்தற்குரியது. **மந்திரம் கிரியை பாவனை** என்னும் மூன்றும் இன்றிச் சிவ வழி பாடு நிகழ்தல் இல்லை. சமய தத்துவ நூல்கள் இம் மூன்றனையும் விரித்துரைத்து விளக்கு கின்றன. ''சிவவழிபாடு செய்பவர்களுக்கு மந்திரம் கிரியை பாவனை என்னும் மூன்றும் போல, **நாணம் அச்சம் மடம்** என்னும் மூன் றும் குலமகளிர்க்கு இன்றியமையாதன'' என்று, சீர்காழிக் கோவையில் 'கற்புமேம் பாடு தோழி கூறல்' என்னும் அகப்பொருள் துறை, அறிவுறுத்துகின்றது.

''பூவனையாய் நினக்கு ஓதுவது
என்னை? புகலியில்நம்
தேவனை யேஅருச் சிப்பார்க்கு
மாமந்திரம் கிரியை
**பாவனை**; நாணம் மடம்அச்சம்காண்
குலப் பாவையர்க்கு;
மேவுஅனை யார்க்குஅன்பு; தேர்
இனையார்க்கு விரும்புகற்பே''

(2) இவ்வாறே ஆன்மீக அருள்வாழ்க்கை யில் ஞானசிரியனல் மாணவனுக்குச் செய்யப் பெறும் சமயதீக்கை, **விசேடதீக்கை, நிர்வாண** தீக்கை, என்னும் மூன்றனையும் பற்றிக்கூட, நம்முடைய பெருங்கவிஞர்பிரான் சொற் பொருட்சுவைநலம் பொதுளத் 'தலைவன் தலைவியைப் புகழ்தல்' என்னும் துறையில் அமைத்துப் பாடி மகிழ்விக்கின்ருர். எளிய கருத்தை விளக்க அரிய பெரிய கலைக்குறியீட்டுச் சொற்களை வழங்கியுள்ள ஆசிரியரின் நுண் மாண் நுழைபுலம், பெரிதும் வியந்து போற்று தற்குரியதாகும்.

''சமைய விசேட நிருவாணம்
என்றுநம் சண்பைப் பிரான்
அமைய உரைத்தது உணர்ந்தாய்கொல்?
நீ தனி ஆகுவதே
சமையம்; நின் அங்கை தொடலே
விசேடம்; தரித்தகலை
அமைய நெகிழ்த் திடலே
நிருவாணம்; மெய்இதுவே''

இன்னேரனைய தத்துவநுட்பக் கருத்துக்கள் அமைந்த செய்யுட்கள் பலப்பல, சீர்காழிக் கோவையில் உள்ளன. அவையனைத்தும் தனித் தனியே நுண்ணிதின் அறிந்து வியந்து இன்புறு தற்கு ஏற்றனவாகும்.

கருத்துக்கள் உதிப்பும், வடிப்பும்:

ஒருவரின் உள்ளத்திற் புதிய புதிய கருத் துக்கள், கற்பனைகள் உதிப்பதும், அவற்றை அவர் வெவ்வேறு வகையான கவிதை—கட் டுரை—நூல்—வடிவங்களில் திறம்பட அமைப்ப தும், ஒரு சிலர் நினைப்பது போல எளிதான செயல் அன்று. மிகவும் கடினமான-இடர்ப் பாடான செயல்களுள் ஒன்று அது.

''பெற்றவட்கே தெரியும் அந்த வருத்தம்,
பிள்ளை பெறுப் பேதை அறிவாளோ?''

எனத் தாயுமான அடிகளார் பாடுவதுபோல, அதன் அருமைப்பாட்டினை, பிறர் சிறிதும் அறிதல் இயலாது. பிற பருப்பொருள்களை நாம் கருவிகளின் துணைகொண்டு செய்து உரு வாக்குதல் போல, நாம் நம் முயற்சியினுல் அரிய இனிய சிறந்த கருத்துக்களை உருவாக்கு தல் இயலாது. ("A man cannot say 'I will compose poetry'. Even the greatest poet cannot say it". —W. B. YEATS) கருத்துக்கள் தாமாகவே நம் உள்ளத்தில் இறையருளால் உதித்து உருப்பெறுதல் வேண் டும். மேலைநாட்டு அறிஞர்கள் பலர் தத்தம் நூல்களில், தாம் கட்டுரையோ கவிதையோ எழுதத் தலைப்பட்டு அடைந்த பல இன்னல் களையும் அநுபவங்களையும் அடைந்தவாறே பிற்கால மக்களுக்குப் பயன்படும் பொருட்டுக் கிளந்து கூறி மொழிந்திருக்கின்றனர்.

**ஏ.ஜி. கார்டினர்** என்னும் புகழோங்கிய ஆங்கில எழுத்தாளர், தாம் எழுதிய **''கடற் கரையிற் கூழாங்கற்கள்''** என்னும் நூலின் கட்டுரை ஒன்றில், ''எழுதுவது என்பது மட் டுமே கடினம் அன்று! அதற்குரிய பொருளை யோ—தலைப்பையோ தேர்ந்தெடுப்பதும்கூட, மிகவும் கடினமான ஒரு செயல்! ஏதேனும் எழுத விரும்பி முயலும் போதெல்லாம்,

அதற்குரிய பொருளோ கருத்தோ ஒன்றும் தோன்றுமையால், கைந்நகங்களைத் திருத்துவதும், எழுதுகோல்களைக் கூர்மையாக்குவதுமாகவே பெரும்பாலும் காலங் கழிகின்றது. இவற்றால் மேலும் மேலும் திகைப்பு உண்டாகின்றதேயன்றிக் கருத்தொன்றும் உதித்திலது'' எனக் குறிப்பிடுகின்றார். (1)

**கஸ்டாவ் ஃபிளாபர்ட்** என்னும் பிரசித்தி பெற்ற ஃபிரெஞ்சு நூலாசிரியர், ''ஏதேனும் ஒரு சிறுசொல் தடைப்பட்டுவிட்டால், அதனைக் கண்டுபிடிப்பதற்காகக் கைகளில் தலையை வைத்துக்கொண்டு, வறண்டுபோன நற்பேறற்ற மூளையினின்று அச்சொல்லை வலிந்து கசக்கிப் பிசைந்து முயன்று வருவித்தற் பொருட்டு, ஒரு நாள் முழுவதும் உட்கார்ந்திருக்க நேரும் துன்பம் எத்தகையதென்று நீ அறிய மாட்டாய்! கலைத்துறையிற் கடினமான உழைப்பு இன்றியமையாததாக இருக்கின்றது. ஆ! உண்மையிலேயே எழுதுதலால் நேரும் வேதனைகளை யான் நன்குணர்கின்றேன்'' எனத் தம் நெருங்கிய நண்பர் ஆகிய ஜார்ஜ் சேண்ட் என்பவருக்குத் தெரிவிக்கின்றார். (2)

**ஏ.இ. அவுஸ்மன்** என்னும் ஆங்கிலக் கவிஞர் ஒருவர், பின்வருமாறு தம்முடைய அனுபவம் ஒன்றை, எழுதுகின்றார்: ''யான் ஒரு சமயம் ஒருகவிதை எழுத நினைத்துத் தொடங்கினேன். முதல் இரண்டு செய்யுட்களை (Stanzas) ஒருவாறு எழுதி முடித்தேன். மூன்றாவது செய்யுள் ஒன்றை எழுத முயன்றேன். அஃது எளிதில் வருவதாக இல்லை. சிறிது ஓய்வு எடுத்துக்கொண்டு, தேநீர் அருந்திய பின்னர்ச் சிறிது இடர்ப்பட்டு அம்மூன்றும் செய்யுளை எழுதி முடித்தேன். கவிதை முடிவதற்கு நான்காவது ஒரு செய்யுளும் தேவைப்பட்டது. அதனை எழுத எவ்வளவோ முயன்று பார்த்தேன். அஃது அறவே வர மறுத்துவிட்டது. எங்ஙனமேனும் எழுதியே தீர வேண்டியிருந்தமையால், அது மிகவும் தொல்லையான வேலையாகவே இருந்தது. அதனை யான் 13 முறைகள் திருத்தித் திருத்தித் திரும்பத் திரும்ப எழுதிப் பார்த்தேன். அப்போதும் அது செவ்விதாக அமையவே இல்லை. பின்னர்ப் பன்னிரண்டு மாதங்கள் வரை காத்திருந்து, மிகவும் முயன்றே அதனை முடிக்க வேண்டி நேர்ந்தது. அதற்குப் பின்னர்தான் அஃது ஓரளவு திருத்தமாக அமைவதாயிற்று'' (3)

இவ்வாறே மிகவும் புகழ் பெற்றவரும், உலகப்பெருங்கவிஞர்களுள் ஒருவராக மதிக்கப் பெறுபவரும் ஆகிய **வில்லியம் வோர்ட்ஸ்வொர்த்** என்பவர் (1770-1850), 'குயிலுக்கு' (To the cuckoo) என்னும் தலைப்பில் தாம் எழுத முற்பட்ட கவிதையில், அக்குயிலின் குரல்பற்றிக் கொடுக்கத்தக்க பொருத்தமான அடைமொழி (Epithet) ஒன்றனைக் காண மாட்டாமல், எத்தனையோ சொற்களை மாற்றி மாற்றித் திருத்தி அமைத்துப் பார்த்தும், அவைகளுள் ஒன்றேனும் செவ்வியதாக அமையாமையால் மன நிறைவு கொள்ளாதவராய்ப் பல ஆண்டுகள் வருந்தி முயன்று வந்தார். கடைசியாக 43 ஆண்டுகள் கழித்துத் திடீரென ஒருநாள் 'அலைந்து திரியுங்குரல்' (Wandering voice) என்னும் அடைமொழித் தொடர், அவர் உள்ளத்தில் உதித்தது. அதனையே அக்கவிதையில் அவர் பின்னர்த் திருத்தி யமைத்துப் பதிப்பித்தார் என, அவர்தம் சகோதரியார் ஆகிய டொரத்தி வோர்ட்ஸ்வொர்த் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். (4)

கருத்துக்களை நினைத்தலும் அவற்றைத் தொகுத்துத் திருத்தமாக வெளியிடுதலும் மிகவும் கடினமான உழைப்புமிக்க ஓர் அரும் பெரும் முயற்சியாகும். ''ஒருவரி இயற்கைப் புனைவுரை எழுத அவர் நூறு (100) கல் தொலைவு பயணம் புரிந்தார். ஒரு சிறு சொற்றொடர் எழுதக்குறைந்தது இருபது (20) நூல்களையாவது ஆராய்ந்தார்'' என்று மெக்காலே என்னும் பேரறிஞரைக் குறித்து, தாக்கரே என்னும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். (5)

---

(1) "Now if you are accustomed to writing articles for a living, you will know that sometimes the difficulty is not writing the article, but choosing a subject . . . I had pared my nails several times with absent-minded industry, and sharpened every pencil I had on me with elaborate care. But the more I pared my nails and the more I sharpened my pencil the more perplexed I grew as to the theme for an article . . ."

—A. G. GARDINER,
On writing an Article in "*Pebbles on the Shore.*"

"You beat your pate, and fancy wit will come;
Knock as you please, there's nobody at home."

—ALEXANDER POPE.

(2) "You don't know what it is to stay a whole day with your head in your hands trying to squeeze your unfortunate brain so as to find a word . . Hard labour at art is necessary. Ah ! I certainly know the agonies of writing."

—GUSTAVE FLAUBERT to GEORGE SAND

(3) "A third stanza came with a little coaxing after tea. One more was needed, but it did not come. I had to turn to and compose it myself, and that was a laborious business. I wrote it thirteen times, and it was more than twelve months before I got it right."

—A. E. HOUSMAN.

(4) "Dorothy Wordsworth records in her 'Journal' that her brother—William had tried to seek an epithet for the Cuckoo and only after 43 years found himself able to express the sound of the Cuckoo's 'Wandering Voice."

—I. L. LOWES,
Convention and Revolt in Poetry, p.6.

(5) "To write a line of description, he travelled hundred miles ; to write a single sentence he consulted at least twenty books."

—W. M. THACKERA
On Lord Macaulay, in 'Nil Nisi Bonum.'

இராபர்ட் லூயி ஸ்டீவன்சன், என்னும் பெரும் புகழ்மிக்க புதின ஆசிரியர், ஒருமுறை ஒருநாள் இரண்டு மணிநேரம் முயன்று ஒரு சிறு சொற்றொடர் மட்டுமே எழுதினார். மறுநாள் அதனைப் படித்துப் பார்த்து, குப்பைக் கூடையில் கிழித்தெறிந்துவிட்டார். (6)

தாமஸ் கிரே என்பவர், 'சிற்றூர்க் கோயிலின் முன்றிலில் எழுதிய இரங்கற் கவிதை' என்பதனை எழுதிமுடிக்க எட்டு ஆண்டுகள் ஆயின. (கி.பி. 1732-1740).

ஆல்ஃபிரெட் டென்னிசன் என்னும் கவிஞர், தமது நண்பராகிய ஆர்தர்ஹாலம் என்பவரின் மறைவு குறித்து ''நினைவின் பொருட்டு'' என்னும் கையறு நிலைச் செய்யுளை இயற்றப் பதினேழு ஆண்டுகள் கழிந்தன.(7) இங்ஙனமே ''உயிர்வகைகளின் தோற்றம்'' என்னும் நூலை எழுதச் சார்லஸ் டார்வின் என்பவர் பதினேழு ஆண்டுகள் அரிதின் உழைக்க வேண்டியிருந்தது.

''மூலதனம்'' என்னும் நூலை எழுதக் கார்ல்மார்க்ஸ் பதினெட்டு ஆண்டுகள் செலவிட்டார். நத்தானியேல் ஹாத்தார்ன் என்னும் ஆசிரியருக்குச் 'செவ்வண்ணக் கடிதம்' (Scarlet Letter) என்னும் புதினம் எழுத இருபது ஆண்டுகள் தேவைப்பட்டன. தாம் கேட்ட ஒரு சுவையான நிகழ்ச்சி ஒன்றைப் பற்றிய கதையினை எழுதச் சாமர்செட்மாம் என்பவர்க்கு, நாற்பது ஆண்டுகளுக்குப் பின்னரே முடிந்தது. (8)

ஓவியன் ஒருவன் எங்ஙனம் ஓர் உருவத்தைப் பலகால் அழித்தழித்துத் திரும்பத் திரும்ப வரைந்து வண்ணந்தீட்டி உருவாக்குகின்றானோ, அங்ஙனமே ஓர் எழுத்தாளன் அல்லது கவிஞன் தனது உணர்வுக்கோல் கொண்டு ஒரு கருத்தை வெளியிடுவதற்குப், பலமுறை திரும்பத் திரும்ப முயன்று சிந்தித்து இடர்ப்பட்டு உழைத்துச் செப்பனிட வேண்டியுள்ளது. உலகப் புகழ் வாய்ந்த எர்னஸ்ட் எமிங்க்வே என்னும் பெரு நூலாசிரியர் ''படைகளுக்கு விடையளிப்பு'' (Farewell to Arms) என்னும் தமது நூலொன்றின் இறுதிப் பக்கத்தினை முப்பத்தொன்பது (39) முறை மாற்றி மாற்றி, அழித்தழித்து, திருத்தித் திருத்தி எழுதியதாகக் குறிப்பிடுகின்றார்.(9)

(6) "Robert Louis Stevenson, it has been said, once spent two hours in writing only one sentence and next day, after reading it, threw it into the waste paper basket. If that was true with a writer like Robert Louis Stevenson, what would it be to an ordinary mortal."

(7) "Seventeen years elapsed between the death of Arthur Hallum and the publication of Tennyson's exquisite elegy, **In Memoriam.**"

—W. J. DAWSON,
The Makers of Modern English.

(8) "This ancedote gave me the idea for a story which I wrote only 40 years later."

—SOMERSET MAUGHAM,
A Writer's Note-book.

முடிவுரை :

இன்னோரனைய மேலை நாட்டுப் பேரறிஞர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் அனுபவங்களையும்பற்றி, நாம் இனிதறிந்து உணர்ந்து கொண்டு கருதுவோமாயின், பெருங்கவிஞர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் அரும்பெறல் மாட்சிமைகளையெல்லாம், நாம் செவ்விதில் தெளிந்து உணர்ந்து கொண்டு, மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்து வியந்து நிற்போம் என்பது திண்ணம்.

நம்முடைய கவிஞர்பெருமான் அவர்கள் பாடிய நூல்கள் பற்பல. அவைகள் பலவகைகளாகவும், பல அமைப்புடையனவாகவும் விளங்குகின்றன.

| | |
|---|---|
| உலா | — 1 |
| தூது | — 1 |
| கலம்பகங்கள் | — 2 |
| பதிகங்கள் | — 3 |
| கோவைகள் | — 3 |
| யமக அந்தாதிகள் | — 3 |
| திரிபு அந்தாதிகள் | — 5 |
| மாலைகள் | — 6 |
| பிள்ளைத்தமிழ்கள் | — 9 |
| தலபுராணங்கள் | —16 |

ஆகிய பற்பல நூல்களை நம் கவிஞர் பெருந்தகை அவர்கள் இயற்றியிருக்கின்றார்கள். இவைகளில் அடங்காமல் விடுபட்டுப்போன மற்றும் எத்துணையோ பலப் பல பாடல்களும், சிறுசிறு நூல்களும் வேறே இருக்கின்றன.

கலைப்படைப்பு என்பது உழைப்பு மிகுதியும், களைப்படைவும், இடர்ப்பாடும் இன்றி யாண்டும் நிகழ்தல் இல்லை. இத்துணை நூல்களையும் இயற்றியக்கால், அவர்கள் எத்துணை இடர்ப்பாடும் துன்பங்களும் அடைந்திருப்பார்கள்? எவ்வளவு முயற்சியும் உழைப்பும் மேற்கொண்டிருப்பார்கள்? என்று கருதியுணர்ந்தால், பிள்ளை அவர்களின் கடலனைய பெருமையை நாம் ஒரு சிறிதேனும் உணரப் பெறலாம்!

இத்தகைய சிறந்த வித்தகக் கவிஞர் குரிசில் ஆகிய நம்முடைய மாட்சிமைமிக்க பெருங்கவிஞர் **மீனாட்சிசுந்தரம் பிள்ளை** அவர்களின் அருமை பெருமைகளை உணர்ந்து, நாம் அப் பெருந்தகையாரின் நினைவுநாளைச் சிறப்புற ஆண்டுதோறும் தமிழகம் எங்கணும் உள்ள சிவதலங்களிலெல்லாம் நன்கினிது கொண்டாடி, அவர் தம் அரிய இனிய நூல்களைப் பயின்று பாராட்டிப் போற்றி, நலம் பெற முற்படுவோமாக!

—ஆசிரியர்.

(9) "I rewrote the ending to **Farewell to Arms,** the last page of it thirty-nine times before I was satisfied."

—ERNEST HEMINGWAY,
Writers At Work, p. 178.




திருநாவுக்கரசருக்குத் திருநல்லூர்ப் பெருமான் திருவடி மலர் சூட்டுதல்

வரைந்தவர் : திரு. என். சதாசிவஸ்தபதி, கும்பகோணம்

# தச காரியம்

'சித்தாந்தக் கலைச் செல்வர்'
திரு க. வச்சிரவேல் முதலியார், B.A.. L.T.
திருவாவடுதுறை ஆதீனப் புலவர், காஞ்சிபுரம்.

முன்னுரை :

சிவநெறியில் கூறப்படும் நடைமுறைகள் வெறுங் கற்பனை முறைகளாகாமல் உண்மையில் பயன் விளைக்கத் தக்கவை. இது பல காரணங்களால் துணியப்படும். அக் காரணங்களுள் இரண்டு முக்கியமானவை. ஒன்று அதனுட் கூறப்படும் ஞான நெறியும், சாதன முறைகளும் முன்னொடு பின் முரணாது அமைந்திருத்தல். இச்சிறப்பைத் தாயுமான அடிகளே **ஆ**ராய்ந்து கண்டு பகர்கின்றார்.

''சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு
சமயசங்கே தப்பொருளும் தாமொன்றாகப்
பன்மார்க்க நெறியினிலும் கண்ட தில்லை;
பகர்வரிய தில்லைமன்றுள் பார்த்த போதங்
(கு)
என்மார்க்கம் இருக்குதெல்லாம் வெளியே என்ன
எச்சமயத் தவர்களும்வந் திறைஞ்சா நிற்பர்''

என்கிறார் தாயுமானவர். சன்மார்க்க ஞானம் -நன்னெறியாகிய ஞானம் (Philosophy of Religion); சமய சங்கேதப் பொருள்-நடைமுறையில் தாம் கொண்ட ஏற்பாட்டின்படி மேற்கொள்ளும் குறிகளும் அடையாளமும் நெறிகளும் (Conventional Symbols and Rites) மற்றொரு காரணம். அச்சாதனங்கள் படிமுறையில் அமைந்து யாவரும் முடிநிலைப் பேற்றை எய்துவதற்கு ஏற்புடையனவாக இருத்தல்.

''கிரியையென மருவுமவை யாவும் ஞானம்
கிடைத்தற்கு நிமித்தமெனக் கிளக்கும்''

என்னும் சிவப்பிரகாசச் செய்யுளும்,

''விரும்பும் சரியைமுதல்
மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்பு மலர் காய்கனிபோல்
அன்றோ பராபரமே.''

என்னும் தாயுமானவர் வாய்மொழியும், இதனை வலியுறுத்தும்.

மெய்யுணர்வு எய்துதற்கண் நிகழும் உணர்வு மாற்றங்களைப் பத்து வகையில் வைத்துக் கூறும் முறை ''தசகாரியம்'' எனப்படும். அது மேற்கூறிய இரண்டு சிறப்பியல்புகளையும், ஒருங்கே பெற்றுள்ளது. அது பற்றி விளக்குவது இக்கட்டுரையின் நோக்கம்.

பொருள்களை அறியும் முறை :

உயிர்களின் உணர்வு, பொருள்களை முன்னர்ப் பொதுவாகப் (பருவட்டாகக்) கண்டு, பின் அவற்றைச் சிறப்பாக நுணுகி உணர்ந்து, அவற்றின் பொருண்மையைப் பற்றும். இதனை நூல் உணர்ந்தோர் கண்டதைக் கொண்டு காணாததிற் செல்வது (From the known to the unknown) என்றும், படிமுறையால் அறிவு நுணுகி வருதல் என்றும் வகுப்பர். திருவள்ளுவர் அறிவின் இவ்வியல்பை ''அறிதோறு அறியாமை கண்டற்றால்'' என உவமையாக வைத்துக் கூறுகிறார். இத்தொடரின்பொருளைப் பரிமேலழகர் பின்வருமாறு விவரிக்கிறார். ''நூல்களாலும் நுண்ணுணர்வாலும் பொருள்களை அறிய அறிய முன்னை அறியாமை கண்டாற் போல'' ; ''அறிவிற் கெல்லையின்மை யான் மேன்மேல் அறிய அறிய முன்னையறிவு அறியாமையாய் முடியுமாறு போல'' என்பன பரிமேலழகர் தரும் விளக்கம்.

மூவகை ஞானம் :

இனி, மெய்யுணர்ந்து வீடுபேறு எய்துவதே பிறவிப் பயன் என்பது, தலையாய அறிவுடையார் எல்லார்க்கும் ஒத்த துணிபு. மெய் உணர்தல் என்பது கடவுள் எனக் கூறப்படும் மெய்ப் பொருளை, ஒருவன் தன் உணர்வின் கண் விளங்கக் காண்பதே ஆம். அங்ஙனம் காணலுறும் நெறியின்கண் மூன்றுபடி நிலைகள் சித்தாந்த சைவத்துள் விளக்கப்படுகின்றன. அந் நிலைகளில் உயிரின்கண் விளங்கும் உணர்வு விளக்கங்களை முறையே பாச ஞானம், பசு ஞானம், பதிஞானம் எனப் பெயரிட்டு வழங்குவர்.

பிறப்பு நிலையில் உள்ள உயிர், உடம்பையும் உலகையும் பற்றி நின்று உலகப் பொருள்களைத் தனித் தனிச் சுட்டியறிந்து வரும் உணர்வு, பாசஞானம் எனப்படும். தம் அறிவைக் கட்டுப்படுத்தும் பாசமாகிய தத்துவ தாத்துவிகங்களால் விளங்கித் தனக்குவேறான பொருள்களைப் பற்றி நிகழும் ஞானம் பாச ஞானம். மெய்ப் பொருளைத் தலைப்பட்டு

உணர விரும்புவோன், முதற்கண் தன்னைப் பற்றி ''நான் ஆர்?'' என உள்நோக்கி உணர்தல் வேண்டும். அவ்வாறு உணரும்போது, தன்னைத் தூல உடம்பு, சூக்கும உடம்பு முதலியவற்றின் வேருக, ''இது நான் அல்லேன், இது நான் அல்லேன்'' எனக் கழித்துச் செல்லும் ஆராய்ச்சி உணர்வு நிகழும். அங்ஙனம் கழித்து மேம்படும் உணர்வு, தத்துவக் கட்டுப்பாட்டின் நீங்கி வியாபகமாய் விளங்கும். அந்நிலையில் அவ்வான்மாத் தான் ஒன்று மட்டும் மெய்ப்பொருள்; முன்கண்டு வந்த பொருள் அனைத்தும், கனவிற்கண்ட பொருள் விழிப்பு நிலையில் மறைவது போல, மறைந்தொழிவன என உணரும். இது ''நான்முதல்'', ''அகம் பிரமாஸ்மி'' என நிற்பது; இந்த அனுபவ உணர்வே முடிந்த மெய்யுணர்வு எனக் கொள்வோரும் உளர். அவர், இதற்கு ஏற்றபடி மெய்ந் நூல்களில் வரும் அநுபவ உரைகளுக்கு விளக்கம் கூறி, மதம் அமைப்பர். ஆனல், சைவ சித்தாந்த நெறிப்படி, இது தலைநகரில் உள்ள அரச மாளிகையில் செல்ல விரும்புவோன், தலைநகரைச் சூழ்ந்துள்ள புறநகரை அடைந்தாற் போன்றது.

நானே முதற் பொருள் (அகம் பிரமாஸ்மி) என்னும் உணர்வு நிலையில் நின்ற மாணுக்கனைச் சைவ ஆசிரியர் பின்வருமாறு வினவி முதல்வனது அருள் உண்மையை நினைப்பிக்கின்ருர்:-

''அன்றுமுதல் இன்றளவும் அண்ணல்
அறிவிப்பதன்றி,
இன்(று) அறிவேன் நான்என்(று) இயம்புவ
தென்?—என்றும்
அவத்தை தனில் உணர்த்தி ஆங்(கு)
அருத்திஇன்(று)இத்
தவத்தின் உணர்த்தினர் ஆர் தான்?'' (1)

''உன்அறிவை நீயே உணர்வையே ஆமாகில்
இந்நெடுநாள் பாசத்(து)இயை யாயே—
உன்அறிவை
நீங்கா அறிவாகி நீரும் இரதமும்போல்
ஆம்காண் அரனர் அருள்.'' (2)

முதல்வன் அருள் இதுகாறும் மறைந்து நின்று உணர்த்தி வந்தது. இப்பொழுதும் தவங் காரணமாகச் சற்குரவனுக நின்று உணர்த்தியதால் தான் நீ உன்னை உணர்ந்தாய்; நீ என்றும் முதல் ஆகாய்.

இங்ஙனம் ஞானுசிரியன் உணர்த்த, விளக்கொளி உள்ளபோதே தன் உண்மை உணரப்படும் கண்ணொளி போல, தனக்குச் சார்பாகவுள்ள திருவருளால் தன் வியாபக நிலை உணரப்பட்டது எனக்கொண்டு, திருவருள் உண்மையை உணர்வான் மாணவன். ஆயினும், அந் நிலையில் தனக்கு எல்லாச் செயலும் செய்தல் கூடும் என உணர்வான். இது முதல்வனேடு தன்னைச் சமம் எனக் கருதும் உணர்வு. ஆதலால் இது சிவ சம உணர்வு எனப்படும். இவ்வுணர்வும் மெய்யுணர்வாவதில்லை. பழுக்கக் காய்ச்சிய இரும்பு, சுடும்போது, சுடுதல் தீயின் செயலேயன்றி இரும்பின் செயல் அன்று. அதுபோல, பாசத்தின் நீங்கிய ஆன்மாவிற்குக் கைகூடும் செயல்கள் முதல்வன் செயல்களேயன்றி உயிரின் செயல்கள் அல்ல. இவ்வாறு இவ்வுணர்வு நிகழும்போது, ஆன்மாத் தன் செயலாவது ஒன்றும் இன்று என, நீர்வழிப் பட்ட புணைபோல, முதல்வன் திருவருளில் அடங்கி அதன் வயப்பட்டு நிற்கும்.

மேலே கூறிய உணர்வு நிலைகளில் 'நான் முதல்' எனும் நிலையில், யான் என்னும் செருக்கும், முதல்வன் செயலோடு ஒத்த செயல் எனக்கு உண்டு என உணரும் நிலையில் எனது என்னும் செருக்கும் இருத்தலின், இவ்விரு வகை உணர்வும் பசுஞானம் எனப்படும். ''நான் ஆர்?'' எனப் பொருள்களைச் சுட்டித் தனக்கு வேருகக் கழித்துச் சென்ற அறிவு, அவ்வாறு பாசப்பற்று அறினும், முன் பயின்று வந்த பயிற்சி காரணமாக யான், எனது என்னும் செருக்காகிய பசுத்துவ வாசனை நீங்காமை பற்றி, நான் முதல் எனவும், எல்லாஞ் செயல் எனக்கே கைகூடும் எனவும், மேற் கூறிய உணர்வு நிலைகள் உண்டாதலின், அவை பசுஞானம் எனப்பட்டன. பசுத்தன்மை முற்றும் நீங்கா நிலையில் விளங்கும் ஞானம் பசுஞானம். மேற்கூறியதிலிருந்து, பசுஞானம் ஒருவனுக்கு உளதாகும்போது, பாசஞானம் அறியாமையாய் முடிதல் விளங்கும். இப் பசுஞானமும் அவ்வாறு நீங்குவதே ஆகும்.

திருவருளின் உண்மையினையும் அதுவே தனக்குச் சார்பாய் நின்று தன் அறிவிச்சை செயல்களை விளக்கிச் செலுத்தும் முதலாதலையும் உண்மையான் உணரும் உணர்வே, பதி ஞானம் அல்லது சிவ ஞானம் எனப்படும். தலைவனின் அருளைச் சார்தல்பற்றி விளங்கும் ஞானம் பதி ஞானம். இதுவே ''பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்., உணர்வரிய மெய்ஞ் ஞானம்'' எனச் சேக்கிழார் அடிகளால் குறிப்பிடப் பெற்றது. இங்கு முதல்வன் திருவருள் ஆன்ம உணர்வின் கண், அளப்பரிய ஆகாயத்தை விளக்கி எழும் ஞாயிறே போன்று பேரொளியாய் எழுவது. அதனை ஒளியாய் மட்டும் உணர்ந்து நில்லாமல், அதில் தன்முனைப்புச் சிறிதுமின்றி அடங்கி நிற்பார்க்கு அவ்வருளுக்கு முதலாகவுள்ள பரசிவம், இறவாத இன்ப அன்பாய் வெளிப்பட்டு ஆன்மாவைத் தன்னுள் அடங்கக் கொண்டு தானே ஆகி நிற்கும். அன்பே இன்பாய் அமரும் இந்நிலையே, ''யான் ஆகிய என்னை

விழுங்கி வெறுந்—தானாய் நிலை நின்றது தற்பரமே'', ''அறிவொன்றறநின்(று) அறிவார் அறிவில்—பிறிவொன் றறநின்ற பிரான் அலேயோ'' என்றாற்போல, வழி மொழியப்படும் பேசா அனுபூதி நிலை. இச் சிவஞானம் ஒருவன் உணர்வில் விளங்கும்போது முன் விளங்கிய பசு ஞானம் அறியாமையாய்க் கழியும். இங்ஙனம் அவனருளே கண்ணாகக் கண்டு, அவனருளால் அவன்தாள் வணங்கி, இருள் கடிந்து, உள்ளத்து எழுகின்ற ஞாயிறே போன்று நின்ற முதல்வன் தன்மையை நினைப்பற நினைந்து இன்புறும் உணர்வு நிலையாகிய சிவஞானம், முடிந்த உணர்வு நிலை ஆகும்; இதனைக் கழிப்பிக்கும் உணர்வாய்ப் பிறிதோர் உணர்வு இல்லாமையால், இது ''நன்னலம் பெற நிறைந்தஞானம்'', ''சுதந்திர ஞானம்'' எனச் சிறப்பித்துக் கூறப்படும்.

## பத்து நிலைகளாக வைத்து உணர்த்துதல் :

மேலே கூறிய முறையில் பாசஞானம் நீங்கிப் பசுஞானம் விளங்கப் பெறுதலையும், பின்னர் அதுவும் நீங்கச் சிவஞானம் விளங்கப் பெறுதலையும், பத்து வகையில் வைத்துவிளங்க உணர்த்தும் முறை ''தசகாரியம்'' எனப்படும்.

ஆன்மா ஐம்பொறி, மனம் முதலிய தத்துவங்களோடு கூடி அவற்றின் செயலே தன் செயலாகக் கண்டுவரும் உணர்வு நிலையே பாச ஞான நிலை எனப்பட்டது. அதை நீக்கிக் கொள்ளுதற்கு முதற்கண் தத்துவங்களின் இயல்பைச் சுட்டி உணர வேண்டும். பின் வரும் உதாரணத்தைக் கவனிப்போம் : ஒரு பொருளைக் கண்ணால் காண்கிறோம். அப்பொழுது ''நான் இதனைக் காண்கின்றேன்'' என்னும் உணர்வு நிகழ்கின்றது. இங்கே உயிர், கண்ணே தான் என உணர்ந்து நிற்கின்றது. கண் ஒரு பொருளின் உருவை மட்டும் காண உதவுகிறது; மேலும், ஒரு பொருளைக் கண்டபின் கண்ணை மூடிக்கொண்டு எண்ணும்போது, அப்பொழுதும் உள்ளத்தில் அதன் உருவம் தோன்றும். அத்தோற்றம் கண்ணால் காணப்படுவது அன்று. முன் கண்ணோடு ஒன்றி நின்று உணர்ந்த மனத்தால் நிகழ்வது அது. கண் முதலிய பொறிகளுள் ஒன்று அறியும் பொருளை மற்றொன்று அறியாது. ஆனால், அவற்றின் வேறாக உள்ள மனம் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்தையும், விருப்பு வெறுப்பு அன்பு முதலிய பிழம்பு அறியப்படாத பொருள்களையும் உணரும். இதனால், நாம் கண் முதலிய பொறிகளுக்கு வேறாய் இருந்தும், அவற்றோடு கூடி நின்று புலன்களை அறிந்து வருகிறோம் என்று உணரலாம். இவ்வாறு நமக்குப் பொருள் உணர்வைத் தோற்றுவிக்கும் கருவிகளை, முப்பத்தாறு தத்துவங்களாக ஞான நூல்கள் வகுத்துக் கூறுகின்றன. அவற்றின் நீங்குதற்கு அத் தத்துவங்களால் நமக்கு விளங்கும் அறிவிச்சை செயல்களின் விருத்திகளை, இன்ன இன்ன என முன்னர் உணர்தல் வேண்டும். அங்ஙனம் உணரும் உணர்வு தத்துவரூபம் எனப்படும். பின், அவை தாமே அறிவன அல்ல ; கண்ணுக்குக் காட்டும் கண்ணாடிபோல, உயிர்க்குக் காட்டும் அறிவில் பொருள்கள் என்று உணர்தல் வேண்டும்; அங்ஙனம் உணர்தல் தத்துவ தரிசனம் எனப்படும். அதன் பின் நமக்கு அன்றாடம் நிகழும் நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், தன்வசம் அழிதல் என்னும் நிலைகளில் வைத்து, அத் தத்துவங்கள் ஆன்மாவினின்று நீங்குவனவாயிருத்தலையும் சுட்டி உணர்தல் வேண்டும். இது தத்துவ சுத்தி எனப்படும்.

இங்கு உருவம், தரிசனம், சுத்தி என்னும் சொற்கள் பொதுவாகக் காணுதல், ஐயுறவோடு காணுதல், தெளியக் காணுதல் என்ற பொருளில் உள்ளன. தத்துவ சுத்தி என்னும் பாசத்தைப் பற்றிய தெளிவுக் காட்சி எய்திய ஆன்மா, அக்காட்சி பற்றிப் பாசத்தின் நீங்குதலின் பாச ஞானத்தின் நீங்கித் தன் வியாபக நிலை உணரப்பெற்றுத் தான் முதல் என நிற்கும். இங்ஙனம் தன்னை உணர்தலே ஆன்மாவின் இயல்பைப் பொதுப்படக் காண்டல். ஆதலால் இக்காட்சி ஆன்ம ரூபம் எனப்படும். மேலே கூறியபடி, இவ்வுணர்வு நீங்குதற்குக் காரணமாய், ஞானாசிரியனால் நினைப்பிக்கப்படும் திருவருளின் உண்மையை உணரும் உணர்வு சிவ ரூபம் எனப்படும். ஆகாயத்தின் அளப்பருந் தன்மையைக் காணும்போது, அங்குக் காணப்படுவது வெறும் வெளி மட்டுமன்றி, அவ்வெளியின் அளப்பருந் தன்மையைக் காட்டி நிற்கும் ஞாயிற்றின் ஒளியும் ஆகும். அவ்வொளி பற்றியே ஆகாயத்தின் பரப்பு உணரப்படுகின்றது. அதுபோல, ஆன்ம வியாபகம் உணரப்பட்டது அதற்குச் சார்பாய் யாங்கணும் நிறைந்துள்ள திருவருள் ஒளி இருத்தல் பற்றியே, எனத் திருவருளின் உண்மையைப் பொதுவாக உணர்வதே சிவ ரூபம் எனப்பட்டது. இச் சிவ ரூபம் ஆன்ம ரூபம் எனப்பட்ட பசு ஞானத்தை அறியாமையாய்க் கழிப்பித்துச் சிவசம உணர்வு தோன்றுதற்கு முன்னிலையாகி நிற்கும். தான் முதல் அன்றெனினும், ''எல்லாம் செய்தல் எனக்கே கைகூடும்'' எனத் தன்னை உணர்தல் ஆன்ம தரிசனம் எனப்படும். முத்திநிலைக்கண் முத்தான்மாக்களிடத்து நிகழும் அற்புதச் செயல் அனைத்தும் முதல்வன் செயலே அன்றிப் பிறிதில்லை ; அது மின் ஆற்றல் ஒரு பொருளைப்பற்றி நின்று (Resistance wire) தன்னை விளக்குதல் போன்றது, எனத் திருவருளின் ஆற்றலைச் செம்மையாக உணர்தல் சிவ தரிசனம் எனப்படும். இவ்வுணர்வு எனது என்னும் செருக்காய் நின்ற ஆன்ம தரிசனம் எனப்பட்ட பசு ஞானம் கழிதற்கு ஏதுவாவது.

இங்ஙனம் சிவ ரூபம், சிவ தரிசனம் என்னும் உணர்வுகளால் ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம் என்னும் பசு ஞானங்கள் பற்றறக் கழியும்போது, பசுத்துவவாதனை முற்றிலும் நீங்கி விடுகிறது. அந்நிலையில் ஆன்மா, திருவருள் உண்மையை முன்னெல்லாம் காணாது தானே என நின்றாற்போல, இப்போது தான் அதுவேயாகித் தற்போதம் சிறிதும் இன்றித் திருவருள் வயப்பட்டு ஒன்றி நின்று, அவ்வருளால் அன்றி ஒன்றும் அறிதலும் செய்தலும் இன்றி நிற்கும். யான் முதல் அல்லேன்; என் செயலும் இல்லை; எல்லாம் முதல்வன் செயலே என உணர்ந்து நிற்கும் உணர்வு, ஆன்ம இயல்பைத் தெளிய உணர்தலாகிய ஆன்ம சுத்தி எனப்படும். இவ்வுணர்வு நிலையில் ஆன்ம உணர்வு திருவருளோடு பிரிப்பின்றி ஒன்றி அதன் வயப்பட்டு நிற்றலின், அங்ஙனந் தன்னைத் தன் வயப்படுத்தித் தானேயாய் நிற்றல், முதல்வன் இயல்பு என்பது உணரப்படும். இவ்வுணர்வே சிவயோகம் எனப்படும். இது நின்மல துரிய அருணிலை எனவும் கூறப்படும். ''எவ்வெவர் தன்மையும் தன்வயப் படுத்தித்தானேயாகிய தயாபரன் எம்மிறை'', ''ஒருவனே உருத்திரன், இரண்டாவதாக ஒன்றைக் கொள்வாரல்லர்; அவன் தன் ஆளும் சக்தியால் எல்லாவற்றையும் ஆண்டு, காணப்படாமல் உள்ளே நிலையுறுகின்றான்'' என்றாற்போல எழுந்த சுருதிகள் இவ்வனுபவ வெளிப்பாடே ஆகும்.

இந்நிலைக்கு மேல், திருவருளுக்கு முதலாகிய சிவத்தை மெய்யன்பாற்றலைப்பட்டு, அன்பே இன்பாய் அமரும் நிலை சிவ போகம் எனப்படும். இதுவே பிறவியின் முடிநிலைப் பெரும் பயன் ஆதலால், இது ஆன்ம லாபம் எனவும் படும். இந்நிலை இப்பிறவியில் இப்பொழுதே பெறக்கூடியது. இது நின்மல துரியாதீத ஆனந்த நிலை எனவும் கூறப்படும்.

இங்குக் கூறிய தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவ ரூபம், சிவ தரிசனம், சிவ யோகம், சிவ போகம் என்னும் பத்துமே தசகாரியம் எனப்படும்.

சூரியன் ஈர்ப்புச் சூழலில் பூமியும், பூமியின் ஈர்ப்புச் சூழலில் சந்திரனும் அடங்கி நின்று, ஒவ்வொன்றும் தானும், தன் ஈர்ப்புச் சூழலும் என இரு வகைப்பட்டு இயைந்து நின்று, வியாபகவியாப்பியமாய் நிற்றல்போல முதற் பொருள் சிவம் சக்தி என இருதன்மைப் பட்டு, இயைந்து நின்று உயிரையும் பாசத்தையும் தன்கண் அடங்கக் கொண்டு தொழிற் படுத்தும்; சிவசக்தியில் அடங்கி நின்று தொழிற்படும் உயிர், ஆணவமலங் காரணமாக அச்சத்தியின் உண்மையை அறியாது, தத்துவங்களாகிய பாசத்தைப் பற்றித் தொழிற் பட்டும் தொழிற்படுத்தியும் வரும். முதல்வன் வியாபகத்தில் உயிர் அடங்கி நிற்றல் போல, உயிரின் வியாபகத்தில் தத்துவங்கள் அடங்குவன; உயிர் தனக்கு முதலாகத் தன்னை அடக்கிக் கொண்டுள்ள முதற் பொருளை நோக்காது, தத்துவங்களைப் பற்றிச் சிறுமைப் பட்டு உலக போகங்களை நோக்கி நிற்கும் நிலையே பிறப்பு நிலை. இது பாற்கடலில் உள்ள மீன் தனக்குப் பரம ஆதாரமாக உள்ள பாலைப் பருகி வாழ எண்ணாது அதன்கண் வீழ்ந்து கிடக்கும் வேறு சிறு பொருள்களை நோக்கி அருந்த எண்ணி முயலுதல் போலும்.

மேலே விளக்கிய தசகாரியம், புறப் பொருளை நோக்கி நின்ற உயிர் முன்னர்த் தன்னை உணர வைத்து, பின் அங்ஙனம் உணரும் நிலையிலேயே உடன் உள்ள திருவருளையும், அத்திருவருளுக்கு முதலாக உள்ள சிவத்தையும் உணர வைக்கும் படிவழி முறையாகும். இங்கே முப்பொருளும் வேறு வேறு பிரிந்து நில்லாமல், ஒன்றோடொன்று கலந்து பிரிப்பின்றி உடன் நிற்பவை ஆதலால், மேலே கூறிய பத்து ஞானச் செய்திகளும் ஒன்றன் பின் ஒன்றாய் நிகழாமல், அவற்றுள் சில உடன் நிகழ்வனவாம். இது மேற்கூறிய விளக்கத்தாலும் உணரப்படும். குறிப்பாக, சிவரூபம் ஆன்ம தரிசனத்தைப் பயத்தலால் அஃது அதில் அடங்கும்; அங்ஙனமே சிவ தரிசனம், சிவ யோகம் என்பவை ஆன்ம சுத்தியில் அடங்கும். சிவ யோகம் ஆன்ம லாபம் எனப்படும். இவ்வாறாதலின், ஆணவத்தின் நீங்கிய நின்மல சுத்தாவத்தையை ஐந்தவத்தையென வைத்து உணர்த்தும்போது தச காரியங்களைத் (1) தத்துவ ரூபம், (2) தத்துவ தரிசனம், (3) தத்துவ சுத்தி, (4) ஆன்ம ரூபம், (5) ஆன்ம தரிசனம், (6) ஆன்ம சுத்தி, (7) ஆன்ம லாபம் என ஏழு அவதரங்களாக உணர்த்தி, இவற்றுள் ஆன்ம ரூபம் வரையுள்ள நான்கும் நின்மல சாக்கிரம், ஆன்ம தரிசனம், நின்மல சொப்பனம், ஆன்ம சுத்தி, நின்மல துரியம், ஆன்மலாபம் நின்மல துரியாதீதம் என அடக்கிக் கூறுவது, துறைசையாதீன ஞான அனுபவ மரபாக உள்ளது. நின்மல சுழுத்தி என ஓர் அவத்தை இங்குக் கூறப்படுவதில்லை. அது நின்மல துரியத்தில் அடங்கும்.

இந் நிலைகள் கரும்பை நுனியினின்றும் நுகர்வோனுக்கு இன்பம் பெருகுதல் போல, மேன் மேலும் இன்பத்தைப் பெருக்கி முடிவில் வரம்பிலா இன்பத்தில் உய்ப்பன. ஆதலால் மேலே கூறிய சுத்தாவத்தையைப் பத்து முழம் உள்ள கரும்பாகவும், அது ஏழு கூறு உடையதாகவும், அவற்றில் முதல் நான்கும் ஒரு கணு, பின் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கணு என உவமித்துக் கூறியுள்ளனர் பெரியோர்!

பின்வரும் ''பஞ்சாக்கரத் தொடை'' என்னும் நூலின் வரிகள் கருத்தில் வைக்கத் தக்கவை. இது திருவாவடுதுறை ஞான ஆசிரியர்களுள் ஒருவராகிய பின் வேலப்ப தேசிகர் அவர்கள் அருளிச் செய்தது :

''பிரியாத ஐந்தவத்தை பேற்றிற்—சரியாய்த்
தெசகாரியம் ஏழாய்ச் சேரும்; உவமை
வசமாம் கரும்பின் வகைகேள்—நிசமான
சுத்தவத்தை யாங்கரும்பின் தொல்கணு ஐந்தாகும்; முறை
முத்தி, வருசாக் கிரமுதலாம்;—பத்து
முழம்காரியம்; அவற்றின் மூன்றடக்கிப் பங்கேழ்
தத்துவ ரூபமுடன் தற்காட்சி சுத்தி உயிர்
ஒத்த உருவம் உயர்காட்சி—சுத்தி
இலாபம் இவை ஏழில், இலங்கும் உயிர்க் காட்சி
நிலாவு சிவரூபம் நேராம்;—குலாவு சுத்தி
தன்னிற் றரிசனமும் சார் யோகம் ஆம் இரண்டும்
மன்னும்; இவை ஏழும் வரும் முறையில்—துன்னுகின்ற
சாக்கிரத்தில் நான்கு; தருஞ்சொப்பனம் ஒன்று;
நீக்குஞ் சுழுத்தி; நிறைதுரியத்(து)—ஆக்கியிடும்
ஒன்றும்; அதீதத்தே உற்றிடும் ஒன்(று) ஆகும்''.

முடிவுரை :

இவ்வாற்றால் தமிழ் மக்களுக்கே தனிச் சிறப்பாக உரிய சைவ சித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கையானது, ஆன்மீக அருளனுபவங்களை எவ்வளவு நுணுக்கமாக ஆராய்ந்து விளக்குகின்றது என்பது, அறிந்து இன்புறற்பாலது.



பழநி, திருவாவினன்குடிக்கோயில் தோற்றம்.

# தற்சோதனை

'அருண் மொழியரசு'
திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

மனிதன் கடைத்தேற வேண்டிய வழிகள் பல. அவற்றுள் முக்கியமான வழி ஒன்று உண்டு. அது தன்னைத்தானே சோதனை செய்து கொள்ளல். வியாபாரிகள் கடையை மூடும் போது இருப்புத் திட்டம் பார்த்துக் கொள் வார்கள். அதுபோல், ஒவ்வொரு மனிதனும் படுக்கின்றபோது, ''நாம் இன்று என்ன நற் கருமம் புரிந்தோம்? வாக்கால் இறைவனு டைய நாமங்களைப் பலமுறை கூறினோமா? உண்மையுரைத்தோமா? பிறருக்கு உபகார மான சொற்களைச் சொன்னோமா? இந்த உடம்பால் பிறருக்கு உதவி செய்தோமா? ஆலய வழிபாடு செய்தோமா? மனதால் நல்ல சிந்தனைகளைச் சிந்தித்தோமா? மந்திர செபஞ் செய்தோமா? இந்தக் கண்களால் தீமை புரியாதிருந்தோமா? வாக்கால் பொய் புகலாதிருந்தோமா? இந்த உடம்பால் குற்றம் புரிந்தோமா? தீய எண்ணம் எண்ணினோமா?'' என்று நம்மை நாமே சோதித்துக் கொள்ள வேண்டும். அப்படி அன்றாடம் துயில் புரி வதற்கு முன் இந்தச் சோதனையை நாம் நடத்த வேண்டும். தன்னைத் தானே சோதிக் கின்றவன் தீமையினின்றும் விலகி நன்மை யடைவான்.

மகாத்மா காந்தியடிகள் சத்தியமாகிய கண்ணாடியைக் கொண்டு, தன்னைத் தானே சோதித்துக்கொண் டிருந்தார். அதனால் அவர் வரலாற்றுக்குச் **சத்திய சோதனை** என்று பெயர். இப்போது நம்மில் பலர் தன்னைச் சோதிப்பதில்லை. ''அவன் அப்படி; இவன் இப்படி'' என்று பிறரைக் குறை கூறியும்; ''அவன் ஏன் அங்குப் போகின்றான் ? இவன் ஏன் இங்கு நிற்கின்றான்?'' என்று பிறரைச் சதா சோதிக்கின்றார்கள். இவர்களுடைய அறிவை என்னென்றுரைப்பது? அந்தோ! மதியீனம்.

இதற்கு ஒரு உவமை கூறுகின்றேன். கடையில் உள்ள வியாபாரிகள் இரவில் தங்கள் கடையைப் பூட்டுவார்கள்; அப்படி பூட்டி விட்டுச் சரியாகப் பூட்டினோமா என்று பல முறை அப்பூட்டை இழுத்துப் பார்ப்பார்கள். சிலர் பிடித்துத் தொங்குவார்கள். சிலர் கொஞ்ச தூரம் போய்த் திரும்பி வந்து ஒரு முறை பூட்டை இழுத்துப் பார்ப்பார்கள். இது பிழை அன்று. அப்படிப் பார்ப்பது நல்லது தான்.

ஒரு வியாபாரி தன் கடையைப் பூட்டினான். பூட்டிவிட்டு அந்தப் பூட்டை இழுத்துப் பார்க் காமல், அடுத்த கடைப்பூட்டையும், மூன்று வது கடை, நான்காவது கடைப் பூட்டுக்களை யும் வரிசையாக இழுத்துப் பார்க்கலானான். அப்படிச் செய்வானாயின், அவன் மடமையை என்னென்று கூறுவது?

அதுபோல், அநேகர் தன்னைத்தான் சோதிக்காமல், பிறரைச் சோதித்து வீணே அரிய நேரத்தைக் கெடுத்து அவலமாகின்றார் கள். இராமலிங்க அடிகள் கூறுகின்றார்:

''வையமேல் பிறர்தம் கோலமும் நடையும்
வண்ணமும் அண்ணலே சிறிதும்
பையவே ஊன்றிப் பார்த்த தேயில்லை
பார்ப்பனேல் பயமிகப் படைப்பேன்''

திருவள்ளுவர் கூறுகின்றார்:

ஏதிலார் குற்றம் போல் தம்குற்றங்
காண்கிற்பின்
தீதுண்டோ மன்னு முயிர்க்கு?

இனி நம்மை நாம் சரிபார்த்துக் கொள்ள இன்னொரு அளவுகோல் உளது. அதுதான் கனவு. கனவில் நாம் எப்படி தொழிற்படுகின் றோம், என்று நினைத்துப் பார்த்துக் கொள்ளுங் கள். பெரும்பாலும், பகலில் நாம் நினைப்பவை பேசுபவை, செய்பவைதான் கனவில் வரும். ஏகதேசமாக, எதிர்கால நிகழ்ச்சிகளும் கனவில் வரும். அநேகமாக சாக்கிரத்தில் உள்ள வையே சொப்பனத்தில் வரும்.

பால் குடிக்கின்ற குழந்தைகள், பால் குடிப்பதுபோல், உறங்கும் போது வாயை அசைக்கும். மத்தளம் வாசிப்பவர் உறங்கும் போது கையைப் பட பட என்று அசைப்பர்.

ஒருவர் நன்கு தூங்கிக்கொண்டிருந்தார். கண்மூடிய வண்ணமாகவே அருகில் படுத்தி ருந்த ஒருவர் முதுகில் ஓங்கிப் பலமுறை குத்தி னார். அவர் எழுந்து இவரை எழுப்பி, ''ஏன் என் முதுகில் இப்படிக் குத்தினாய்?'' என்று கேட்டார். அவர் பாவம்! வருத்தத்துடன் ''நான் தபாலாபீசில் தேதி முத்திரை குத்திய பழக்கத்தால், கனவில் அதுபோல் கண்டு உம்மைக் குத்திவிட்டேன்; மன்னித்துக்

கொள்ளுங்கள்'' என்றாராம். எனவே நமது கனவு நிகழ்ச்சி நமது மனநிலைகளையும் செயல்களையும் விளக்கிச் சான்று பகரும்.

சிலருக்கு ரூபாய் எடுக்க எடுக்க வந்து கொண்டேயிருக்கின்றாற் போலவும், சிலர் ஒரு பெண்ணைக் கண்டு மோகித்து மணந்து கொள்வது போலவும், இங்ஙனம் ஏதேதோ விதமாகக் கனவு காண்பர். இக் கனவுகள் அவர்களது மனநிலையைக் காட்டும் அட்டவணை. தாயுமானார் கனவு கண்டார். எவ்வாறு? அவரே கூறுகின்றார்:

மண்ணீர்மை யாலே மயங்காதுன் கையால் என்
கண்ணீர் துடைக்கவும் நான்கண்டேன் பராபரமே (1)

மால்வைத்த சிந்தை மயக்கறஎன் சென்னி மிசைக்
கால் வைக்கவுங் கனவு கண்டேன் பராபரமே. (2)

ஆண்டாளம்மை கண்ணபிரான் தன்னை மணந்து கொண்டதுபோல் கனவு கண்டதாகப் பாடியிருக்கின்றார்.

கொடிய கனவு கண்டவர்கள் அதிலிருந்தாவது தமது மனநிலையை நல்வழியில் மாற்றி அமைக்க வேண்டும். இப்போது நாம் நினைவுடன் பேசுகின்ற பேச்சுதான், நம்மைநாம் மறக்கின்றபோதும் வரும். காந்தியடிகளின் திருமார்பில், நான்கு குண்டுகள் பாய்ந்தன. தன்னைத்தான் மறந்தார். அப்போது அவருடைய திருவாக்கிலிருந்து, ''ஹரே ராம்! ராம்!'' என்று வந்தது. அநேகர் தன்னை மறந்த மரணப் படுக்கையில், ''அப்பா! ஐயா! அம்மா!'' என்று பிதற்றுகின்றார்கள். தினந்தோறும் தூங்குகின்றபோது, வரும் கனவில் நல்லது வந்தால்தானே, பெரிய தூக்கமாகிய மரண நித்திரையில், நம் வாயில் இறைவனுடைய நாமங்கள் வரும்.

பகல் முழுவதும் தீமையே புரியும் ஒருவன் நல்ல கனவு காணமாட்டான். அதுபோல், வாழ்நாள் முழுவதும் தீவினைகளையே புரிந்தவன் நாவில், மரணப்படுக்கையில், இறைவனுடைய திருநாமம் நிச்சயமாக வராது.

ஒருவர் சாகும்போது, நாயைப் பிடித்துக் கட்டு என்றார். உயிர் போய்விட்டது. அவர் கடைசி நேரத்தில், தனது நாயைத்தான் நினைத்தார். நாயை நினைத்து உயிர் விட்டவன், நாயாகத்தான் பிறப்பான். சிலர் மரணப் படுக்கையில் எருமைக் கடா விரட்டுகின்றதே என்பார்கள். ஒரு 'அறிவாளி' கூறினான், ''இப்போதிருந்தே எதற்காக இறை நாமத்தைக் கூற வேண்டும். நான் உயிர் விடும்போது கூறி விடுகின்றேன்'' என்றான். அது, ''பரிட்சையன்று புத்தகம் வாங்கி விடுகின்றேன்'' என்று கூறும் மாணவன் கூற்றுக்கு ஒப்பாகும். வெள்ளம் வந்தபின் அணைபோட இயலுமா? ஆகவே மரணம் வருமுன் அவனுடைய சரணத்தை நினைக்க வேண்டும்.

முந்நூறு ஆண்டுகளுக்கு முன் தொண்டை நாட்டில், ஆரணிக்கு அருகில், உள்ள அடையப்பலம் என்ற ஊரில் அப்பைய தீட்சிதர் என்று ஒரு சிறந்த சிவபக்தர் இருந்தார். அவர் உயர்ந்த வடமொழிப் புலவர். நூற்று நான்கு நூல்கள் எழுதியிருக்கின்றார். அசையாத சிவ பக்தி பூண்டவர். இத்தகைய சிறந்த உத்தம பக்தருக்கு ஒருநாள் ஒரு சந்தேகம் ஏற்பட்டது. ''நாம் சதா சிவசிவ என்று கூறுகின்றோம். திரு ஐந்தெழுத்து ஓதுகின்றோம். சிவபிரான் மீது பல பாடல்களைப் பாடுகின்றோம். நமது அறிவு மயங்கியபோது, நமது நாக்கு 'சிவசிவ' என்று கூறுமா? அப்படிக் கூறினால்தானே நமது பிறப்பு புனிதமடையும்? இல்லையேல் நமக்கு உய்வு கிடைக்காதே. ஆகவே, நம்மை நாமே சோதித்து விடவேண்டும்'' என்று எண்ணித் துணிந்தார்.

''நமது அறிவு மயங்கிப் பித்துப் பிடித்தால், அந்த வேளையில் நமது வாக்கில் கெட்ட சொற்கள் வராமல், சிவநாமம் வருமானால், நமக்கு உய்வு உண்டு. நமது சிவபக்தி உண்மையானது என்று முடிவு கட்டலாம்'' என்று நினைத்தார்.

ஆதலால், தனக்குப் பைத்தியம் எப்படி வரும் என்று யோசனை செய்தார். ஊமத்தங்காய் ஊமத்தம்பூ இவற்றைத் தின்றால் பைத்தியம் பிடிக்கும் என்பது அவருக்குத் தெரியும். அவற்றைத் தின்று பைத்தியம் வந்துவிட்டால் ஒருவேளை ஆயுள் முழுவதும் பைத்தியமாகவே இருந்து பிறப்பு வீணாகக்கூடாதே என்ற அச்சமும் அவருக்கு வந்தது. பைத்தியத்தை நீக்கும் ஒரு மருந்தையும் தயாரித்து வைத்துக் கொண்டார். சீடர்களை அழைத்தார். ''நான் இப்போது இந்த மருந்தைத் தின்னப் போகின்றேன். தின்றவுடன் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும். அப்போது நான் என்ன உளறுகின்றேன் என்று கேட்டு நீங்கள் கவனமாக எழுதி வையுங்கள். பின்னர், இந்த மருந்தைத் தந்து என் பைத்தியத்தை மாற்றிவிடுங்கள்'' என்று கட்டளையிட்டார்.

சீடர்கள் ஏடும், எழுத்தாணியும் வைத்துக் கொண்டு அருகில் இருந்தார்கள். அப்பைய தீட்சிதர் ஊமத்தங்காய் ஊமத்தம்பூவை உண்டார். உடனே அறிவு மயங்கியது.

பித்தம் தலைக்கேறியது. அந்தப் பைத்திய நிலையில், அவர் திருவாக்கிலிருந்து அதியற்புத மான ஐம்பது சுலோகங்கள் வெளிப்பட்டன. அவர் பைத்தியத்தால், உளறிய பாடல்கள்—பரமபவித்திரமானவை. அவர் அப்போது தாரை தாரையாகக் கண்ணீர் சொரிந்து பாடினார். பரமசிவனைத் துதி செய்தார். சீடர்கள் அதிக கவனமாக அவற்றை எழுதினார்கள். அந்த நூலுக்கு ''ஆத்மார்ப்பணஸ்துதி'' என்றும் கூறுவர்.

இந்த நூல் மிகவும் உயர்ந்தது, உருக்க மானது. பித்தம் பிடித்த நிலையிலும் அப்பைய தீட்சிதருக்கு சிவபக்தி மாறவில்லை என்றால், அவருடைய சிவபக்தியை அளக்க வல்லார் யார்? அதனைக் கூறுந் திறமை யாருக்கு உண்டு? அப்போது அவர் பாடுகின்றார். ''எம் பெருமானே! உனது கருணையை என்னென்று புகழ்வேன்? மிக எளிமையான மலர்களை அடியார்களிடமிருந்து பெற்றுக்கொண்டு, அவர்களுக்கு நீ மிகப்பெரிய அருளைப் புரிகின்றாய். அடியேன் அர்ச்சிப்பது தும்பைப் பூவால்; நீ எனக்குத் தருவது முத்தி வீடு''.

இந்தப் பாடல் சிவபெருமானுடைய கருணையின் எளிமையை நமக்குத் தெரிவிக்கின்றது. ரோஜா, மல்லிகை, முல்லை, சாதி, சண்பகம் முதலிய நறுமலர்களுக்கு விலையுண்டு. அவற்றைப் பெண்மக்கள் அணிந்து கொள்வார்கள். தும்பைப் பூவுக்கு விலையே கிடையாது. அதனை எந்தப் பெண்மணியுஞ் சூடிக்கொள்ள மாட்டாள். ஆகவே, நமக்கெல்லாம் எது உதவாதோ அதை இறைவனுக்குச் சாத்தினால் போதும். தும்பைப் பூ எங்கும் கிடைக்கும். யாரும் விரும்ப மாட்டார்கள். அழகாகவும் இரா. ''இந்தப் பூக்களையாவது எனக்கு அர்ச்சியுங்கள். உங்களுக்கு நான் இகபர சௌபாக்கியங்களை வழங்குவேன்'', என்று கூறி, எம்பெருமான் தும்பைப் பூவையும், ஊமத்தம் பூவையும் சூடிக்கொண்டிருக்கிறார். இத்தனை சுலபமாகச் சிவபூசை செய்யலாம்.

ஆண்டவனை ஒரு உத்தரணித் தண்ணீரால் நனைத்து ஒரு தும்பைப் பூவைப் போட்டுவிட்டால் போதும். எல்லா நலன்களையும் அவன் அள்ளி வழங்கி விடுகின்றான். இப்படி பரம சுலபனாக இறைவன் இருந்தும் ஏனோ சிலர் வழிபாடு புரிவதில்லை. இந்த அருமையான மனிதப் பிறப்பு மண்ணாகி மட்கிப் போகின்றது. பட்டினத்தார் பாடுகின்றார்:

கண்ணுண்டு காணக்கருத்துண்டு நோக்கக்
கசிந்துருகிப்
பண்ணுண்டு பாடச் செவியுண்டு கேட்கப்
பல் பச்சிலையால்
எண்ணுண்டு சாத்த எதிர் நிற்க ஈசன்
இருக்கையிலே,
மண்ணுண்டு போகு தையோ கெடுவீர்
இந்த மானிடமே.

அப்பரடிகள் பாடுகின்றார்:

பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றி
லார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கில்
லார்
ஆக்கைக்கே இரைதேடி அலமந்து
காக்கைக்கே இரையாகிக் கழிவரே.

ஆதலால், மானிடப் பிறவியெடுத்த ஒவ்வொருவரும் சிவபூசை செய்து, சிவார்ச்சனை புரிந்து சிவநாமத்தைச் சொல்லி, சிவபஜனை புரிந்து, சிவபக்தி செய்து, சிவபாத இருதயர்களாகத் திகழ்ந்து, பெற்ற பிறப்பைப் பயன் படுத்திக்கொண்டு, இனிப் பிறவாத பெற்றியைப் பெறுவார்களாக!

---

# எம்பெருமான் திருக்கருணை

அத்தாஉன் அடியேனை அன்பால் ஆர்த்தாய்!
அருள்நோக்கில் தீர்த்தநீர் ஆட்டிக் கொண்டாய்!
எத்தனையும் அரியைநீ எளியை யானாய்!
எனையாண்டு கொண்டிரங்கி ஏன்று கொண்டாய்!
பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன்
பிழைத்தனகள் எத்தனையும் பொறுத்தாய் அன்றே!
இத்தனையும் எம்பரமோ? ஐய ஐயோ!
எம்பெருமான் திருக்கருணை இருந்த வாறே!

—திருநாவுக்கரசர்.

# பக்தி சூத்திரமும் திருவாசகமும்

'மும்மொழிப் புலமைச் செம்மல்'
திரு. பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை அவர்கள்
M.A., L.T.,
பதிவாளர், சென்னைப் பல்கலைக் கழகம்.

ஆண்டவனை அடைவதற்குப் பல வழிகள் உண்டு என்று, பக்தி சூத்திரம் என்னும் நூலில் நாரதர் கூறுகிறார். காதலின் மூலம் கோபியரும், பகைமை பாராட்டுவதன் மூலம் சிசுபாலனும், அச்சத்தின் மூலம் கம்சனும், தோழமை மூலம் யுதிட்டிரரும், பக்தியின் மூலம் நாரதரும் கண்ணனை அடைந்தார்கள். இவற்றுள் பக்தி நெறியே சிறந்தது என்பதிலே எட்டுணையும் ஐயமில்லை.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, வடநாட்டிலும் தென்னாட்டிலும் பக்தி நெறி பரவியிருந்தது என்பதற்கு இலக்கிய ஆதாரங்கள் உள்ளன. பாணினியும் பதஞ்சலியும் வாசுதேவனைப் பற்றியும், சிவ பாகவதர்களைப் பற்றியும், சிவன், கந்தன், விசாகன் முதலான தேவர்களைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழிலும் தொல்காப்பியம், பரிபாடல், திருமுருகாற்றுப்படை, கலித்தொகை போன்ற பண்டை இலக்கியங்களில் பல தேவர்களைப் பற்றியும், வழிபாட்டு முறை பற்றியும் குறிப்புக்கள் காணப்படுகின்றன என்பதை அனைவரும் அறிவர். பக்தி நூல்கள் பெருமளவில் தமிழகத்தில் தோன்றியுள்ளன என்பதை நாம் எண்ணி மகிழலாம். நாயன்மார்களும் ஆழ்வாராதியரும் இதில் பெரும் பங்கு கொண்டனரெனினும், சங்க இலக்கியத்திலேயே இச் செந்நெறியின் இயல்பை நாம் காண்கிறோம். ''யாம் இரப்பவை பொன்னும் பொருளும் போகமும் அல்ல, நின்பால் அன்பும் அருளும் அறனும். . .'' என்று பரிபாடல் பகர்கிறது. 'கற்றதனாலாய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅரெனின்' என்று திருக்குறள் கூறுகிறது. 'வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட'க் குன்று தோறாடும் குமரனை, 'உச்சிக் கூப்பிய கையினராய்', 'இனியவும் நல்லவும் நனி பல ஏத்திய' புலவரைத் திருமுருகாற்றுப்படை குறிப்பிடுகிறது. 'ஆறு அறி அந்தணர்க்கு அருமறைபல பகர்ந்து, தேறு நீர் சடைக்கரந்து, திரிபுரம் தீ மடுத்து, கூறுமல் குனித்ததின் மேல் செல்லும் கடுங்கூளி மாறுப் போர் மணி மிடற்று, எண்கையாய்!' என்று கற்றறிந்தார் பேசுங் கலித்தொகை பேசுகிறது. பின்னர் ஜைனமும், பௌத்தமும் நிலைபெறுற்ற காரணத்தால், மக்கள் உள்ளத்தின் அடித்தளத்தில் அழுந்தியிருந்த பக்தி உணர்வு புறச் சமய வீழ்ச்சிக்குப் பின்னர், நாயன்மார் ஆழ்வாராதியர் அரும் பாடற்றிறத்தால் புத்துயிர் தழைக்கலாயிற்று. வடநாட்டிலும் புராணங்கள் பக்தி நெறியைப் பரப்பி வந்தன. பக்திப் பனுவல்கள் பல்கிப் பெருகின ; இலக்கியத்திற்கேற்ப இலக்கணம் குறித்து நாரத பக்தி சூத்திரம், சாண்டில்ய சூத்திரம், பக்தி ரசாயனம் போன்ற நூல்கள் அவ்வக் காலங்களில் எழலாயின.

பன்னிரு திருமுறைகளுமே உயர்ந்த பக்தி நூல்களாயினும், ஈண்டுத் திருவாசகத்தின் ஒரு சில பகுதிகளை மேலே குறிப்பிடப்பட்டுள்ள வடமொழிப் பக்தி இலக்கண நூல்களோடு பொருத்திப் பார்த்தல், பயன் தருவதாகும் என்னும் நோக்கத்தோடு, இக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று வரிசைப்படுத்தி, ஞானமே முக்திக்குரிய இறுதி சாதனம் என்று, சைவ சமய நூல்கள் விரித்துரைத்த போதிலும், பக்தி நெறியின் இன்றியமையாத் தன்மையைச் சைவ நூல்கள் மட்டுமேயன்றி, வைணவ மத்வ நூல்களும் வலியுறுத்துவதை நாம் காணலாம். ஞானமே முக்தி சாதனம் என்று சங்கரர் கூறுவர். பக்தியே ஒரு வகையில் ஞானம் என்று இராமானுஜர் கூறுவர். பக்தியே முக்தி சாதனம் என்று மத்வர் கூறுவர்.

பக்தி இருவகைப்படும். 'அபார பக்தி' பொருளையோ, போகத்தையோ, புகழையோ, முக்தியையோ ஏதோ ஒரு பயனைக் குறித்துச் செய்யப்படும் பக்தி. 'பரா பக்தி' என்பது பக்தி செய்ய வேண்டும் என்பதற்காகவே செய்யப்படுவது. உலகியலில் உழலும் மக்களுள் பெரும்பாலோர் செய்யும் பக்தி முதல் வகையைச் சார்ந்தது. மாணிக்கவாசகர் போன்ற அருளாளர்கள் செய்யும் பக்தி இரண்டாம் வகையைச் சார்ந்தது. சைதன்யர் 'பொருளையும் சுற்றத்தையும் விரும்பேன். பெண்ணையும் பாட்டையும் விரும்பேன். பிறவி தோறும் உன் இணைபிரியாப் பக்தனாகவே இருக்க விரும்புகிறேன்' என்று வேண்டுகிறார்.

பிறவாமை வேண்டிய காரைக்காலம்மையார் 'பிறப்புண்டேல் நினது திருவடி மறவாமை வேண்டும்' என்று வேண்டவில்லையா? மாணிக்க வாசகரும் 'வேண்டும் நின் கழற் கணன்பு . . மாண்டு மாண்டு வந்து வந்து மன்ன நின் வணங்கவே' (திருச்ச. 74) என்று கூறவில்லையா? விஷ்ணு புராணத்தில் ஓரடியார் ''அச்சுதா! ஆயிரம் பிறவிகளில் நான் பிறந்தாலும் நின் மாட்டு என்றும் தளராத பக்தி உடையவனாக நான் இருக்க அருளவேண்டும்'' என வேண்டுகிறார். ''கண்டு எந்தை என்று இறைஞ்சிக் கைப்பணி யான் செய்யேனேல், அண்டம் பெறினும் அது வேண்டேன்'' என்ற காரைக்காலம்மையாரின் வாக்கும் இங்கு நினைவு கூரத்தக்கது. ஆன்ம போதம் பெற்ற இத்தகையோரே பரா பக்தியில் அழுந்தியவர்கள்.

பகவத் கீதை (11.54)யில் ''என்னை அறிவதற்கும், காண்பதற்கும், தத்துவ ரீதியில் என்னைப் போல் ஆவதற்கும் என்னிடத்துச் செலுத்தும் பக்தியே காரணம்'' என்று கண்ணபிரான் மொழிகின்றார். பக்தியின் விளைவு ஈசனைத் தன் வயப்படுத்துதல் என்று, பக்தி மீமாம்சை கூறுகிறது. பாகவத புராணத்திலும் 'கற்புடை மங்கைக்குக் கணவன் எப்படியோ அப்படி பக்தனுக்கு ஆட்பட்டவன் நான்' என்று பகவான் கூறுகிறார்; 'பக்தி வலையிற் படுவோன் காண்க' என்று, திருவாசகத்தில் வரும் திருவண்டப் பகுதி வரியும் இக்கருத்தினைத் தாங்கி நிற்பதைக் காண்க.

'தூய பக்தி நிலையில் இருப்பவர், வேண்டுதல் வேண்டாமை இலாதாராய் இருப்பர். இன்ப துன்பங்களால் ஆட்படமாட்டார். ஆனந்த பரவச நிலையில் திளைப்பார்' என்று கூறுகிறது நாரத சூத்திரம். எல்லாம் ஈசன் செயல் என்று எண்ணியிருப்பர் பக்தர்கள். அவனருளின்றி உய்தி இல்லை என்று உறுதிப்பாடு உடையவர்கள் அவர்கள். 'போகம் வேண்டி வேண்டிலேன் புரந்தராதி இன்பமும்' (திருச்ச. 72) 'பருதிவாழொளியாய் பாதமேயல்லால் பற்று நான் மற்றிலேன் கண்டாய்' (வாழாப். 7) என்ற வரிகள், மணிவாசகரின் உள்ளத் திட்பத்தை உணர்த்துகின்றன. அன்பால் நீ அகம்நெகவே புகுந்தருளியாட்கொண்டது என்பாலே நோக்கிய வாறன்றே யெம் பெருமானே' என்ற திருவேசறவுப் பதிகத்திலும், பிற பல இடங்களிலும் இறைவன் அருட்டிறத்தை வியக்கின்றார் அடிகள். பக்தி செய்வதற்கும் அவனருளே வேண்டியுள்ளதுஎன்பதை 'அடியேனை ஆண்டுகொண்டு பக்திக் கடலுட் பதித்த பரஞ்சோதி' என்ற திருவாசகமும், 'அவனருளே கண்ணாகக் காணினல்லால்' என்ற தேவாரமும் உணர்த்துகின்றன.

அவன் திருவுருவத்தையே காண்டலும், அவன் புகழையே கேட்டலும், அவனையே சிந்தித்தலும் பக்தன் இயல்பு என்று கூறுகிறது நாரத சூத்திரம். குருந்த மரத்தடியில் ஒருமுறை இறைவனின் திருக்கோலத்தைக் கண்ட அடிகள் அவ்வானந்த அநுபவம் மீண்டும் வாராமை குறித்து இரங்குகின்ற நிலையைப் புணர்ச்சிப்பத்தில் பார்க்கிறோம். 'பரிந்து வந்து பரமானந்தம் பண்டே அடியேற்கருள் செய்யப் பிரிந்து போந்து பெருமாநிலத்தில் அருமால் உற்றேனென்றென்று சொரிந்த கண்ணீர் சொரிய வுண்ணீர், உரோமம் சிலிப்ப உகந்து அன்பாய்ப், புரிந்து நிற்பதென்று கொல்லோ? என் பொல்லாமணியைப் புணர்ந்தே' (புணர்ச்சி.6) என்பது திருவாசகம்.

'ஈசுவரனிடத்தில் செலுத்தப்படும் மேலான அன்பு (பராஅநுரக்தி)தான் பக்தி' என்று சாண்டில்யர் இலக்கணம் வகுக்கிறார். இத்தகைய பராபக்தியின் பயன் 'மீண்டும் மீண்டும் ஒரே நோக்குடன் பக்தி செய்வதே' என்கிறார் நாரதர். 'நின்னைத் துன்னி வழிபடுவதன் பயம் இன்னும் இன்னும் அவையாகுக' என்ற சங்கப் புலவர் கேசவனாரின் கூற்று இங்கு நினைவு கூரத்தக்கது.

பக்தி என்றாலே, பக்தன் பகவான் என்ற வேறுபாடு இயல்பாகவே எழுகிறது. இறைவன் வேறு ஜீவான்மா வேறு என்று கருதுகிற சித்தாந்த சமயத்திற்கு இது உடன்பாடே. சாண்டில்ய சூத்திரத்தில் பரம்பொருள் வேறு சீவன் வேறு என்ற உண்மை, காசியபரின் கூற்றாக எடுத்தாளப்படுகிறது. உலகியல் நிலையில் இவ்வேறுபாடு காணப்பட்டபோதிலும், முத்திநிலையில் பரம்பொருளின் தன்மையை அடையக்கூடிய ஆற்றல் ஆன்மாவுக்கு உண்டு என்பது, சாண்டில்யரின் கருத்து. மாணிக்க வாசகரும் 'பாவியேற்கும் உண்டாமோ பரமானந்தப் பழங்கடல் சேர்ந்து ஆவி யாக்கை யான் எனதென்று யாது மின்றி யறுதலே' என்றும், 'பெறவே வேண்டும் மெய்யன்பு பேரா வொழியாப் பிரிவில்லாமறவா நினையா அளவில்லாமாளா இன்ப மாகடலே' (பிரார்த்தனைப் பத்து) என்றும் கூறுவதனை நோக்குக.

பக்தியை 'ஆசக்தி' (ஒன்றுதல்) என்றும் வடநூலார் கூறுவர். இறைவனுடைய குணங்களில், உருவத்தில், பூசையில், நினைப்பில், பணியில், தோழமையில், வாத்சல்யத்தில், நாயகி பாவத்தில், தன்னையே அர்ப்பணித்தலில், அவனேயாதலில், பாவனையில், பரம பிரேமையில் ஈடுபடுதல் ஆகியவை, பக்தியின் பலநிலைகளாக நாரத பக்தி சூத்திரத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. 'பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே' என்பதில் அவன் குணமும், 'சோதியே சுடரே சூழொளி விளக்கே, சுரிகுழற் பணைமுலை மடந்தை

பாதியே பரனே பால்கொள் வெண்ணீற்றாய்' என்பதில் உருவமும், 'முத்து நற்றாமம் பூமாலை தூக்கி முளைக்குடந் தூபம் நற்றீபம் வைம்மின்' என்பதில் பூசையும், 'உருகிப் பெருகி உளங் குளிர முகந்துகொண்டு, பருகற் கினிய பரங் கருணைத் தடங்கடலை, மருவித் திகழ் தென்னன் வார்கழலே நினைந்தடியோம், திருவைப் பரவி நாம் தெள்ளேணங் கொட்டாமோ' என்பதில் பணியும், 'உற்றடியேன் மிகத்தேறி நின்றேன் எனக்குள்ளவனே' என்பதில் தோழமையும் வெளிப்படக் காணலாம். இவ்வாறே 'சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்றிரள் தோள் கூடுவேன்' என்பதில் 'நாயகி பாவத்தையும்', அடைக்கலப்பத்தில் தன்னையே அர்ப்பணித்தலையும், அடிகள் தில்லையில் எழுந்தருளியிருந்த காலத்தில் இறைவன் தன்னைச் சிவமாக்கி யாட்கொண்ட அருட்செயலில் 'அவனே யாதலையும்', 'பலகால் உன்னைப் பாவித்துப் பரவிப் பொன்னம்பலமென்றே ஒல்கா நிற்கும் உயிர்க்கிரங்கி அருளாயென்னை உடையானே' என்பதில் பாவனையையும், 'ஆர்க்கோ அரற்றுகோ ஆடுகோ பாடுகோ பார்க்கோ பரம்பரனே என் செய்கேன்' என்பதில் 'பரமப்பிரேமையையும்' காண்கிறோம்.

அவன் புகழே பேசும் அடியவர்க்கு விரைவில் இறைவன் வெளிப்படுகிறான் என்கிறது மற்றுமொரு சூத்திரம். 'ஆராவமுதின் அருட்டாளிணைபாடி,' 'துஞ்சல் பிறப்பறுப்பான் தூய புகழ் பாடி' 'மாலுக்கரியானை வாயார நாம் பாடி' உய்யும் வழியை மகளிருக்கு உணர்த்துகின்ற மணிவாசகரின் வாக்கு இதையே கூறுகின்றது.

சாதி வித்தை அழகு குலம் பொருள் தொழில் என்ற அடிப்படையில், உலகில் காணப்படும் வேறுபாடுகள் பக்தர்களுக்குக் கிடையாது என்று குறிப்பிடுகிறது பிறிதொரு நாரத சூத்திரம். 'சாதி குலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்...' என்ற திருவாசக வரிகளில், ஞான நெறி நின்றார்க்கு இவை தடை என்பது உணர்த்தப்பட்டது.

பக்தி நெறியின் மேன்மையைக் கூறும் நாரத பாஞ்சராத்திரம், பக்தி 'பட்டத்து அரசி' எனவும், முத்தியும் பிற போகங்களும் அதன் 'பணிப்பெண்கள்' எனவும் கூறுமாற்றால் பக்தி நெறியின் பெருமையை உணரலாம். மாணிக்கவாசகர் போன்ற சீரடியார்களின் சிவானுபவங்கள், இந்நெறியின் சிறப்பினைப் பெரிதும் உணர்த்த வல்லன என்பது தெளிவு.

---

## அவர்கண்டீர் யாம்வணங்கும் கடவுளாரே!

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து,
தரணியொடு வானாளத் தருவ ரேனும்,
மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லோம்,
மாதேவர்க்கு ஏகாந்தர் அல்லர் ஆகில்;
அங்கமெலாம் குறைந்தழுகு தொழு நோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்,
கங்கைவார் சடைக் கரந்தார்க்கு அன்பர் ஆகில்
அவர்கண்டீர் யாம்வணங்கும் கடவு ளாரே!

—திருநாவுக்கரசர்.

முன் தொடர்ச்சி

# திருவாய்மொழிப் பிள்ளை

திரு இரா. அரங்கராசன், M.A., B.T.,
தமிழ்த்துணைப் பேராசிரியர், மதுரைக்கல்லூரி,
மதுரை.

## எம்பெருமானுர் சந்நிதியில் தொண்டு :

திருமலையாழ்வார் திருநாராயணபுரத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுரைச் சேவித்து அவருடைய திருவருளை முன்னிட்டு யதுகிரி நாச்சியாரையும், செல்வப் பிள்ளையையும் சேவித்து உள்ளம் பூரித்தார். பின்னர் எம்பெருமானுர் சந்நிதியிலேயே எழுந்தருளியிருந்து ஆச்சான் பிள்ளையிடம் ஈடு முப்பத்தாறுயிரப் பேருரை முழுதினையும் பாடங் கேட்டார். திருமலையாழ்வாருடைய ஆசாரிய பக்தியைக் கண்டவர் வியந்தனர். ஆசாரியரான நாலூர் ஆச்சான் பிள்ளையும் சீடருடைய ஞானபக்தி வைராக்கியங்களைக் கண்டுகந்து விசேஷ அபிமானம் பண்ணியருளித் தம்முடைய திருவாராதனமான 'இளவாயர் தலைவனையும்' பிரசாதித்து அருளினுர். திருவாய்மொழியின் அரும்பொருளை நெஞ்சில் நன்ருகத் தேக்கிக் கொண்ட திருமலையாழ்வார், நம்மாழ்வாரைத் திருவடி தொழப் பெரிதும் விரும்பி அப்போதே புறப்பட்டருளி ஆழ்வார் எழுந்தருளியிருந்த 'திருக்கணம்பி' என்ற படைவீட்டுக்கு நடந்து ஆழ்வாரைக் கண்டுகந்து, அவர் திருவடிகளில் தம் தாபம் எல்லாம் தீரும்படியாக வீழ்ந்து வணங்கினுர்.

## நம்மாழ்வாருக்கு அடிமை செய்தல்:

நம்மாழ்வாரை மீண்டும் திருக்குருகூரில் எழுந்தருளச் செய்ய உறுதி பூண்டார். காடு மண்டிக்கிடந்த பாதைகளைத் திருத்தி நாடாக்கி, நல்லார் பலர்வாழ் திருக்குருகூர்ஆக்கி, நம்மாழ்வாரை எழுந்தருளச் செய்து அங்கே உறங்காப்புளியின் நீழலில் ஆழ்வாரை மீண்டும் திருப்பிரதிஷ்டை செய்தார். திருமலையாழ்வாருடைய பக்திமேலீட்டைப் பாராட்டி ஆழ்வாரும் அவருக்கு 'சடகோபதாசர்' என்ற சிறப்புப் பெயரை வழங்கினுர். சடகோபதாசர் திருக்குருகூரிலேயே எழுந்தருளியிருந்து ஆழ்வாருக்கு அனைத்துத் திருவிழாக்களையும் எடுத்து மகிழ்ந்தார்.

## விளாஞ்சோலைப் பிள்ளை :

ஒருசமயம் திருவனந்தபுரத்திற்குச் சென்று அங்கே வாழ்ந்து கொண்டிருந்த விளாஞ்சோலைப்பிள்ளையிடம் விசேஷார்த்தங்களைக் கேட்க வேணுமென்று திருவுள்ளமாய் அப்போதே விரைந்து சென்று அனந்தபுரம் அணுகி விளாஞ்சோலைப்பிள்ளை திருவடிகளில் வணங்கி நின்ருர். விளாஞ்சோலைப்பிள்ளையும் தமது ஆசாரியரான பிள்ளைலோகாசாரியரின் திருவடிகளையே தியானித்துக்கொண்டு சமாதியில் ஆழ்ந்திருந்தார். அவருடைய திருமேனியில் சிலந்தி வலைகட்டி வாழ்வதைக் கண்ட சடகோபதாசர் மனம் உருகினுர். விளாஞ்சோலைப்பிள்ளை திருக்கண்களை விழித்து நோக்கிச் சடகோபதாசரை அருகணைத்து நலமுசாவினுர். தாம் பிள்ளைலோகாசாரியரிடம் கேட்ட திவ்விய கிரந்தமான ஸ்ரீவசன பூஷணத்தின் ஆழ்பொருளைச் சுருக்கமாக ஏழே வெண்பாக்களில் அடக்கி அதனைச் சடகோபதாசருக்கு உபதேசித்தார். அந்நூலே சப்த காதை என்று வழங்கப்படுகிறது. விளாஞ்சோலைப்பிள்ளையிடம் விடைபெற்றுத் திருக்குருகூருக்கு மீண்டும் எழுந்தருளினுர் சடகோபதாசர்.

ஒருநாள் திருவனந்தபுரத்துத் திருக்கோயிலில் நம்பூதிரிமார்கள் திருவாராதனம் செய்து கொண்டிருந்தபோது விளாஞ்சோலைப் பிள்ளை கருவறையும் கடந்து புகுந்து, அனந்த சயனனின் திருவடியருகே நிற்கக் கண்டனர். புலையரான விளாஞ்சோலைப்பிள்ளை உள்ளே புகுந்ததால் திருக்கோயில் தூய்மையிழந்தது என்று ஆரவாரமிட்டு, நம்பூதிரிமார்கள் கோயிலைத் திருக்காப்பிட்டுக் கொண்டு வெளியே புறப்பட்டனர். அப்போது அற்புதம் ஒன்று நிகழ்ந்தது. விளாஞ்சோலைப் பிள்ளை தாம் வாழ்ந்து வந்த சோலையில் இறைவன் திருவடி சேர்ந்துவிடவே அவருடைய அன்பர்கள் அருளிச் செயலை ஓதிக்கொண்டு திருமாலைக்காகக் கோயில் திருவாசலில் நிற்பதைக் கண்ட நம்பூதிரிமார்கள் திடுக்கிட்டனர். உண்மை புலனுயிற்று. விளாஞ்சோலைப் பிள்ளையை எம்பெருமான் தன் திருவடிகளில் சேர்த்துக் கொண்டான். இவ்வதிசயச் செய்தியைச் சடகோபதாசர் கேட்டு விளாஞ்சோலைப் பிள்ளைக்குச் சிஷ்ய புத்திரர்கள் செய்யும் கிருத்தியங்கள் அனைத்தையும் ஒன்று தப்பாமல் நடத்தினுர். அப்போது சடகோபதாசர்

அருளிச் செய்த ஒரு வெண்பா விளாஞ்சோலைப் பிள்ளையிடம் அவர் கொண்டிருந்த மதிப்பைக் காட்டுகிறது.

வாழி நலன்திகழ் நாரணதாதன் வடிவும்
வாழி அவன் அமுத வாய் மொழிகள்-வாழியவே
ஏறு திருவுடையான் எந்தை உலகாரியன் சொல்
தேறு திருவுடையான் சீர்.

விளாஞ்சோலைப் பிள்ளையின் இயற்பெயர் நலன்திகழ் நாரணதாசர் ஆகும். 'இழி குலத் தவர்களேலும் எம்மடியார்களாகில் கொடு மின் கொண்மின்' என்ற தொண்டரடிப்பொடி யாழ்வாரின் ஆணையை நிறைவேற்றிய பெருமை சடகோபதாசரான திருவாய் மொழிப் பிள்ளைக்கே அமைந்தது!

### சிக்கில் வாசம் :

திருமலையாழ்வார் சிலகாலம் சிக்கில் என்ற சிற்றூரில் வாழ்ந்தார். அப்போது கோட்டூர் அழகிய மணவாளப் பெருமாள்பிள்ளை என்ற பெரியார் திருமலையாழ்வாரின் சீடரானுர். மற்ருெரு பெரியாரான திகழக்கிடந்தான் திரு நாவீறுடைய பிரான்தாதர் அண்ணரும் திரு மலையாழ்வாரை ஆசிரயித்தார். அவர் கோட் டூர்ப் பிள்ளையின் திருக்குமாரத்தியாராகிய சீரங்கநாச்சியாரைத் திருமணம் புணர்ந்து கொண்டு சிக்கில் சிற்றூரிலேயே திருமலையாழ் வாருக்குத் திருத்தொண்டுகள் செய்துகொண்டு வாழ்ந்திருந்தார். கோட்டூர்ப்பிள்ளையும் தம் மருகருக்கு விசேஷ ரஹஸ்யங்களையும் அருளிச் செய்து சில ஆண்டுகள் கழிந்தவாறே திரு நாட்டுக்கு எழுந்தருளினுர். அப்போது சீரங்க நாச்சியார் திருவயிறு வாய்த்திருந்தார். அவ ருடன் கணவரான அண்ணரும் ஆழ்வார் திருநகரிக்கு எழுந்தருளி நம்மாழ்வாருக்கு அணுக்கத் தொண்டுகள் பல செய்து வாழ்ந் தார்.

### மணவாள மாமுனிகள் திருஅவதாரம் :

உறங்குவான்போல் உயோகு செய்யும் எம் பிரானுன திருமாலும் மீண்டும் ஸ்ரீவைஷ்ணவ தரிசனம் ஓராண் வழியாய் வருகிறபடியைக் கண்டு எம்பெருமானுரைப்போல உலகம் எல் லாம் வாழும்படி செய்யத்தக்க ஒரு மகனைத் திரு அவதரிக்கச் செய்யத் திருவுள்ளங் கொண் டான். அருகிருந்த திருவனந்தாழ்வானை அழைத்துப் பூவுலகு சென்று அதனைத் திருத்து மாறு ஆணையிட்டான். திருவனந்தாழ்வானும் தம்முடைய திருவவதாரத்திற்குத் தக்க இடம் தேடி ஆழ்வார் திருநகரியிலே அண்ணர் தேவி களின் கர்ப்பத்தை அடைந்து கலி 4472 சாதா ரண வருடம் ஐப்பசித் திருமூலத்தில் விண்ணு லகும் மண்ணுலகும் வாழ அண்ணருக்குத் திருக்குமாரராகத் திரு அவதரித்தருளினுர். அந்த தெய்வீகக் குழந்தையே நாடும் நகரமும் நன்குடன் போற்றும் நம் மணவாளமாமுனி கள். இவருடைய பிள்ளைத் திருநாமம் அழகிய மணவாளப் பெருமாள்நாயனுர்.

### மாமுனிகளும் திருவாய்மொழிப் பிள்ளையும் :

நாயனுரும் ஆழ்வார் திருநகரியில் எழுந்த ருளியிருந்த திருவாய்மொழிப் பிள்ளையை ஆசிரயித்து அவரிடம் சகலார்த்தங்களையும் கேட்டு ஆசிரியரின் திருவடிகளில் குற்றேவல் செய்வதே குறிக்கோளாகக் கொண்டார். திரு வாய்மொழிப்பிள்ளையும் அறிய வேண்டிய அர்த் தங்களையெல்லாம் அறிவித்து இறுதியில் எம் பெருமானுர் திருவடிகளே உபாயம் என்ற அறி வுரையை நாயனுருக்கு உபதேசித்தார். நாய னுருக்கு எம்பெருமானுர்மீது அன்பு அதிச யித்து விளைந்தது. அதன் விளைவாக நாயனுர் இராமாநுசருக்குத் தனிக் கோயில் ஒன்றைத் திருக்குருகூரில் எழுப்பி, அதைச்சுற்றி நான் மறையோர் பலரைக் குடியிருத்தி அதற்கு இரா மாநுச சதுர்வேதிமங்கலம் என்ற பெயரை யும் சார்த்தியருளினுர்.

நாயனுரின் தொண்டினைப் பாராட்டி அவ ரிடம் மிகுந்த பரிவைக் காட்டினுர் திருவாய் மொழிப்பிள்ளை. ஒருநாள் திருநந்தவனத்தில் விளைந்த பச்சைக் கறியமுதை நாயனுருக்கு அனுப்பியருள அவரும் 'இப்படிச்செய்வதோ?' என்று விண்ணப்பஞ் செய்தார். பிள்ளையும், ''உம்மைப்போல ஒரு பிள்ளையைப் பெருததா லேயே இத்தனைநாள் நாம் அர்ச்சாவதாரத் திலே மண்டிக்கிடந்தோம். இனி உமக்கே கறியமுது அனுப்பி மகிழ்வோம்'' என்று விடை பகர்ந்தார்.

நாயனுரும் திருவாய்மொழிப்பிள்ளையும் ஒருவிசை குந்திநகருக்கு எழுந்தருளித் தெய்வ நாயகனைத் திருவடி தொழுதனர். அங்கு நாயனுருக்குத் திருவாய்மொழிப் பேருரையான ஈட்டினை உபதேசித்தார் திருமலையாழ்வார். நாயனுரின் அறிவுத் திறனைக் கண்டு சிலர் அந்நாளில் பொருமை கொண்டனர். சர்வக் ஞரான பிள்ளை அதனை அறிந்து நாயனுர் அவ தார புருஷர் என்பதை விளக்கினுர். அதனைக் கண்கூடாகக் காணும் பேறும் குந்தி நகரில் கிடைத்தது ஆசாரியரான திருமலையாழ்வா ருக்கு. ஒருநாள் மணவாளமாமுனிகள் குந்தி நகர்த் திருக்கோயிலில் ஆயிரம் பைந்தலை விரித்த ஆதிசேடனுகக் காட்சி தந்ததைக் கண்டு அஞ்சிய பொருமைக்காரர்கள் திருவாய் மொழிப் பிள்ளையிடம் சென்று செய்தியை விண்ணப்பஞ் செய்தனர். பிள்ளை கோயி லுக்குட் புக்கவாறே மாமுனிகள் புன்முறுவல் பூத்து வணங்கி நின்றுர். பிள்ளையின் வேண்டு கோளுக்காக மாமுனிகள் அவருக்கு மற்று

மொருமுறை ஆதிசேடனுகக் காட்சி நல்கியருளினர். இன்றும் குந்திநகரில் மாமுனிகள் சேஷாவதாரராகக் காட்சியளிப்பதை அன்பர்கள் காணலாம்.

ஒருநாள் ஒரு திருவாதிரை நட்சத்திரத்தில் பிள்ளையும் சீடர்களும் அமுது செய்து கொண்டிருந்தபோது, 'இன்றே எதிராசர் இவ்வுலகில் தோன்றியநாள், இன்றே கலியிருள் நீங்குநாள்' என்று ஈடுபட்டருளி மேல் பாசுரத்தைப் பூர்த்தி செய்ய மாட்டாமல் அதனையே பலகாலும் அருளிச் செய்துகொண்டிருந்தார். அருகிருந்த மாமுனிகள், '...இன்றேதான் வேதியர்கள் வாழ விரை மகிழோன் தான்வாழ வாதியர்கள் வாழ்வசங்கு நாள்' என்று வெண்பாவைத் தலைக்கட்டியருளினர். திருவாய்மொழிப்பிள்ளையும் 'வளர்த்ததனல் பயன்பெற்றேன்' என்று கூறி மாமுனிகளை நெடும்போது கொண்டாடினர். தளிகைப் பிரசாதங்களையும் தமது திருக்கைகளினலேயே மாமுனிகளுக்கு வழங்கினர். மணவாளமாமுனிகள் ஆசிரியரின் பேரன்பைக் கண்டு வியந்து மனமுருகினர். அப்போது ஒரு பாடல் மலர்ந்தது.

செந்தமிழ் வேதத் திருமலையாழ்வார் வாழி
குந்திநகர்க் கண்ணல் கொடை வாழி—உந்தியசீர்
வாழி அவன் அமுதவாய் மொழி கேட்டப் பொருளில்
தாழும் நல்அன்பர்திருத் தாள்.

### திருவாய்மொழிப் பிள்ளை நோவுசார்த்துதல் :

திருவாய்மொழிப்பிள்ளை திருமேனி தளர்ந்து நோய்வாய்ப்பட்டிருந்தபோது, மணவாள மாமுனிகளை அருகே அழைத்து, ''வாரீர் நாயனுரே, நீர் ஆழ்வார் அருளிச் செயலை வளர்த்துப் போரவேணும். நீர் சம்ஸ்கிருத சாஸ்திரங்களில் பலகாலும் கண்வையாமல், ஸ்ரீபாஷ்யத்தை ஒருகால் கேட்டு, நமக்கும் எம்பெருமானுருக்கும் பிரியமாகத் திருவாய்மொழி முதலான அருளிச் செயல்களை ஓதுவதையே பொழுதுபோக்காகக் கொண்டு நம் முன்னேர்களைப் போலப் பெருமாளுக்கு மங்களா சாசனபரராகத் திருவரங்கம் பெரிய கோயிலிலே நித்தியவாசமாக எழுந்தருளியிரும்' என்று கூறி மாமுனிகளைத் தம் திருவடிகளைத் தொட்டுச் சூளுரைக்கச் செய்து பிள்ளைலோகாசாரியரின் திருவடிகளைத் தியானித்துக் கொண்டே திருநாட்டுக்கு எழுந்தருளினர்.

திருவாய்மொழிப் பொருளை உலகில் பரப்புவதையே குறிக்கோளாகக் கொண்டு திகழ்ந்த திருவாய்மொழிப்பிள்ளையின் திருவவதாரத்திருநாளும் வைகாசி விசாகம் என்று அறியத்தக்கது. பராங்குசதாசராகிய பெரிய நம்பி எம்பெருமானுருக்கு ஆசாரியரானர். சடகோபதாசராகிய திருவாய்மொழிப்பிள்ளை எம்பெருமானரின் மறுஅவதாரமாகிய மணவாள மாமுனிகளுக்கு ஆசாரியரானர்.

'யதீந்திரப் பிரவணப்பிரபாவம்' என்ற நூலில் பிள்ளைலோகம்சீயர், திருவாய்மொழிப் பிள்ளையின் பெருமையைப் பின்வருமாறு குறிப்பிடுகிறர். ''பரமாசாரியரான நம்மாழ்வாரையும் அவர் அடிபணிந்துய்ந்தவரான எம்பெருமானுரையும் திருநகரியிலே பிரதிஷ்டைசெய்து அனைத்தழகும் கண்டருளப் பண்ணின தன்னேற்றமும், ஆழ்வார்கள் அருளிச்செயலை ருசி விசுவாச பூர்வகமாகப் பிரவர்த்திப்பித்துப் போந்த தன்னேற்றமும் திருவாய்மொழிப்பிள்ளை ஒருவருக்கே உள்ள தொன்றிறே''.

### குந்தி நகரின் இன்றைய நிலை :

கொந்தகைத் திருக்கோயிலில் திருவாய்மொழிப்பிள்ளை திருக்கையில் செங்கோலுடன் எழுந்தருளியிருக்கிறர். இத்திருக்கோயில் கர்ப்பக்கிரகம் அர்த்த மண்டபத்துடன் சிறு கோயிலாகக் காணப்படுகிறது. சிவகங்கை அரசியாராக இருந்த காத்தம்மைநாச்சியார் காலத்தில் கொந்தகைக் கிராமம் பீஷர்துரை என்ற வெள்ளையருக்கு உரிமையாயிருந்தது. அவர் மரணம் அடைந்த பிறகு அவருடைய பிரதிநிதியான போக்ஸ் துரையின் ஆட்சியில் கொந்தகை இருந்தபோது, சிறுகோயிலாக இருந்ததைக் கற்றளியாக மாற்றினர்கள். கி.பி. 1919-ல் சிறப்பான முறையில் பிரதிட்டை நடந்ததாக அறிகிறேம்.

அண்மையில் சில காரணங்களால் திருவாராதனம் இல்லாமல் பூட்டிக்கிடந்த இந்தத் திருக்கோயிலை அன்பர்கள் திறந்து வழிபாடு முதலியன நடைபெறத் தகுந்த முயற்சிகளைச் செய்து வருகின்றனர்.

சில மாதங்களுக்கு முன் உற்சவ மூர்த்தியையும், இரு நாச்சிமார்களையும் சிலைத் திருடர்கள் களவு கொண்டனர். காவல்துறையினரின் முயற்சியால் வைகையாற்றில் புதைக்கப்பட்டிருந்த சிலைகள் மீட்கப்பட்டன. அவற்றை மறுபடியும் கோயிலில் பிரதிட்டை செய்ய முயற்சிகள் நடைபெறுகின்றன. திருக்கோயிலையும் திருப்பணி செய்ய வேண்டியிருக்கிறது. அதற்காக அறங்காவலர் குழுவும், திருப்பணிக்குழுவும் அமைக்கப்பட்டிருக்கின்றன. திருவாய்மொழிப் பிள்ளையின் திருவவதாரத் திருத்தலத்தைப் போற்றும் நற்பணியில் அன்பர்களும் அடியார்களும் ஈடுபட வேண்டியது தலையாய கடமை. *

# மாலை மாற்றுப் பதிகம்

(மூலமும் விளக்க உரையும்)

முன்னுரை :

திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகங்கள் பலவற்றுள் மாலைமாற்றுப்பதிகம் என்பதும் ஒன்று. இஃது, ஒரு மாலையின் நுனியை மாற்றிப் பிடிப்பதுபோல ஒரு பாடலின் முதல் வரியைத் தொடக்கத்திலிருந்து இறுதிவரை படித்து அதனையே பின்னர் இறுதியில் இருந்து தொடக்கம் வரையில் மாற்றிப் படிக்க, இரண்டாம் வரியாக அமையும் ஒரு வகைச் செய்யுள்!

இராபர்ட் பிரவுனிங் என்னும் ஆங்கிலக் கவிஞர், தம்மிடம் வந்து தாம் இயற்றிய கவிதை ஒன்றின் பொருள் குறித்து வினவிய நண்பர் ஒருவர்க்கு, ''ஒருகாலத்தில் அப்பாடலின் பொருளை அறிந்தவர்கள் இருவர் இருந்தனர். ஒருவர் கடவுள்; இன்னொருவர் இராபர்ட் பிரவுனிங். ஆனல் இப்பொழுதோ கடவுள் ஒருவருக்குத்தான் அப்பாடலின் பொருள் வெளிச்சம்'' (''Once there were two people who knew it, God and Robert Browning, but now God only knows it'') என்று மறுமொழி பகர்ந்ததாக அறிஞர்கள் கூறுவர். அதுபோலப் பாடிய கவிஞர்களே கூட, சில சமயங்களில் தாம் பாடிய பாடலின் பொருளை உணரவும் கூறவும் முடியாமற் போவது உண்டு. மாலை மாற்றுப்பதிகம், அங்ஙனம் எளிதிற் பொருள் விளங்காத அரிய செய்யுள் வகைகளுள் ஒன்று. இத்தகைய கடினமான அருமைமிக்க கலைநலப் பாடல்களை இயற்றுந் திறம், மிகவும் சிறந்த புலமை வித்தகம் உடையவர்களுக்கே இயலுவதாகும்.

கி.பி.6-7ஆம் நூற்றுண்டுகளில் வாழ்ந்திருந்து காவ்யதர்சம் எழுதிய தண்டியும், கிராதார்ச்சுனீயம் இயற்றிய பாரவியும், சிசுபாலவதம் பாடிய மாககவியும் போன்ற வடமொழிப் புலவர்கள், இன்னேரன்ன சொல்விற்பனம் (Verbal legerdemain) மிக்க பாடல்களை இயற்றுதலில், மிக்க ஆர்வம் காட்டி வந்தனர்.

எனவே, நம்பியாண்டார் நம்பிகள் கூறுமாறு போல, ''ஆறதேறும் சடையான் அருள் மேவ அவனியர்க்கு வீறதேறும் தமிழால் வழி கண்டவர்'' ஆகிய திருஞானசம்பந்தப் பெருமான், தாமும் தாம் வாழ்ந்திருந்த அக்காலத்தின் நிலைமைக் கேற்பக் கி.பி.6-7-ஆம் நூற்றுண்டுகளில், அங்ஙனம் தமிழிற் சில வகைப் பதிகங்களைப் பாடியருளினர். அவற்றுள் இம் 'மாலைமாற்றுப்பதிகம்' சிறப்புடையதொன்றுகத் திகழ்கின்றது. மிகக் கடினமும் சிக்கலும் வாய்ந்து பொருள் உணர்தற்கு அரிதாக இருக்கும் பதிகங்களுள் இதுவும் ஒன்று. இதன் பொருளை ஈண்டு இயன்ற அளவு ஒரு சிறிது சுருங்கக் காண்போம்.

யாமாமாநீ யாமாமா யாழீகாமா காணுகா
காணுகாமா காழீயா மாமாயாநீ மாமாயா

இதன் பொருள் :

யாம்-சிற்றுயிர்கள் ஆகிய நாங்கள்
ஆமா-கடவுள் என்பது பொருந்துமோ?
நீ-நீ ஒருவனுமே கடவுள் என்றல்
ஆம் ஆம்-பொருந்தும், பொருந்தும்;
மா- பெரிய
யாழீ-யாழை ஏந்தியிருப்பவனே!
காமா-அனைவராலும் விரும்பப்படுபவனே!
காண்நாகா-காணத் தகுந்தவாறு பாம்புகளை அணிந்துள்ளவனே!
காணு-காண முடியாதவாறு
காமா-மன்மதனை(அனங்கனுக) ச் செய்தவனே!
காழீயா-சீர்காழிக்குத் தலைவனே!
மாமாயா-பெரிய மாயைகளைச் செய்தலில் வல்லவனே!
மா-கரிய (கொடிய)
மாயா-மாயையினின்றும்
நீ-என்னை நீக்கிக் காத்தருள்வாயாக!

விளக்கக் குறிப்பு :

'பிரமமே உயிர், உயிரே பிரமம்' எனத் துணிந்து, யாங்களே கடவுள் என்று கூறுவோரும் உளராகலின் 'யாம் ஆமா? நீ ஆம் ஆம்'

என வலியுறுத்திக் கூறியருளினர். ''வேதத் தொலிகொண்டு வீணை கேட்பார் வெண்காடு மேவிய விகிர்தனுரே'' எனவும், ''வருங்கடல் மீள நின்று எம் இறை நல்வீணை வாசிக்குமே'' எனவும் தேவாரப் பாடல்களில் வருதலின், இறைவன் யாழ் அல்லது வீணை ஏந்தியுள்ள திறம் உணரப்படும். 'வீணு தட்சிணுமூர்த்தி' என்னும் திருவுருவம் உள்ளமையும் கருதுக. இனி 'யாளி' என்னும் சொல் 'யாழி' எனத் திரிந்து, விளிவேற்றுமையில் 'யாழீ' என வந்தது எனினுமாம். யாளி (சரபம்) போன்றவனே என்பது அதற்குப் பொருள். காமம்-விருப்பம். காமர்-அழகு. வியத்தகு பல திருவருட்செயல்களைச் செய்தலின் இறைவனை ''மாமாயா'' என்ருர். மா-திருமகள், மாயன்-திருமால் எனக் கொண்டு, திருமாலைத் திருவுருவின் ஒரு பகுதியிற் கொண்டுள்ளவனே! எனவும் சிலர் பொருள் கூறுவர். நீ-நீக்கு. (1)

யாகாயாழீ காயாகா தாயாராரா
தாயாயா
யாயாதாரா ராயாதா காயாகாழீ
யாகாயா

இதன் பொருள் :

யாகா-வேள்விப் பயனுக விளங்குபவனே!
யாழீ-யாழ் இசைப்பவனே!
காயா-அருளுருவத் திருமேனிகள் எடுப்பவனே!
காதா-'காதுதல்' ஆகிய அழித்தற் ரெழிலைச் செய்பவனே!
யார் ஆர்-எத்தகையவர்களுக்கும்
ஆ தாய் ஆயாய்-ஆகின்ற தாய் ஆயினவனே!
ஆயா-ஆராய முடியாத
தார் ஆர் ஆயா-ஆத்திப் பூவைமாலையாகக் கொண்டவனே!
தாக ஆயா-வேட்கையுற்ற தாருக வனத்து முனிபத்தினியர் ஆகிய கூட்டத்தையுடையவனே!
காழீயா-சீர்காழி இறைவனே
யா-(துன்பங்கள்) எவற்றினின்றும்
கா-எம்மைக் காத்தருள்க.

விளக்கக் குறிப்பு :

யாகம்-வேள்வி. காயம்-உடம்பு, திருமேனி. காதுதல்-கொல்லுதல் ஆர்-ஆத்திப்பூ. தார்-மாலே. தாகம்-வேட்கை. ஆயம்-கூட்டம். 'தாக+ஆயா' என்பது 'தாகாயா' என வந்தது. (2)

தாவாமூவா தாசாகா ழீநாதாநீ யாமாமா
மாமாயாநீ தாநாழீ காசாதாவா மூவாதா

இதன் பொருள் :

தாவா-அழியாத
மூவா-முதுமை அடையாத
தாசா-தசகாரியங்கள் என்பனவற்ருல் அடையும் பொருளாக உள்ளவனே!
காழீநாதா-சீர்காழிக்குத் தலைவனே!
நீ-அஞ்சி நீங்கத் தகுந்த (சுடுகாட்டில்),
யாமா-யாமம் ஆகிய நள்ளிரவில் நடனம் புரிபவனே!
மா-பெருமை மிகுந்தவனே!
மா மா-மாண்புமிக்க ஐராவணம் என்னும் யானையின்மேல்
யாநீ-ஏறிவருபவனே.
தாந ஆழி-கொடைத் தன்மையிற் கடல் போன்றவனே!
சா கா-சாதலினின்று காத்தருள்க.
கா சா-பொன்போன்ற ஒளியை யுடையவனே!
தா-எல்லா வரங்களும் தருக.
வா-எங்கள் முன்னே வருக.
மூ-எல்லாவற்றுக்கும் முற்பட்டவனே!
வாதா-காற்று முதலாகிய ஐம் பூதங்களின் வடிவாய் விளங்குபவனே.

விளக்கக் குறிப்பு :

தசம்-பத்து. 'தாசா' என்னும் சொல் அதினின்றும் தோன்றியது. தத்துவரூபம் தத்துவதரிசனம் தத்துவசுத்தி ஆன்மரூபம் ஆன்மதரிசனம் ஆன்மசுத்தி சிவரூபம் சிவதரிசனம் சிவயோகம் சிவபோகம் என்பன தசகாரியங்கள் எனப்படும். இப்பத்துவகைச் செயல்கள் மூலமாக இறைவன் அடையப்படுவானுதலின் 'தாசா' என்ருர். மா மா-பெருமையுடைய விலங்கு. அஃது இங்கு ஐராவணம் என்னும் யானையைக் குறித்தது. யாநம்-ஊர்தி, வாகனம். யாநீ-வாகனத்தையுடையவனே. 'தாநம்+ஆழி' தாநாழி என வந்தது. காசு-பொன், மணி. வாதம்-காற்று. (3)

நீவாவாயா காயாழீ காவாவானே
வாராமே
மேராவானே வாவாகா ழீயாகாயா
வாவாநீ

இதன் பொருள் :

நீவா-நீங்குதல் இல்லாத
வாயா-மெய்ப் பொருளானவனே!
கா-காவுகின்ற
யாழீ-யாழை யுடையவனே!
வான்நோ-கொடிதாகிய பிறவித்துன்பம்
வாராமே-எங்களை அடையாமல்
கா வா-வந்து காப்பாற்றுக.
வான்நோவாவா-தேவர்கள் வருந்தாதபடி
மேரா-மேருமலையை வில்லாகஏந்தியவனே!
காழீயா-சீர்காழி இறைவனே
காயா-ஆகாய வடிவினனே
வாவாநீ-நீ விரைந்து வருவாயாக !

விளக்கக் குறிப்பு :

நீவுதல்-நீங்குதல், அதனினின்று 'நீவா' என்னும் எதிர்மறைப் பெயரெச்சச் சொல் அமைந்தது. வாய்மை-மெய்ம்மை, மெய்ப் பொருள். வாய்மைப்பொருள் ஆகிய இறைவனை ஈண்டு 'வாயா' என விளித்தார். கா-காவுதல், சுமத்தல்; முதனிலைத் தொழிற் பெயர். 'கா யாழ்' என்பது சுமக்கப்படுகின்ற யாழ் எனப் பொருள் தரும். பிறவித் துன்பத்தின் கொடுமை பற்றி 'வான் நோ' என விதந்தார். வான்-தேவர்கள், ஆகு பெயர். மேருமலையை வில்லாக ஏந்தித் திரிபுரம் எரித்தமையினால் இறைவனை 'மேரா' என்றார். 'காயா' என்பது ஆகாயா என்பதன் முதற் குறை. (4)

யாகாலாமே யாகாழீ யாமேதாவீ தாயாவீ
வீயாதாவீ தாமேயா ழீகாயாமே லாகாயா

இதன் பொருள் :

யா-எப்பொருள்களுக்கும்
காலா-காலவடிவமாக உள்ளவனே!
மேயா-(எல்லாவற்றிலும்) மேவியிருப்பவனே!
மேதாவீ-அறிவில் மேம்பாடு மிக்கவனே
தாய் ஆவி-(எல்லோருக்கும்) தாயாகவும் உயிராகவும் விளங்குபவனே
வீயாதா-எக்காலத்தும் அழிவு இல்லாதவனே
வீ தாம் மே-கின்னரம் என்னும் பறவைகள் தாமே இசையில் மயங்கி வந்து விழுமாறு
யாழீ-யாழை மீட்பவனே
யாம்-யாங்கள்
மேல்-மேற்கொண்டு
ஆகு-ஆவனவற்றிற்காக
ஆயா-ஆராய்ந்து வருந்தாதபடி
கா-காத்தருள்க.

விளக்கக் குறிப்பு :

'யா' என்னும் வினைப் பெயர் ஈண்டு எஞ்சாமைக் குறிப்பின் வந்து, எல்லாப் பொருள்களையும் உணர்த்திற்று. 'காலன்' ஈண்டு இயமனைக் குறிக்காமல், கால தத்துவத்தை இயக்கி நிற்கும் இறைவனை யுணர்த்திற்று. 'மேவியவா' என்பது 'மேவா' என மருவி வந்தது. 'மேதாவி' என்பது விளிப்பொருளில் நீண்டது. இறைவன் அனைத்துயிர்களுக்கும் தாயாகவும் ஆவியாகவும் விளங்கி வருதலின், 'தாயாவீ' என்றார். 'வீதாமே யாழீ' என்றது, இறைவன் மீட்டியருளும் யாழின் இசையைக் கேட்டு, கின்னரம் அசுணம் முதலிய பறவைகள் தாமே வந்து கூடி இன்னிசை கேட்டு உருகி மயங்கி மகிழும் திறம் உணர்த்தியவாறு. வீ-பறவைகள், மே-மேவுகின்ற. (5)

மேலே போகா மேதேழீ காலாலேகா
லானையே
யேனலாகா லேலாகா ழீதேமேகா போ
லேமே

இதன் பொருள் :

மேலே-மார்க்கண்டேயரின் மீது,
போகாமே-கூற்றுவன் வெகுண்டு செல்லாமல்
தேழீ-அதட்டித் தெழித்தருளியவனே!
காலாலே-திருவடியினால்
கால்ஆனையே-காலனுக்கும் காலனாகி விளங்கினையே!

ஏல்-ஏற்றுக் கொள்ளத் தகுந்த
நால்-சனகர் சனந்தனர் சநாதனர் சனற்குமாரர் என்னும் நான்கு முனிவர்களுக்கும்
ஆகு-ஞானாசிரியனாக எழுந்தருளி
ஆல்-கல்லால மர நிழலில்
ஏலா-அவர்களை ஏற்றருளியவனே

காழீதே-சீர்காழியில் விளங்கும் முழுமுதற் றெய்வமே!
போலேமே-அடியேங்கள் நின் தொண்டர் திரளில் ஒருவரைப்போல் ஆக மாட்டோமா?

விளக்கக் குறிப்பு :

தெழித்தல்-அதட்டுதல். தெழீ-தேழீ என வந்தது; விளி வேற்றுமை. ஆகு+ஆல்+ஏலா -ஆகாலேலா என வந்தது. ஏல்-ஏற்றல்; முதனிலைத் தொழிற் பெயர். ஏலா-ஏற்றருளியவனே. மேகா-மேகத்தை மழை பொழியுமாறு செய்பவனே எனினுமாம். ''பயிர் விளைக்கும் புயல் அவன் காண்'' என்பது தேவாரம். போலேமே-போல ஆக மாட்டோமா? ஆகும்படி செய்தருள்க என்பது கருத்து. (6)

நீயாமாநீ யேயாமா தாவேழீகா நீதானே
நேதாநீகா ழீவேதா மாயேயேநீ மாயாநீ

இதன் பொருள் :

நீயா-நீங்குதல் இல்லாத
மாநீ-உமா தேவியை யுடையவனே
ஏயா-ஒப்பு இல்லாத
மாதா-தாயாக விளங்குபவனே
ஏழீ-ஏழு இசையின் வடிவாகத் திகழ்பவனே
கா நீதானே-நீயே எளிவந்து எம்மைக் காப்பாற்றுக
நேநேயம் மிகுந்த நெஞ்சினையே
தாநீ-இடமாகக் கொண்டருள்பவனே
காழீ-சீர்காழியில் விளங்கும்
வேதா-வேதங்களின் பொருளானவனே
மாய்-எங்களைக் கொல்லவரும்
ஆநீ-துன்பங்களை
மாயாயேநீ-நீ மாய்த்தருள மாட்டாயா?

விளக்கக் குறிப்பு :

நீ-நீத்தல், நீங்குதல். நீயா-நீங்குதல் இல்லாத. மாநீ-மானி என்பதன் விளி வேற்றுமை; மானம் உடையவள் மானி எனப்படுவள் ; கற்பின் மிக்க பெண்கள் அனைவரையும் குறிக்கும் இச் சொல், இங்கு உமாதேவியாரைக் குறித்து வந்தது. ஏய்தல்-பொருந்துதல் ; ஒத்திருத்தல். ஏயா-ஒப்பு இல்லாத. ஏழிசை-குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் என்பன. நே-நேயம், அன்பு அஃது ஆகுபெயராய் நெஞ்சத்தைக் குறித்தது. தாநீ -ஸ்தாநத்தையுடையவன் ; ஸ்தானம், தானம் -இடம். ஆநீ-ஹாநி, ஆனி, துன்பம். (7)

நேணவராவிழ யாசைழியே வேகதளேரிய
ளாயுழிகா
காழியுள்ளாயரி ளேதகவே யேழிசையாழவி
ராவணனே

இதன் பொருள் :

நே-நேயம் மிகுந்து
அணவர்-திருவடியை நெருங்கி நிற்கும் மெய்யடியார்களின்
ஆ-ஆவிகள்
விழ-தம் வயமற்றுக் கிடக்க
யா-யாத்துக் கட்டிய
ழியே-அருளால் அவிழ்த்தருள்பவனே
வேக-வேகத்தினையுடைய மானின்
அதள்ஏரி-தோலினை அழகுற அணிந்தருள் பவனே
அளாய-துன்பங்கள் கலந்த
உழி-இடங்களில்
கா-எம்மைக் காத்தருளக.
காழியுளாய்-சீர்காழிப் பதியில் வீற்றிருப்பவனே
அரு-மன்னிப்பதற்கு அரிய
ஏது-குற்றங்களை
இளவு-எம் சிறுமைத் தன்மையினல் யாம் செய்து விட்டோம்
அஃகவே-(ஆதலின்) அவை நின்னுல் பொறுத்தருளத்தக்கனவே ஆகுக.
ஏழிசை-ஏழிசைகளும் பாடுதலில் வல்ல
இராவணனே-இராவணனும் கூடத் தான் செய்த பெரும் பிழைகள் நின்னுற் பொறுக்கப்பட்டனன் அல்லனே?

விளக்கக் குறிப்பு :

அணவர்-அண்மையில் உள்ளவர்கள் ; அடியார்கள். அண்மை-அருகு, சமீபம். ஆ-ஆவி, ஆன்மா. விழ-அவிழ; முதற்குறை. சை-ஆசை; முதற்குறை. ழியே-அவிழியே, அவிழ்த்தருள்பவனே; முதற்குறை. வேகம்-வேகமாக ஓடும் மானைக் குறித்தது. அதள்-தோல். ஏரி-ஏர் (அழகு) என்னும் சொல்லடியாகப் பிறந்தது; அழகுபெற அணிந்தருள்பவன் என்னும் பொருளைக் குறித்தது. ஏது-ஏதம், குற்றம்; கடைக்குறை. இளவு-இளமைத்

தன்மை, சிறுமை, அற்பத்தனம். அஃகுதல்-நுணுகுதல், சிறியதாதல், பொறுக்கப்படுதல். யாழ-முன்னிலை அசைச்சொல். (8)

காலேமேமேலே காணீகா ழீகா லேமா லேமேபூ
பூமேலேமா லேகாழீ காணீகாலே மேலேகா

இதன் பொருள் :

காலே மேலே-எல்லாப் பொருள்களுக்கும் முதலும் முடிவுமாக இருப்பவனே.
காணீ-அடியார்களுக்குப் பெருஞ்செல்வமாக விளங்குபவனே
காழி-காழிப் பதியில் உள்ளவனே.
மாலே-எல்லோரையும் மயக்கம் செய்பவனே
மேபூ-மேன்மையுடன் பூத்த
பூமேலே-தாமரைமலரின்மேலே வீற்றிருக்கும் பிரமதேவனும்
மாலே-திருமாலும்
காலே மேலே-திருவடியையும் திருமுடியையும்
காண் நீகாழி-காண்பதை நீக்கிய உறுதிப்பாடு உடையவனே
கா-எம்மைக் காத்தருள்க.

விளக்கக் குறிப்பு :

கால்மேல்-முதலும் முடிவும். காணி-நிலம், சொத்து, பெருஞ் செல்வம். மால்-மயக்கம், மயக்கம் செய்பவன், பூமேல் ஏ(ய்)-தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன். காழ்-மரத்திலுள்ள வயிரம்; உறுதிப்பாடு. நீ-நீத்தல், நீக்குதல். பூமேல்ஏ(ய்)-தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனும், மாலே-திருமாலும் ஆக விளங்குபவனே. காழீ-அடியார்களைக் காத்தலில் உறுதிப்பாடு மிக்கவனே. காண்-எம்மைக் கடைக் கணித்தருள்; கண்டுகொள். ஈ காலே -நின் திருவடிகளை எமக்கு ஈந்தருள்க. மேலே கா-மேற்கொண்டும் (மேற்பிறவிகளிலும்) எம்மைக் காப்பாற்றுக எனவும் ஒருவாறு பொருள் கொள்ளலாம். (9)

வேரியுமேணவ காழியொயே யேனைநிணே மட ளோகரதே
தேரகளோடம ணேநினையே யேயொழிகா வண மேயுரிவே

இதன் பொருள் :

வேரியும்-வாசனையும்
ஏண்-பெருமையும்
நவம்-புதுமையும் கொண்ட
காழியொயே-சீர்காழிப் பதியில் உள்ளவனே
ஏனை-பிறிதாகிய வெறுப்பையும்
நீள்நேம்-நீண்ட நேயத்தையும்
அடு-அடுதலும்
அள்-அள்ளுதலும்
ஓகரது ஏ-யோகிகளினுடைய செயலேயாகும்.
தேரகளோடு-புத்தர்களின் சொற்களையும்
அமணே-சமணர்களின் சொற்களையும்
நினை-நினைத்தலையும்
ஏய்-அவர்களுடன் கூடுதலையும்
ஒழி-ஒழியும்படி செய்து
காவணம்(ஏ)—அந்நெறிகளில் யாம் சேராமல் எம்மைக் காக்கும் தன்மைகள்
உரிவே-உமக்கு உரியனவே யாகும்.

விளக்கக் குறிப்பு :

காழியோயே என்பது 'காழியொயே' என வந்தது. ஏனை-ஏனையது, மற்றையது, பிறிது. அஃது ஈண்டு வெறுப்பைச் சுட்டி வந்தது. நேம்-நேயம்; இடைக்குறை. வெறுப்பை நீக்குதலும், நேயத்தைப் பெருக்குதலும் யோகிகளின் செயல்கள் என்பது கருத்து. யோகர் என்பது ஓகர் என மருவி வந்தது ; 'யோக்கிய சத்தி' என்னும் தொடர் 'ஒக்கிய சத்தி' எனச் சிவஞானசித்தி (சுபக்கம் 138) யின் கண் வந்தாற் போல. தேரர்கள் என்பது தேரகள் என நின்றது. அடு அள் நினை ஏய் என்னும் முதனிலைகள், அடுதல் அள்ளுதல் நினைத்தல் ஏய்தல் என்னும் தொழிற் பெயர்ப் பொருளில் வந்தன. கா + வ(ண்)ணம்—காக்குந் தன்மை; இடைக் குறை. (பந்தலைக் குறிக்கும் காவணம் என்பது பிறிதொரு சொல்). உரியவே என்பது 'உரிவே' என மருவிற்று. (10)

நேரகழாமித யாசழிதா யேனனியேனனி ளாயுழிகா
காழியுளானின யேனியயே தாழிசயாதமி ழாகரனே

இதன் பொருள் :

நேர் - நேர்மைக் குணத்தினை
அகழ் ஆம்-அகழ்ந்து கல்வி எறிவது ஆகிய
இதய ஆசு-மனத்தின்கண் எழும் காம வெகுளி மயக்கம் என்னும் முக்குற்றங் களையும்
அழி-அழிக்க வல்லவனே, (அழித்தருள்க எனினுமாம்).
தாய்ஏல்-உலகுக்கெல்லாம் தாயாகும் தன்மையை ஏற்கத் தக்கவன்.
நல்நீயே-நல்லவன் ஆகிய நீ ஒருவனேயாம்.
நல்-நன்மை புரிவதில்
நீள்-உயர்வு மிக்கவனே
ஆய் உழிகா-தளர்ச்சி நேரும் இடத்து எம்மைக் காத்தருள்க.
காழியுளானின்-சீர்காழிப் பதியிலுள்ள சிவபிரானைப் பற்றிய
நையே-மன உருக்கத்தைத் தரும் இப் பாடல்களை
நினையே-நினைத்துப் பாடவே
தாழ் இசையா-ஒரு குறைவும் உண்டாகாது
தமிழ் ஆகரனே-தமிழுக்கு உறைவிடம் போன்ற திருஞான சம்பந்தன் உறுதி கூறுவது இது.

விளக்கக் குறிப்பு :

இதய + ஆசு + அழி இதயாசழி என வந்தது. தாய் + ஏல் + நல் + நீயே-தாயே னனியே என அமைந்தது. நீயே என்பது நியே எனக் குறுகிற்று. நல் + நீள் 'னனிள்' எனப் புணர்ந்து குறுகியது. ஆய்தல்-தளர்தல், துன் புறுதல். உழி-இடம், சமயம். ஆய் + உழி + கா-தளர்ந்த இடத்துக் காப்பாற்றுக. நைவு-மன உருக்கம்; பாடல்களுக்குப் பெயராயிற்று. 'காழியுளானின் + நையே + நினையே' என்பது காழியுளானினயேனினயே எனப் புணர்ந்து நின்றது. தாழ்வு + இசையா-தாழிசையா என அமைந்தது. ஆகரம்-உறைவிடம், நிலைக்களம். தமிழாகரன்-திருஞானசம்பந்தர் தம்மைக் குறிப்பிட்டுக் கொண்டபடி. இத் திருப்பதிகம் ஓதுபவர்க்கு உண்டாகும் பயன் கூறியவாறு. இவ்விறுதிப் பாடலைத் 'திருக்கடைக் காப்பு' என்பர். (11)

—ந. ரா. முருகவேள்

---

# யார் உனை அறியகிற்பாரே ?

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுதரும் ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்;
நீயலால் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றும்
திருப்பெருந் துறையுறை சிவனே!
ஒன்றும்நீ அல்லை ; அன்றிஒன் றில்லை ;
யார்உனை அறியகிற் பாரே?

—மாணிக்கவாசகர்.

# திருவாசகத்தில் விஞ்ஞானம்

'திருவாசகமணி'
திரு கே. எம். பாலசுப்பிரமணியம், B. A., B. L.,
தில்லைநகர், திருச்சி-18.

முன்னுரை :

திருவாசகம், சமயம் தத்துவம் பக்தி ஞானம் முதலிய பற்பல துறைகளில் ஒப்புயர் வற்றுத் தலைசிறந்து விளங்குகின்ற, உயரிய தெய்விக நூலாகும். சமயம் தத்துவம் பக்தி ஞானம் முதலிய துறைகளில் மட்டுமல்லாமல், விஞ்ஞானத்துறையில் நோக்கி ஆராய்ந்தாலும் கூட, திருவாசகமானது மிகவும் போற்றத் தக்கதாகச் சிறந்து திகழ்கின்றது. மாணிக்கவா சகப் பெருமான், தமது பக்தி உணர்ச்சியின் மேலீட்டாலும், சிவஞான ஆனந்த அனுபவ மேலீட்டாலும் அருளிச் செய்துள்ள அழகிய இனிய திருப்பாடல்களில், ஆங்காங்கே விஞ் ஞானத்துறை பற்றிய குறிப்புக்களும் சுடர் விட்டு மிளிரக் காண்கின்றோம்.

(1) பரிணாமக் கொள்கை :

தற்கால விஞ்ஞானக் கலை நூல்கள் பரி ணாமக் கொள்கை (Theory of Evolution) பற்றிய குறிப்பு, இற்றைக்குப் பல நூற்றாண்டு களுக்கு முன்னரே திருவாசகத்தில் அமைந் திருப்பது மிகவும் வியப்பைத் தருகின்றது. '' புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப், பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக் கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய் வல்லசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச் செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம் பெருமான்'' என வரும் திருவாசக அடிகளில், தற்கால விஞ்ஞானக் கலை பேசும் பரிணாமக் கொள்கையும் பேசப்பட்டிருப்பது கண்கூடு. ஆதியில் மலையின் அணுக்களிற் கண்ணுக்குப் புலப்படாது கிடந்த உயிர்கள், தாம் உடம்பு பெறத் தகுதியுள்ள காலத்தில், முதலில் புல் பூண்டு மரங்களாகிய நிலையியற் பொருள்க ளாகிப், பின் புழு எறும்பு மிருகம் மனிதர் முதலிய இயங்கியற் பிறவிகளாகப் பரிணமிக் கும் இயல்பின என்னும் விஞ்ஞான உண்மை இவ்வடிகளில் அமைந்துள்ளன என்பது தெளிவு.

(2) உடற் கூற்று நூல் :

திருவாசகத்தின் போற்றித் திருவகவலில் தன் தாயின் கருவில் தங்கி வளரும் ஒவ்வொரு குழவியின் ஆபத்துக்களை யெல்லாம் மாதவாரி யாக வருணித்துள்ள மாணிக்கவாசகரின் உடற் கூற்று நூல் ஞானத்தின் நுண்மை வியக்கத் தக்கதாகவுள்ளது. ''மானுடப் பிறப்பினுள் மாதாவுதரத்து, ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும், ஒரு மதித்தான்றியின் இருமை யிற் பிழைத்தும், இருமதி விளைவின் ஒருமை யிற் பிழைத்தும், மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும், ஈரிரு திங்களிற் பேரிருள் பிழைத் தும், அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும், ஆறு திங்களின் ஊறலர் பிழைத்தும் ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும், எட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்தும், ஒன் பதில் வருதரு துன்பமும் பிழைத்தும், தக்க தசமதி தாயொடு தான்படும் துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும் . . . '' என்கிறது திருவாசகம்.

(3) வானநூல் ஞானம் :

மாணிக்கவாசகப் பெருமானின் அக்காலத் திய வானநூல் ஞானம் இக்காலத்திலும் நம்மை வியப்புக் கடலில் ஆழ்த்துகிறது. தம் திருவாசகத்தின் திருவண்டப் பகுதியின் தொடக்கத்திலே அவர் பாடுகிறார் : ''அண் டைப் பகுதியின் உண்டைப் பிறக்கம், அளப் பரும் தன்மை வளப்பெரும் காட்சி, ஒன் றனுக் கொன்று நின்ற எழில் பகரின், நூற் றொரு கோடியின் மேற்பட விரிந்தன. இன் னுழை கதிரின் துன் அணுப்புரையச் சிறிய வாகப் பெரியோன்.'' இப்போது இந்த அடி களிற் குறிக்கப் பெற்றுள்ள வான நூல் பற்றிய விஞ்ஞான நுணுக்க உண்மைகளை ஒரு சிறிது நோக்குவாம்.

கோபர்னிக்கஸ் (Copernicus) என்னும் விஞ் ஞானியின் காலத்திற்கு முன்பு ஐரோப்பியர் கள் பூமி தட்டையானதென்றும், சூரியன்தான் பூமியைச் சுற்றி வருகிறதென்றும், கொண்டி ருந்த தவறான கொள்கையை மாணிக்கவாசகர் கொண்டு இருக்கவில்லை என்று நமக்குத்தெரி கிறது. அண்டப் பகுதிகளாகிய எல்லா உலகங் களுமே உண்டை அதாவது உருண்டையாக உள்ளன என்ற அவரது அக்கூற்றே இதற்குச் சான்றாகும். ஆதலால் அவரது விஞ்ஞான உணர்வு மிகவும் சிறந்த தற்கால உணர்வாக வே இருந்துள்ளது கண்டோம். ''உண்டைப் பிறக்கம்'' என்பது எண்ணிறந்த கோளங்களை யும் உடுக்களையும் குறிக்கின்றது. ''அளப்

பரும் தன்மை'' என்பது அவற்றை நாம் அளக்க முடியாது எனக் குறிக்கிறது.

நட்சத்திரங்கள் :

இந்த உண்டைப் பிறக்கம் என்பது நட்சத்திரங்களைக் குறிக்குமாஞல், அவற்றுள் நம் ஸ்தூலப் பார்வைக்கு அகப்படுவன 4,500 மட்டுமே என்று நவீன வான நூல் கூறுகிறது. ஆனல், மிக மிக ஆற்றல் வாய்ந்துள்ள நுண்ணிய தொலைநோக்குக் கருவியின் மூலம் நம் கண்ணுக்குப் புலப்படக் கூடிய நட்சத்திரங்களின் எண்ணிக்கை ஒரு நூறுகோடி என்கிறது இன்றைய வான சாத்திரம். இதே எண்ணிக்கையைத்தான் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு இருந்த மணிவாசகரும் ''நூற்றொரு கோடி'' அதாவது ஒரு நூறு கோடி என்று நுட்பமாகக் கூறியுள்ளார்.

இதில் இன்னொரு சிறப்பும் உள்ளது. ஒரு நூறு கோடி தான் உள்ளன என்று கூறுமல், ''நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன'' என்றும் திருவாசகம் கூறியுள்ளமைதான் வியப்புக்கு மேல் வியப்பாக விளங்குகின்றது. ஏன் எனில், இனி எவ்வளவு நுண்மை ஆற்றல் வாய்ந்த கருவிகளாலும் நம் கண்கள் காண இயலாத நட்சத்திரங்கள் இன்னும் எத்தனையோ நூறு கோடி உள்ளன என்னும் தற்கால விஞ்ஞானக் கருத்தாகவே இவர் கருத்தும் இருந்து உள்ளது. அத்துடன் நாள்தோறும் புதிது புதிதாக உடுக்கள் கண்டு பிடிக்கப்பட்டு வருதலை அறிந்தே ''மேற்பட விரிந்தன'' என்றுர் நம் அடிகளார்.

இத்தகைய அற்புதக் காட்சியின் அழகையும் பீட்டினையும் கண்டறிந்தவர் போலவே ''வளப்பெரும் காட்சி'' என்றும் கூறிப் போந்தார் நம் அடிகள்.

கோள அண்டங்கள் :

இரண்டாவதாக ''அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்'' என்ற சொற்றொடர் எண்ணற்ற உருண்டைவடிவான அண்டங்களைக் குறிப்பாகக் கொண்டு ஆராய்ந்தாலும், மணிவாசகரது விஞ்ஞான அறிவின் மாட்சி நமக்கு நன்ருக விளங்குகிறது. பிரிட்டிஷ் தலைமை வானநூல் நிபுணர் (Astronomer Royal, Sir Harold Spencer Jones), என்பவர் 6–1–47 அன்று, டில்லி பல்கலைக் கழகத்தில் தம் சொற்பொழிவில், ஆயிரம் மில்லியனுக்கும் மேற்பட்ட பிரமாண்டங்கள் உள்ளன என்றும், அவைகளுள் ஒவ்வொன்றும் எத்தனையோ நூருயிரம் மில்லியன் விண்மீன்களைக் கொண்டுள்ளன என்றும் கூறுகிருர் (1). இதே கருத்தைத்தான் மணிவாசகர் ''ஒன்றனுக்கொன்று நின்றெழில் பகரின் நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன'' என்று தம் திருவாசகத்தில் ஒன்பதாம் நூற்ருண்டிலேயே கூறியருளியுள்ளார். பத்து மில்லியன் என்பது ஒரு கோடியாகும்; ஆயிரம் மில்லியன் என்பது நூறு கோடியாகும்.

சூரியன் :

சூரியனிடத்திலுள்ள ஒளியும் வெப்பமும் அதனிடம் இயற்கையாக உள்ளனவா அல்லது அவை வேறு இடத்திலிருந்து அதற்குக் கிடைக்கின்றனவா? என்ற கேள்விக்குத் தற்கால விஞ்ஞானிகளால் இன்னும் உறுதியான, இறுதியான விடை கொடுக்க முடியவில்லை. ஆனாலும் ஒரு விஞ்ஞானி, ''சூரியனில் உள்ள அணுக்கள் தொடர்ந்து வெடித்துக் கொண்டோ அல்லது இணைந்து கொண்டோ உள்ளன, இவ்விரண்டில் எது நிகழ்வதாயினும், அது வெப்ப ஆற்றலை வெளியிட்டுக் கொண்டுள்ளது என்பது தான், நம் அறிவிற்குப் பொருந்தக்கூடிய சிறந்த விளக்கமாகும்'' (2) என்று முடிவு கட்டுகிருர். ''சூரியனில் உள்ள பரமாணுக்கள் அனைத்தும் இடைவிடாது வெடித்துச் சிதறிய வண்ணமோ அல்லது ஒட்டிக் கலந்த வண்ணமோ உள்ளன. அதன் பயனுகச் சூரியனுக்கு வெப்ப சக்தி கிடைக்கின்றது'' என்பது அவர் கூற்று. பூமிக்குக் கிடைக்கும் சக்தியில் மிக மிகப் பெரிய அளவில் கிடைக்கும் சக்தி வான வெளியிலிருந்து பாய்ந்து வந்து பூமி மீது தாக்கி விழும். இந்த அண்டவெளிக் கிரணங்கள் என்பவை எங்கிருந்து வருகின்றன என்பது, நீண்ட காலச் சர்ச்சைக்குப் பிறகு இப்போது ஒரு விதத்தில் உறுதியாக்கப்பட்டுள்ளது. 1952-இல் (Dr. Martin Pomerant) என்னும் அமெரிக்க விஞ்ஞானி, 'இந்த அண்டவெளிக் கதிர்கள் என்னும் கிரணங்கள் சூரியனிடம்தான் தோன்றுகின்றன என்ற உண்மையை உறுதிப்படுத்த உறுதியான சான்றுகள் பல உள்ளன'' என அறுதியிட்டுக் கூறியுள்ளார்.

---

(1) "There are probably a thousand million separate universes, each containing perhaps something like one hundred thousand million stars and many more beyond our range of vision".

—Sir HEROLD SPENCER JONES.

எனவே இன்றைய விஞ்ஞான முடிவின்படி, சூரியனில் உள்ள ஒளியும் வெப்பமும் அல்லது சக்தியும் அண்டவெளிக் கதிர்கள் என்னும் சக்திக் கிரணங்களும் சூரியனிடத்தேயே உள்ளன என்பது பெறப்படுகின்றது. சூரிய ஒளியும் சக்தியும் பரமாணுக்களால் உற்பத்தியாவதையும் முன்பு கண்டோம். அப்படியானால், இந்த அண்ட வெளிக் கதிர்கள் என்பவை யாவை? அவற்றின் இலக்கணம் யாது?

அமெரிக்காவில் யேல் பல்கலைக் கழகப் பௌதிகப் பேராசிரியர் எர்னஸ்ட் சி. போல்லர்ட் (Ernest C. Pollard) கூறுகிறார்; ''தீவிரச் சக்தியோடு மிக வேகமாகப் பாய்கின்ற பரமாணுக்கள் தாம் அண்டவெளிக் கதிர்கள் என்பவை. சக்தியின் பரிபூரண ஆற்றலே அண்டவெளிக் கதிர்கள். அணுக்குண்டின் ஆற்றலைவிட அண்டவெளிக் கதிர்கள் பல்லாயிரம் மடங்கு அதிக ஆற்றல் உள்ளவை''. இது அவர் கூற்று. எனவே இந்தச் சக்திக் கிரணங்களாகிய அண்டவெளிக் கதிர்கள் என்பவைகளும் பரமாணுக்களால் ஆக்கப்பெற்றவை என்பதையும் காண்கின்றோம். அந்த அணுக்களுக்கு ''V. Particles'' என்று பெயர். அவையனைத்தும் சக்தி மயமானவை. ஆதலால் மாணிக்கவாசகர் இத்தனை ஒளியும் வெப்பமும் சக்தியும் சூரியனிடமும் அதன் வாயிலாக சக்திக் கிரணங்களாகிய அண்ட வெளிக் கதிர்கள் (Cosmic Rays) இடமும் கொடுத்தவர் இறைவனாகிய சிவபிரான்தான் என்று கூறுகிறார். ''அருக்கனிற் சோதி யமைத்தோன் திருத்தகு மதியில் தண்மை வைத்தோன் . . '' என்றும், ''எனைப் பல கோடி எனைப்பல பிறவும் அனைத்தனைத் தவ்வயின் அடைத்தோன்'' என்றும், பிறிதோரிடத்தில் ''சென்று சென்றணுவாய்த்தேய்ந்து தேய்ந்தொன்றாம் திருப்பெருந்துறையுறை சிவனே'' என்றும் மணிவாசகர் கூறுகிறார்.

உலகத்திலுள்ள பொருள்கள் அனைத்தும் அணுக்கள் மூலம் உற்பத்தியாகி இறுதி ஊழியில் பரமாணுவாகத் தேய்ந்து நுணுகி, அப் பொருள்கள் சக்தியாக மாறிச் சிவனின் பின்ன சக்தியைச் சார்ந்து, பின் அவை அபின்ன சக்தியைச் சார்ந்து, கடைசியாகச் சிவனிடம் ஒடுங்குகின்றன என்பது சைவ சித்தாந்தம். ஆகையால் அணு (Atom) என்னும் பரமாணு உண்மையிலேயே பண்டம் (Matter) அல்ல; அது வெறும் சக்தியே (Energy). இந்த உண்மையைத்தான் திருவாசகம் ''அணுத்தரும் தன்மையில் ஐயோன்'' என்று ரத்தினச் சுருக்கமாகக் கூறுகிறது. இதே தத்துவம்தான் தற்கால விஞ்ஞான ஆராய்ச்சியின் முடிவும். ''இந்த அணுக்களும் அவற்றிலுள்ள புரோட்டான் எலக்ட்ரான் ஆகியவைகளும் சக்தியின் வடிவாகிய மிக நுணுக்கமான யந்திரங்களே யாகும்'' என்று, கலிபோர்னியா இன்ஸ்டிடுயூட் ஆஃப் டெக்னாலஜியைச் சேர்ந்த பேராசிரியர் ராபர்ட் லெய்ட்டன் (Prof. Robert Leighton) என்பவர் கூறுகிறார். இந்தச் சக்திதான் அணுவிலுள்ள புரோட்டான் எலக்ட்ரான் வடிவில் அமைந்துள்ள சிவ-சக்தி என்பதை நாம் உணர வேண்டும். எனவே சூரிய ஒளி, அண்ட வெளிக் கதிர்கள் பரமாணு ஆகிய யாவும் அணு மயம் என்றும், அவ்வணு ஒவ்வொன்றும், கடவுள் மயம் என்றும் கடவுளின் சிருஷ்டி என்றும், நம் மணிவாசகப் பெருமான் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே அருளிப் போந்துள்ளார். இவ்வளவையும் ஜேம்ஸ் தாம்சன் (James Thomson) என்னும் ஆங்கில மேதை ஒருவர், ''ஒவ்வோர் அணுவும் இறைவனாலேயே இயங்குகின்றன ; ஒவ்வொரு கோளும் இறைவனாலேயே சுழல்கின்றன ; அவரே அனைத்தையும் நிரப்புகிறார் ; சூழ்ந்துள்ளார் ; அறிவிக்கின்றார் ; கிளர்ச்சியுறச் செய்கின்றார்'' (3) என்று சுருக்கமாகவும் அழகாகவும் கூறிப் போந்தார். மற்றும் நீட்லர் (Needler) என்னும் பிறிதொரு அறிஞர், ''இறைவனே, நீ இல்லாமல் இருப்பின், சடத்திரள் ஆகிய உலகம் பரந்த வானப் பெருவெளியில் அசைவற்றுக் கிடக்கும் ; சூரியன் தன்னுடைய சுழல் வழியில் நின்று போய், மாற்றொளிக் கதிரினை வெளிப்படுத்திச் செலுத்த இயலாமற் கிடப்பான்'' (4) என்று பாடுகின்றார்.

இந்த மெய்ஞ்ஞான—விஞ்ஞான ஆராய்ச்சியினையே வேறொரு முறையில் இன்னும் சற்று அதிகத் தெளிவாகப் பார்க்கலாம். இன்றைய விஞ்ஞானிகள் ஒவ்வொரு அணுவினுள்ளும் புரோட்டான் என்ற நிலையியற் பொருள் ஒன்றும், எலக்ட்ரான் என்ற இயங்கியற் பொருள் ஒன்றும் உள்ளன என்கிறார்கள். இதே உண்மையை மெய்ஞ்ஞானியாகிய மணிவாசகர் ''அணுத்தரும் தன்மையில் ஐயோன்'' என்ற அடியினில் உணர்த்துகிறார். சிவசக்தியாகிய கடவுளானவர், ஒவ்வோர் அணுவிலும் சிவமாகிய நிலையிற் பொருள் புரோட்டான் ஆகவும், பராசக்தியாகிய இயங்கியற் பொருள் எலக்ட்ரான் ஆகவும் அமர்ந்துள்ளார் என்பதே இதன் பொருள்.

---

(2) "The most reasonable explanation is that atoms in the sun are continually splitting or coalescing and in either case generating energy".

(3) "God by whom each atom stirs, the planets roll who fills, surrounds,informs,and agitates the whole".
—JAMES THOMSON.

(4) "If thou (God) wert absent, the material mass would without motion lie in boundless space, the sun, overstead in his spiral way no longer would dispense alternate ray." —NEEDLER.

இன்றைய விஞ்ஞானிகள் இந்த புரோட்டான் எலக்ட்ரான் ஆகிய இரண்டுமே (substance) என்ற சடப் பொருள்கள் அல்ல என்றும், (Energy) என்ற சக்தியே என்றும் முடிவு செய்துள்ளனர். ஆனால் இந்தச் சக்தி எங்கிருந்து வந்தது என்பது மட்டும் அவர்கட்கு இன்னும் விளங்கவில்லை. இதே உண்மையை மெய்ஞ்ஞானியாகிய மாணிக்கவாசகர், இவைகள் இரண்டும் சக்திதான் என்றும், உலகச் சடப் பொருள்கள் அனைத்தும் இறுதியில் அணுவாகி, அதனுட் சக்தியாகிக் கடவுளிடம் சென்று சேர்ந்து ஒன்றாகிவிடுகின்றன என்றும், தாம் கொண்டுள்ள இக்கருத்தைச் ''சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம் திருப்பெருந்துறையுறை சிவனே'' என்ற அடியின்மூலம் வெளியிடுகின்றார். ஆல்ப்ரட் டென்னிசன் என்ற ஆங்கில அருட் கவிஞரும், ''மறையும் அணு, வெறுமையான அணு, காண இயலாத நிலையிலுள்ள கடவுளுடன் ஒன்றுகின்றது, ஒன்றி இயைந்து சூனிய நிலையுறுகின்றது'' என்று கூறுகிறார். (5).

அண்டவெளிக் கதிர்கள் என்ற தீவிர சக்தியொன்று உற்பத்தியாகும் இடமாகிய சூரியனுக்கே ஒளியையும் வெப்பத்தையும் கொடுத்தவர் கடவுள்தான். ''அருக்கனிற் சோதி அமைத்தோன்'' என்கிறது திருவாசகம். முன்பு நாம் கண்டவாறு அணுக்களில் கடவுட் சக்தி இருப்பதால் இந்த அண்ட வெளிக் கதிர்களும் ஆற்றலும் ஆகிய இரண்டுமே கடவுள் மயமானவைகளே யாகும். ''எனைப்பல கோடி எனைப்பல பிறவும், அனைத்தனைத்தவ்வயின் அடைத்தோன்'' என்கிறது திருவாசகம் என்னும் தெய்வீக நூல்!

(தொடரும்)



சிதம்பரம் சபாநாயகர் திருக்கோயில் தோற்றம்.

# சிற்பக் கலையின் அடிப்படை

திரு. வி. கணபதி ஸ்தபதி, B.A.,
கண்காணிப்பாளர், அரசினர் சிற்பக்கலைப்
பயிற்சி நிலையம், மாமல்லபுரம்.

158589

முன்னுரை :

தமிழ்ப் பெருமக்கள் பேணி வளர்த்த கலைகளில் நாட்டியம், ஓவியம், சிற்பம், இசை, கவிதை ஆகிய ஐந்தும் அழகுக் கலைகளாகும். முன்னைய மூன்றும் கண்வழிச் சென்று உள்ளத்தை இன்புறச் செய்வன; பின்னைய இரண்டும் செவி வழிச் சென்று உள்ளத்திற்கு உவகையூட்டுவன. கண்ணையும் கருத்தையும் கவரக் கூடிய ஒரு காட்சியை ஒருவன் காண்கிறான். அக்காட்சி புலன் வழிச்சென்று, உள்ளம் என்ற திரையில் நிழலிடுகின்றது; இன்ப உணர்ச்சி தோன்றுகிறது. இஃது உள்ளத்தை நிரப்பிப் பொங்கி வழிகிறது. இவ்வுணர்வை, தான் பெற்ற இன்பத்தைப் பிறரும் பெறுமபடி தன் உள்ளத்தில் பொங்கி வழியும் உணர்ச்சிப் பெருக்கைச் சுவை குன்றாது முறைப்படுத்தி எடுத்துரைப்பதால் கவிதை பிறக்கிறது; வரைவதால் ஓவியம் தோன்றுகிறது; வடிப்பதால் சிற்பம் உருவாகிறது.

படிமம் :

ஒன்றுக்கு ஈடாக அவ்வொன்றைப் போலவே அமையும் மற்றொன்றுக்குப் 'படி' என்றுபெயர். அதாவது மூலத்தின் பிரதிக்குப் 'படி' என்று பெயர். இதனையே படிமம் என்றும் படிவம் என்றும் அறிஞர் கூறுவாராயினர். ஆனால் கலைத்துறையில் இச்சொல் மிக ஆழ்ந்த கருத்தில் கையாளப்படுகிறது.

இயற்கை வடிவங்களையும் பிற காட்சிகளையும் உள்ளதை உள்ளவாறே உரைத்தலோ, உருவாக்குதலோ கலைப்படைப்பு என்று நாம் கருதுவதில்லை. உள்ளதை உணர்ந்த வண்ணம் எடுத்துரைப்பதும் உருவகிப்பதும் கலைத்திறம் என்று கொள்கிறோம். எனவே உணர்வின் பிரதிபலிப்பே கலையென்பதாகிறது. விரித்துக் கூறின், மனத்திரையில் நிழலிட்ட உணர்வு மயமான காட்சியின் பிரதி பிம்பத்தையே படிவம் என்றும் படிமம் என்றும் நம் தமிழ் மக்கள் கொண்டனர். இதே பொருள்பற்றி, வடமொழி நூல்களும் 'பிரதிமா' என்றே இக்காட்சியை அழைக்கின்றன.

பிரதிமை என்ற சொல்லும் சிற்பம் என்ற சொல்லும் ஒரே பொருளைச் சுட்டும் இரு சொற்கள் ஆனாலும், அவை தனித்தனியே வெவ்வேறு நிலைகளைக் காட்டுவதாகவே தெரிகின்றது. பிரதிமை என்பது பிரதிமா என்ற சொல்லின் தமிழாக்கம். அளவுப்படி செய்தது என்பது பொருள் ஆகிறது. ஆம், திருவுருவங்களை மனத்தே நிறுத்தி அவற்றை வரையும் போதும், செதுக்கும்போதும் அளவுகளுக்குட்படுத்தி—இசைவுக்காகச் செய்வது வழக்கம். அளவிட்டறிய முடியாத ஒன்றை அளவுக்குட்படுத்தி இசைபட அமைப்பதே 'திருவுருவ அமைப்பு இலக்கணம்' எனப்படும்! இதற்கு முந்திய நிலை கல்லிலே, செம்பிலே வடிப்பதற்கு முந்திய நிலை; மனத்தே தோன்றும் உணர்வுநிலை—இன்பநிலை. இது பக்தி நிலையில் தோற்றமிடும் இன்பமயமான நிலை.

இதனைக் குறிப்பதே சிற்பம் என்ற சொல். அமரசிம்மன், சில்பம் என்ற சொல்லின் தோற்றத்தைப் பேசுமிடத்து 'சீல்' என்ற வேறு சொல்லிலிருந்து தோன்றியதாகக் கூறுவர். சீல் (சமாதௌ)-ஆழ்ந்து-தன்னை மறந்து அனுபவிக்கும் இன்பநிலை என்பதே இதன் பொருளாகிறது. இந்நிலையில் காணும் காட்சியையே சில்பம் என்ற சொல் குறிக்கிறது. இதன் வெளிப்பாடே பிரதி அல்லது படி (பிரதிமை—படிமம்) ஆகும்.

பொதுவாகப் படிமம் என்ற சொல்லைத் தெய்வத் திருமேனிகளைக் குறிப்பதற்கே தொன்று தொட்டு வழங்கி வருகிறோம். எடுத்துக்காட்டாக, தொல் இலக்கியமான சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் தெய்வ வடிவைப் படிமம் என்றே இளங்கோவடிகள் குறிப்பிடுவதைக் காண்கின்றோம்.

> ''மேலோர் விழையும் நூனெறி மாக்கள்
> பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டத்து
> இமையவர் உறையும் இமையச் செவ்
> வரைச்
> சிமையச் சென்னித் தெய்வம் பரசிக்
> கைவினை முற்றிய தெய்வப் படிமத்து''

என்று சிலப்பதிகாரம்கூறும்; மேலும் கடைச் சங்கப் புலவர்களில் ஒருவராகிய சீத்தலைச் சாத்தனார் என்பார் தனது மணிமேகலை என்ற காப்பியத்தில்,

> ''அணியிழை யந்தரம் ஆறா வெழுந்து
> தணியாக் காதற் றாய்கண்ண கியையும்
> கொடைகெழு தாதை கோவலன் றன்னை
> யும்

"கடவுள் எழுதிய படிமங் காணிய''

என்ற பாட்டிலும்,

''சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்
மையறு படிவத்து வானவர் முதலா''

என்ற அடியிலும், தெய்வ வடிவத்தைக் குறிக்கப் 'படிமம்', 'படிவம்' என்ற சொற்களைக் கையாளுவதைக் காண்கின்றோம்.

கண்ணுக்கும் கருத்திற்கும் அகப்படாமல் அவற்றைக் கடந்து நிற்கும் பேரின்பப் பொருளின் பேரழகை அகக் கண்களால் கண்டு, அவ்வுணர்வின் பிரதியாகக் கடவுட் படிமங்கள் அமைக்கப்படுகின்றன; கண்ணகியின் புற அழகை விடுத்து அக அழகையே மனத்திரையில் கண்டு, அவளது இனிய வடிவத்தைப் படிமம் என்றழைத்து, தெய்வத் தன்மையை இளங்கோவடிகள் அதில் ஏற்றிக் காட்டுகிறார். இன்று நாம் காணும் புத்த படிமத்தின் வடிவழகு புத்தரின் இயற்கையான புற அழகு அல்ல. அஃது யாதெனில், புத்தர்தம் அக வழகின் புறத்தோற்றமே. எனவே உருவமான பொருளின் புற அழகையும் விடுத்து, அதன் அக அழகையும், அருவமான பொருளின் தன்மையைப் புறத் தோற்றத்தாலும் சித்தரித்துக் காட்டுவது படிமக்கலையின் சீரிய பணியாகும். இது, தமிழகக் கலைகளின் பொதுவான சிறப்பான மரபாகும் என்றால் மிகையாகாது.

## சிற்பக்கலை மரபு :

தமிழகச் சிற்பக்கலை மரபின் சிறப்பியல்புகள் பலப்பல. அவற்றுள் குறிப்பிடத்தக்க ஒரு சிலவற்றை இங்கு நினைவு கூர்வோம்.

உணர்வின் பிரதி பிம்பமே உண்மைக் கலையாகும் என்ற கருத்து, சிற்பிகளின் உள்ளத்தில் நிலையாகப் பதிந்து விட்டதனால், இயற்கைக் காட்சிகளையும் இயற்கை வடிவங்களையும் 'பிரதி' செய்வதை விடுத்து, முற்றிலும் உணர்வுமயமான மனக்காட்சிகளையும், கருத்துக்களையும் **உண்**மைகளையும், ஆராய்ச்சி முடிவுகளையும் சித்தரித்துக் காட்டுவதிலேயே தொன்றுதொட்டுத் தமிழகச் சிற்பிகள் நாட்டம் கொள்வாராயினர். ஆனால் அதே நேரத்தில், இயற்கையை அறவே புறக்கணித்து முற்றிலும் புதுமையான வடிவங்களையும் காட்சிகளையும் அவர்கள் படைக்கவில்லை.

அதற்கு மாறாக, இயற்கையோடு நெருங்கி உறவாடி, அதோடு இசைந்து அதன் இயக்கங்களையும் சிறப்பியல்புகளையும் நன்கு ஆராய்ந்து உணர்ந்து அவற்றைத் துணைக் கருவிகளாகக் கொண்டு, அகத்தே தோன்றிய உணர்ச்சிகளை அழகு மிளிரப் படைத்துக் காட்டியுள்ளார்கள், நமது தமிழகச் சிற்பிகள் என்றால் மிகையான கூற்றாகாது.

வேறெந்த நாட்டுச் சிற்பக் கலை மரபிலும் காண முடியாத ஒரு சிறப்பியல்பு நமது மரபிற்கு உண்டு. சிற்ப வடிவங்கள் எதுவாயினும் சரி, இயற்கை அமைதியில் காணப்படுவதில்லை. சிற்ப வடிவங்கள் நின்றாலும் அமர்ந்தாலும், கிடந்தாலும், எக் கருத்தை உணர்த்துவதானாலும், அவை ஆடற்கலைப் பாணியிலேயே அமைக்கப்படுகின்றன. ஆடற்கலை ஒரு பண்பட்ட கலை. உள்ளத்தில் தோன்றும் இயல்பான உணர்ச்சிகளை மிகத் தெளிவாகவும், சுவையோடும், நெஞ்சிலே நிலைத்து நிற்கும் வகையிலும் ஆடிக்காட்டும் கலை. இதனை முக பாவனைகளாலும், உடல் ஒடிவு வளைவு குழைவு சுழிப்பு முதலிய அமைதிகளாலும் பிற வகை அபிநயங்களினாலும் சித்தரிக்கிறது. ஆடற்கலை வாயிலாகக் கருத்துக்கள் சுவையோடும் முறையோடும் உணர்த்தப்படுவதை உற்று நோக்கித் தனது வடிவத்திலும் இது இடம் பெற வேண்டுமென்று முதன் முதலில் எச்சிற்பி உணர்ந்து சிற்பக் கலையில் இதனை ஏற்றினானோ அவன் உலகக் கலாமேதைகளில் ஒருவனாகக் கருதப்பட வேண்டுமென்றால், கலை உள்ளம் பெற்றோர் இதனை மறுக்க மாட்டார்கள். நமது சிற்ப வடிவங்கள் ஆடற்கலைப் பண்பினைப் பெற்றிருப்பதால் இவை தோற்றுவிக்கும் கலையின்பத்திற்கு எல்லையே இல்லை.

## சிற்பங்கள் :

நாட்டிய இலக்கணத்திற் கேற்றவாறு சிற்பங்கள் இயற்றப்பட்டிருப்பதாகத் தோற்றத்தளவில் தெரிவதாயிருப்பினும், நாட்டிய இலக்கணத்தின் சிலவற்றை உணர்ந்துகொண்ட சிற்பி, தனது தேவைக்கேற்றவாறும், இடத்திற்கேற்றவாறும், செய்யப்படு பொருளுக்கேற்றவாறும், உணர்த்தப்படும் கருத்துக்கேற்றவாறும் சிறு சிறு மாற்றங்களைக் கற்பித்துத் தனது படைப்புகளை உணர்ச்சி மயமாக்குகிறான். சிற்பியின் மனம் எவ்வெவ்வாறு வளைகிறதோ, சுழிகிறதோ, நெளிகிறதோ, குழைகிறதோ அவ்வாறெல்லாம் அவனது வடிவங்கள் உருவெடுக்கின்றன. ஆடற்கலை வல்லுநர்கள் காட்ட முடியாத முகபாவங்களையும் உள்ளுணர்வுகளையும் அபிநயச் சிறப்புக்களையும் மிகத்தேர்ந்த முறையில் சிற்பி அமைத்து விட முடிகிறது. அவன் கருத்தழகையே வலியுறுத்துவதால் மனித உடலுக்குரிய உடற்கூறுகளினால் விளையும் இடையூறுகளை வெல்ல வேண்டிய நிலை அவனுக்கு ஏற்படுகிறது.

## சிற்பியின் செயல் :

எடுத்துக்காட்டாக, இறைவன் இப்பூவுலகைப் படைத்து, அதில் கோடி இன்பங்களை வைத்து நம்மிடம் வழங்கியிருக்கிறான். இஃது எக்காரணம் பற்றியென்று ஆராய்ந்த அறிஞர் இதனை நம்மீது இறைவன் கொண்ட கருணையினாலும் அன்பினாலும் என்று கூறுவர். எனவே சிற்பியானவன் இறைவனைக் கருணை வடிவமாகவும் அன்பின் உருவமாகவும் உணர்கிறான். கருணைக்கும் அன்பிற்கும் வடிவம் தர வேண்டிய பணி அவனைச் சாருகின்றது. கருணை அன்பு ஆகிய குணங்களே உருத்தரிக்குமானால், 'இவ்வுரு எங்ஙனம் இருத்தல் வேண்டும்' என்பதை உள்ளூற ஆராய்ந்து, சிந்தித்து வடிவம் அமைக்கும்பொழுது, மனித உடற்கூறுகள் பல இடையூறுகளைத் தோற்றுவிப்பதைக் காணுகிறான். கருணையும் அன்பும் மலர் போன்ற மென்மையான குணங்கள்; நெஞ்சை உருக்கும் தன்மையன; ஆன்மாவின் இன்ப வடிவத்தை உணர்த்துவன. இவற்றை வடிவத்திலே தெளிவாகக் காட்டுதற்கு மனித உடலின் நரம்புகளும் எலும்புகளும் உடைகளின் மேடு பள்ளங்களும் தடைகளாக நிற்கின்றன. இவை உடலின் விலங்குத் தன்மையைக் காட்டும் விறைப்பையுடையன. ஆகவே இவற்றைக் கட்டுப்படுத்தி, மறைத்து, அளவோடு உருண்டு திரண்ட சதைப்பற்றோடு கூடிய, உடலமைப்பில் வைத்துக் காட்டினால்தான் தன் கருத்து விளக்கம் பெறும் என்ற முடிவுக்கு வருகிறான் சிற்பி. முகத்தில் மட்டும் கருணை அன்பு ஆகிய உள் உணர்வுகளை பண்புகளை-பிரதிபலித்துக் காட்டுவது அவனுக்கு மன நிறைவு தரவில்லை; முகத்திலே தவழும் கருணை, அன்பு ஆகிய பண்புகள் தடையின்றி உடலெல்லாம் வழிந்தோடுமாறு காட்ட விழைகிறான். எனவே இயற்கை உடலமைப்பை, உடற் கூறுகளைத் தன் வயமாக்கி-இன்னும் சொல்லப் போனால் அடிமைப்படுத்திக் கருணை அன்பு சாந்தம் சிருங்காரம் மென்மை முழுமை ஆகிய பண்புகள் பொருந்தியதாக வடிவத்தை இயற்றி விடுகிறான். இதற்குச் சான்றாகப் புத்தர் படிமங்களும், திருமாலின் வடிவங்களும், சிவ மூர்த்தங்களும், தேவியாரின் இனிய வடிவங்களும் அமையப் பெற்றிருப்பதைக் கூறலாம். படிம உடற்கூறுகளும் படிம அமைதிகளும் இது போன்ற காரணங்களைப் பற்றி இயற்கை உடற்கூறுகளினின்றும் இயற்கை நாட்டிய அமைதியினின்றும் வேறுபடுகின்றன என்பதை உணர்தல் வேண்டும்.

சிற்பக் கலையின் மனித வடிவங்களை விடுத்துப் பல்வேறு விலங்குகளின் வடிவங்களையும் காணுகிறோம். வீரவுணர்ச்சிக்கு உவமையாக நாம் எடுத்துக் காட்டுவது சிங்கம் அல்லது புலியே யாகும். அசோகனின் சிம்மத் தூண்களும், சோழனின் புலிக் கொடியும், வல்லபரின் சிம்மக் கால்களும் இதை நினைப்பூட்டுகின்றன. விலங்கினங்களில் சிற்பக் கலைஞர்களின் கவனத்தையும் ஆர்வத்தையும் ஈர்த்தது சிம்ம வடிவமே.

## சிம்ம வடிவம் :

சிற்ப உலகிலே நடமாடும் சிம்ம வடிவம் இயற்கைச் சிம்ம வடிவத்தை ஏதோ ஓரளவு ஒத்திருப்பினும், பெருமளவு மாறுபட்டிருப்பதையே காண்கிறோம். இவ் வடிவத்தைப் பார்த்துச் சிம்மம் என்று உறுதியாகக் கூறுவோர் மிகக் குறைவு. இதனைக் கற்பனை வடிவம் என்று புறக்கணிப்போர் பலர் உண்டு. உண்மை யாதெனில், சிற்பியானவன் இவ் வடிவத்தில் உடற்சாயலைக் காட்டி, அதற்கேயுரிய சிறப்பியல்புகளை வலியுறுத்திக் காட்டியுள்ளான். சிம்மம், உடலுறுதி மிக்கது ; வல்லமை வாய்ந்தது ; வேகமாய்ப் பாய்வது ; பார்ப்போர் உள்ளத்தில் பய உணர்ச்சியைக் கிளறுவது ; வீரம் மிக்கது. எனவே வீரத்திற்குச் சின்னமான சிம்மத்தின் முழு வடிவத்தை அகத்திலே கொண்டு, அதன் சிறப்பியல்புகளைத் துலக்கமாகவும் நாட்டிய அமைதியிலும் காட்டுகிறான். இயற்றிய வடிவம் சிம்மத்தையும் நினைப்பூட்ட வேண்டும்; சிம்மத்தின் தன்மைகளையும் பிரதிபலிக்க வேண்டும். எனவே முறிந்த புருவமும், உருண்டு மிரட்டும் கண்களும், இளித்த வாயும், கோரைப் பற்களும், மடித்த உதடும், சுருக்கிய நுதலும் முகத்திலே முறைப்படி அமைத்து, உடல் உறுதிப் பாட்டினைத் திரண்டு பருத்த சதைப் பற்றினாலும் புடைத்த நரம்புகளினாலும் வீரச் சுவை மிளிர இயற்றுகிறான். வீரத்தையும் பய உணர்ச்சியையும் வலியுறுத்த வேண்டியிருப்பதால் ''சிம்மத்தின் கால்களில் புலி நகங்களை வைத்துக் காட்டுக'' என ஒரு சிற்ப நூல் சுட்டிக் காட்டுகிறது. இத்தகைய வீர வடிவத்தில் எத்தனை அழகுதான் காட்டப்பட்டுள்ளது? சோகத்திலும், கோபத்திலும், பயத்திலும் இன்னும் பல்வேறு உணர்ச்சிகளிலும் புற அழகையும் சுவைபட அமைத்துக் காட்டிய நமது சிற்ப மரபை என்னென்று புகழ்வது?

## சிற்ப வேலைப்பாடுகள் :

சிற்ப அலங்கார வேலைப்பாடுகளில் பல விதமான இலைகள், காய்கள், பூக்கள், கொடிகள் ஆகியவற்றைக் காண்கிறோம். இயற்கையில் காணப்படும் செடி கொடிகளைக் கூட உள்ளதை உள்ளபடியே நம் மரபில் காட்டுவதில்லை. அதற்கு மாறாகச் செடி கொடிகளின் நெளிவு, சுழிவு, மடிப்பு; விரிப்பு, கோவை, அடுக்கு, மினுமினுப்பு மென்மை இயல்பான

தன்மை அதன் இயக்கங்கள் இவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்து உணர்ந்து, அவற்றை மனங்கவர் பாவனைகளில் சித்தரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இத்துறையில் சிற்பியின் கற்பனை எவ்வளவு வளமாக இருந்தது என்பதை இவ் வடிவங்களை நேரில் பார்த்தே சுவைக்க முடியும். இவ்வடிவங்களைச் 'சுருக்குகள்' என்றும், 'பாளை' என்றும் தமிழகச் சிற்பிகள் குறிப்பிடுவார்கள். தமிழகச் சிற்ப மரபின் போற்றுதற்குரிய சிறப்பியல்புகளில் இதுவும் ஒன்ருகும். இது மட்டுமன்று. இயற்கையில் காணும் பறவை இனங்களில் சிற்ப வடிவங்கள், சிற்பியின் கரங்களிலே தனித் தன்மை வாய்ந்தனவாக வடிவெடுக்கின்றன.

நமது சிற்பிகள் தங்கள் சிற்ப வடிவங்களில் உடல் அழகைக் காட்டிய பாங்கே தனி. ஆடைகளை உடலோடு ஒட்டியவாறு அமைத்து, ஆடையின் எல்லையை மட்டும் உருட்டிக் காட்டி உடல் திரட்சியை, அதன் கவர்ச்சியை நன்கு வெளிப்படுத்துகிருர்கள். கலைத்துறையில் இது ஒரு மகத்தான சாதனை. அது மட்டுமல்ல, உடலுறுப்புக்களுக்கேற்றவாறு பொருத்தமான இடங்களில் கண்கவர் அணிகளைப் பூட்டி அழகு சேர்த்த முறை, பாராட்டுதற்குரியதாகும். இவற்றுக்கெல்லாம் மேலாக, சிற்ப வடிவங்களின் தலைக் கோலங்களிற்ருன் எத்தனை எத்தனை மனங்கவர் வகைகள் ?

## நம் நாட்டு—மேலை நாட்டுச் சிற்பங்கள் :

நமது நாட்டுச் சிற்ப வடிவங்களுக்கும் மேலை நாட்டுச் சிற்ப வடிவங்களுக்கும் நிரம்ப வேறுபாடு உண்டு. நமது சிற்ப வடிவத்தை ஒரு சிலர் தவருகக் கருதுகிருர்கள். மனித உடலின் வெவ்வேறு உறுப்புக்களின் அழகை வெவ்வேறு மனித வடிவங்களில் பார்த்து, அவ்வாறு தனித் தனியே கண்டு சுவைத்த உறுப்புக்களையெல்லாம் ஒன்று சேர்த்துக் கற்பனையாக ஒரு முழு வடிவத்தை உருவாக்குவதாக நினைக்கிருர்கள். இஃது ஒரு தவருன கருத்தாகும். மேலை நாட்டுச் சிற்ப வடிவங்கள் மனித உடற் கூறுகளை நூற்றுக்கு நூறு செம்மையாகக் காட்டி, மனித அழகின் புறத் தோற்றத்தையே வலியுறுத்துகின்றன. பெண் தெய்வம் ஒன்றின் வடிவத்தை மிக அழகிய ஒரு பெண்ணின் வடிவமாகவே காட்டியுள்ளார்கள். இவ்வழகில் கூடுதல் குறைவு காணப்படின் அவர்களின் கண்களை இவை உறுத்துகின்றன. எனவே புற அழகையே காட்ட முயலும்பொழுது இதற்கு ஓர் எல்லையும் தோன்றி விடுகின்றது.

## கலைத் திறன் :

நமது சிற்ப மரபு காவிய மரபை ஒட்டியது. ஒவ்வோர் ஆண், பெண் வடிவத்தையும் ஒவ்வொரு காவியம் என்றே கலா ரசிகர்கள் கூறுவார்கள். எடுத்துக்காட்டாக, ஒரு கவிஞன் பெண் ஒருத்தியின் இனிய வடிவத்தைக் காணும்பொழுது, இத் தோற்றம் அவனது உள்ளத்தில் இன்ப உணர்வைத் தோற்றுவிக்கிறது. அதனைப் பிறர் உள்ளத்தில் ஏற்றிக் காட்டுவதற்குப் பொருத்தமான சொற்களைக் கொண்டும், உவமை அணிகளைக் கொண்டும் இசைத்துக் காட்டுகிருன். இதே முறையில் சிற்பியும் தன் உணர்வில் நிற்கும் வடிவத்தைக் கல்லிலே ஏற்றி அதே உவமை அணிகளை அவன் வடிக்கும் வடிவத்திலும் பொருத்தி, தான் அருவமாக உள்ளத்தில் கண்ட வடிவத்திற்கு உருவம் அளிக்கிருன். கவிஞனின் உள்ளத்தில் தோன்றியது 'அருவம்'. இதற்கு அவன் கொடுப்பது 'சொல் வடிவம்'. சிற்பியின் உள்ளத்தில் தோன்றியது 'அருவம்'. இதற்கு அவன் கொடுப்பது 'கல் வடிவம்'. இவ்விருவரும் தங்கள் உள்ளத்திலே கண்டு இன்புற்ற பெண் வடிவத்தின் முகத்தை முழு மதியிலும், நெற்றியைப் பிறையிலும், புருவத்தை கண்களை மலர்களிலும், கூந்தலை மயில் தோகையிலும், இடையைத் துடியிலும், தொடையை யானையின் துதிக்கையிலும், இங்ஙனம் ஒவ்வோர் உறுப்பையும் ஒவ்வோர் இயற்கை வடிவத்திலும் காணுகிருர்கள். இவற்றைச் சிற்ப வடிவத்தில் சிறப்பாக அமைத்துக் காட்டுவதே நம் நாட்டுச் சிற்பக் கலை மரபின் ஒப்பற்ற செயலாகும். இங்ஙனம் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமான இயற்கைப் பொருள்களிலும் காணவும் கூடும். இதனல் வடிவங்களும் வெவ்வேருக மாறும் தன்மை பெறுகின்றன. எனவே நமது கலை மரபிற்கு எல்லையென்பது இல்லை. கற்பனை விரியும் தன்மையுடையது. மேலும் தத்துவக் கருத்துக்களுக்கும் சமய உணர்வுகளுக்கும் வடிவம் காண்பதில் சிற்பக் கலை சிறந்த பணி செய்கிறது. இக் கருத்துக்கள் எல்லையின்றி விரிந்து உயர்ந்து செல்லத் தக்கவை. இத் துறையைச் சிற்பக் கலை பற்றிக் கொண்டதால் இத் துறை விரிவும் உயர்வும் பெறுவதாயிற்று. பல நூற்ருண்டுகளையும் கடந்து நமது சிற்பக் கலை வளர்ந்து ஓங்கியதன் இரகசியம் இஃதே.

## முடிவுரை :

இத்தகைய அரும் பெரும் சிறப்பியல்புகள் வாய்ந்த நமது சிற்பக் கலை, மக்கள் கலையாகும். எவ்வாறெனில், சமுதாயத்தின் வாழ்க்கை நெறிகளையும், உயர்ந்த நோக்கங்களையும் பண்பாட்டின் சிறப்பையும் இக் கலை பிரதிபலிக்கிறது. தெய்வீக வடிவங்களிலும் அவற்றின் திருவிளையாடற் காட்சிகளிலும் இப் பூவுலகின் இலட்சிய நாயக, நாயகிகளையே சிற்பிகள் சித்தரிக்கிருர்கள். தனிப்பட்ட தங்கள் உணர்ச்சிகளை மட்டுமல்லாது, சமுதாயத்தின் உணர்ச்சிகளையும் உள்ளக் கிடக்கைகளையும் சிற்பிகள் சமைப்பதால், பண்டைப் பெரு மக்கள் சிற்பக் கலையைத் தங்கள் கலையாகவே கருதி ஆர்வத்தோடு பேணி வளர்த்தனர்.

# ஒப்புரவு

ந.ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை :

தெய்வப் புலவர் திருவள்ளுவர் பெருமான் இயற்றியருளிய திருக்குறளின் பொருட்பாலில் சான்றாண்மை என்னும் தலைப்பில், அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மை என்னும் ஐந்து பெரும் பண்புகளும், சால்புடைமை என்னும் சிறந்த பெரும் பண்பினைத் தாங்கி நிற்கும் தூண்களாக உருவகம் செய்து கூறப் பட்டுள்ளன.

''அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்து சால்பூன்றிய தூண்''.

என்பது திருக்குறள். இதன்கண், அன்புடைமை—நாணுடைமை—ஒப்புரவறிதல் என்னும் அதிகாரங்களின் தலைப்புகளே, அன்பு நாண் ஒப்புரவு எனச் சுருக்கிக் குறிப்பிடப் பெற்றுள்ளன.

சால்பு என்னும் சிறந்த பண்புநலம் நிலை பெறுவதற்கு, இவ்வைந்து பண்புகளும் இன்றியமையாதனவாகத் திகழ்கின்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டே, சான்றாண்மைப் பண்பு நிலைபெறுகின்றது. ஆதலின், இவ்வைந்தையும் ''சால்பு ஊன்றிய தூண்'' என்று திருவள்ளுவர் உருவகம் செய்து குறித்தருளினார். இவ்வைந்தனுள் ஈண்டு விதந்தெடுத்து ஆராய்தற்குரியதாக விளங்குகின்றது ஒப்புரவு என்னும் பண்பு நலம்.

## சொல்லும் பொருளும் :

''ஒவ்வொரு மொழியிலும் சிற்சில சீரிய சொற்கள், ஆழ்ந்த நுணுகிய பல பொருட் குறிப்புக்களை உடையனவாகத் திகழ்கின்றன. இன்னனைய அரிய இனிய சொற்களைப் பற்றித் தனித் தனியே ஒவ்வொரு நூல் எழுதுதற்குக் கூட வாய்ப்பு உண்டு (1)''. அத்தகைய வித்தகம் மிக்க சொற்கள் பலவற்றுள், ஒப்புரவு என்பதும் ஒன்று.

ஒரு மொழியானது எவ்வளவுக்கெவ்வளவு தொன்மை வாய்ந்து திகழ்கின்றதோ, அவ்வளவுக் கவ்வளவு அதன்கண் வழங்கும் சொற்களும், திட்ப நுட்பமான பலவகைக் கருத்துக்களைத் தம்பாற் செறித்துப் பொதிந்து கொண்டு, இனிது விளக்க வல்லனவாகத் திகழ்கின்றன. மனிதனின் அறிவும் அனுபவமும் வளர வளர, அவன் வழங்கும் சொற்களின் பொருட் குறிப்புக்களும், பலவகைகளில் வளர்ந்து வளம் பெற்று விரிவடைகின்றன. அதனாலேயே ஒரு சொல்லுக்குப் பல பொருளும், பல பொருளுக்கு ஒரு சொல்லும் அமைந்து விளங்கக் காண்கின்றோம். இன்ன சொல் இன்ன இடத்தில் இப்பொருள் குறித்துத்தான் வந்துள்ளது என்று வரையறை செய்து முடிவு காண்பது, ஒரு பெரும் கடினமான செயலாகவே உள்ளது.

## ஒப்புரவு :

ஒப்புரவு என்னும் சொல்லுக்கு **'உலக நடை'** என்று ஆசிரியர் பரிமேலழகர் பொருள் கூறுகின்றார். ''ஒப்புரவறிதல் உலக நடையினை அறிந்து செய்தல். உலக நடை, வேத நடை போல அறநூல்களில் கூறப்படுவதன்றித் தாமே அறிந்து செய்யும் தன்மைத்தாதலின், **ஒப்புரவு அறிதல் என்றார்**'' என்பது, பரிமேலழகர் தரும் விளக்கம்.

---

* சென்னைத் திருமயிலைக் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில், தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் சார்பில், சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் **திரு நெ. து. சுந்தர வடிவேலு** அவர்கள் தலைமையில் நிகழ்ந்த **திருக்குறள்** கருத்தரங்கத்தில் நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது. (17—1—74).

—ஆசிரியர்.

(1) "Some words carry so much that a whole book might be written on their meaning; and indeed many thinkers have toiled long on the definition of small words such as **good, beautiful, sublime, romantic.** It was well said by Cardinal Newman that the word **God** is itself a theology, and there are hundreds of other words which are in themselves embryonic systems of thought."

—BERNARD GROOM,
A Short History of English Words, p. 126.

உலக நடையறிந்து ஒழுகுதலை ''உலகத்தோடு ஒட்ட ஒழுகல், பலகற்றும் கல்லார் அறிவிலா தார்'' என்று 'ஒழுக்கம் உடைமை' என்னும் தலைப்பில் ஆசிரியர் முன்னரே அறிவுறுத்தியுள்ளமையின், அதனையே இவ்வதிகாரத்திலும் அவர் கூறினர் என்றல் பொருந்தாமையுடன், அத்தகைய ஒழுகலாறு பற்றி ஈண்டு ஒரு குறளும் குறிப்பிடாமையும் கருதற்பாலது. எனவே 'ஒப்புரவாவது, யாவர்க்கும் உதவி புரிதல்' எனவே பொருள்படும். அதனுலேயே ஆசிரியர் பரிமேலழகரும், உலக நடையினை யறிந்து நடத்தல் என்னுமல், உலக நடையினை யறிந்து செய்தல் எனக் கூறுவாராயினர். ஈகை மறுமை நோக்கியது, ஒப்புரவு இம்மை நோக்கியது என்பது பரிமேலழகர் கருத்து.

### அறிதல் :

உதவி புரிதலையும், அவரவர் பண்பறிந்து செய்தல் வேண்டும். இல்லையேல் உதவியாகிய நன்மை புரிதலும் தீங்காய் முடியும். ''நன்ருற்றலுள்ளும் தவறுண்டு அவரவர் பண்பு அறிந்து ஆற்ருக் கடை'' என்பது திருவள்ளுவர் அறிவுரை. அதனுலேயே 'ஒப்புரவு' என்னுமல், 'ஒப்புரவு அறிதல்' என்று தலைப்பு அமைவதாயிற்று. உதவி பெறுவோனின் தகுதி—தேவை—அளவு, உதவி செய்வோனின் தகுதி—உதவி செய்வதற்குரிய முறை—அளவு—காலம்—இடம் முதலியன அனைத்தும் அறிந்து செய்ய வேண்டுதல் பற்றி 'ஒப்புரவு அறிதல்' என்ருர் எனினுமாம்.

### வேறு சொற்கள் :

ஒப்புரவு என்னும் சொல்லின் பொருள், மிக்க ஆழமும் அருமையும் விரிவும் உடையதாகத் திகழ்கின்றது. ஆதலின் அதன் பல திறப் பொருள் நுணுக்கங்களை, நம்மனோர்க்கு உணர்த்துவதற்காக, ஆசிரியர் திருவள்ளுவர் பலவேறு சொற்களைப் பயன்படுத்துகின்ருர். ஒரு பெரு நாணயத்தின் மதிப்புத் தொகையினைப் பலவேறு வகையான சில்லரை நாணயங்களாக மாற்றி அளிப்பது போல, திருவள்ளுவர் ஒப்புரவு என்னும் சொற்பொருளை வேறு பல சொற்களின் துணை கொண்டு விளக்க முற்படுகின்ருர்.

1. கடப்பாடு
2. வேளாண்மை
3. ஒத்தது
4. நயன்
5. கடனறி காட்சி.

எனவரும் சொற்களும் சொற்ருெடரும், ஒப்புரவு என்னும் உயரிய சொல்லின் பொருள் நுட்பத்தினை விளக்குவனவாகக் கையாளப் பெற்றிருக்கின்றன.

ஒரு சிறந்த வைரத்தினைப் பல வகைகளில் பட்டை தீட்டி அதன் ஒளி நலத்தை மிகுவிப்பதுபோல, ஒப்புரவு என்னும் சொல்லையே வேறு பல சொற்களைக் கொண்டு குறிப்பிட்டு அதன் பொருள் நலத்தின் திறம் இதுவெனத் திருக்குறள் உணர்த்துகின்றது. இங்ஙனமே ஒப்புரவு புரிபவரின் இயல்பும் உயர்வும் இனையன என உணர்த்துவதற்கு,

1. ஒத்ததறிவான்
2. நயனுடையான்
3. பேரறிவாளன்
4. பெருந்தகையான்
5. கடனறி காட்சியவர்

என்னும் சொற்ருெடர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாற்ருல் ஒப்புரவு என்னும் சொற் பொருளின் விரிவும் நுணுக்கமும் பொறப்புறப் புலனுகும்.

### நடு நாயகம் :

சான்ருண்மைக்குரிய ஐம்பெரும் பண்பு நலங்களுள், நடுநாயகமாய்த் திகழ்வது ஒப்புரவு. முதல்எழுத்து சார்பெழுத்து என்பது போல, பொருள்கள் அல்லது பண்புகளை முதல் என்றும், சார்பு என்றும் இரண்டாகப் பிரித்தலாம். ஒப்புரவு முதன்மைப் பண்பு. ஏனைய நான்கும் சார்புப் பண்புகள். ஏனைய நான்கு பண்புகளும் சார்புத் தூண்களாக அமைய, ஒப்புரவு நடுநாயகமான உயர்ந்த தூணுக ஓங்கி விளங்குகின்றது எனலாம்.

யாவர்க்கும் உதவி புரிதல் ஆகிய ஒப்புரவானது, எத்தகைய கைம்மாறும் கருதாமல், யாவர்க்கும் உதவி புரிதல் நமக்குரிய கடப்பாடு என்ற உணர்வுடன், இயல்பாக நிகழற்பாலது! தவிரும் தன்மையதன்றி இன்றியமையாமற் செய்தற்குரியது என்பது, கடப்பாடு என்னும் சொற் குறிப்பாற் சுட்டப்பெற்றுள்ளது.

### ஒப்புரவின் உயர்வு :

மக்களாயினர் எத்துணையோ அரும்பாடு பட்டுப் பொருள் தேடுகின்றனர். அங்ஙனம் தேடுகின்ற பொருளும் செயல்களும் எல்லாம், தகுதியுடையவர்களுக்கு உதவி செய்தற் பொருட்டேயாகும். தாமே நுகர்தற் பொருட்டும், தொகுத்து வைத்திருந்து இழத்தற் பொருட்டும் அன்று. ஒப்புரவு போன்ற நல்ல செயல் விண்ணுலகத்திலும் இல்லை, மண்ணுலகத்திலும் இல்லை. ''ஈவோரும் ஏற்பாரும் இன்றி எல்லோரும் ஒரு தன்மையராதலின் புத்தேளுலகத்தும், யாவர்க்கும்

ஒப்பது இது போற் பிறிதொன்று இன்மையின் இவ்வுலகத்தும் அஃது அரிதாயிற்று''. யாவர்க்கும் இயன்ற உதவிகளைச் செய்பவனே உயிரோடுகூடி வாழ்பவன் ஆவான். அங்ஙனம் ஏதும் செய்யாதவனை, அவனது உயிரின் அறிவும் செயலும் காணாமையின், உலகம் செத்தாருள் ஒருவனாகவே கருதி இழித்துப் பழிக்கும்.

ஒரு சிறந்த கவிஞனின் சிறப்பினை, அவன் கையாளும் சொற்கள் சொற்றொடர்கள் கருத்துக்கள் ஆகியவற்றைப் பிற கவிஞர்கள் எங்ஙனம் ஏற்றுப் போற்றித் தழுவியுள்ளனர் என்பது கொண்டு, நாம் ஆய்ந்தளந்தறிதல் கூடும். திருவள்ளுவப் பெருந்தகை ஒப்புரவின் இயல்பினையும் உயர்வினையும் விளக்குதற்கு, முதற் குறளிலேயே மாரியினை உவமையாக மொழிந்துள்ளார். இவ் வுவமையினை விதந்தெடுத்துப் போற்றிச் சங்ககாலப் பெரும் புலவராகிய கபிலர் பெருமான்,

''பாரி பாரி என்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்;
பாரி ஒருவனும் அல்லன்;
மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே''

எனத் தம் பாடலில் வழி மொழிந்துள்ளார். இங்ஙனமே திருவள்ளுவர் பயன்படுத்திய வேளாண்மை என்னும் சொல்லினை வியந்து,

''வேளாளர் என்போர்கள்
வள்ளன்மையால் மிக்கிருக்கும்
தாளாளர் ஆக்கூரில்
தான்தோன்றி மாடமே''

எனத் திருஞானசம்பந்தர் தம் தேவாரப் பாடலில், வேளாண்மை என்பது வள்ளன்மையே என விளக்கம் செய்தருளியிருத்தலும் ஈண்டுச் சிறப்பாகக் குறிப்பிடற் பாலது.

### சிறந்த உவமைகள் :

ஒப்புரவு நிகழ்தற்குரிய பாங்கும் பண்பும் விளங்க, மூன்று சிறந்த உவமைகள் இங்கே குறிப்பிடப் பெற்றுள்ளன. எல்லார்க்கும் எல்லாக் காலத்தும் வரையாது பயன்படுவதற்குரியது ஒப்புரவு ஆதலின் **ஊருணியும்**; எல்லார்க்கும் எளிதிற் பயன்படுவது ஒப்புரவு ஆதலின் **பயன் மரமும்**; தான் துன்புற நேரினும் எல்லோருடைய வருத்தமும் தீர்ப்பது ஒப்புரவு ஆதலின், **மருந்து மரமும்** முறையே சிறந்த உவமைகளாயின.

சிறந்த நூல்கள் அறிவுறுத்தும் கருத்துக்கள், ஒரு காலத்துக்கு ஓரிடத்துக்கு மட்டுமே பொருந்துவன அல்ல. அவைகள் எல்லாக் காலத்துக்கும் எல்லா இடத்துக்கும் பொருத்தமாக அமையும். முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்ப், பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனாய் விளங்கும் இறைவனைப் போலவே, சிறந்த இலக்கியங்களும் பழமைக்குப் பழமையாயும், புதுமைக்குப் புதுமையாயும் பொலிவுற்று விளங்கும். இந் நாளில் Socialism, Communism என்னும் சொற்களையும், கொள்கைகளையும் நாம் யாண்டும் கேட்கின்றோம். இந் நாளைய பொதுமையறம் (Socialism), பொதுவுடைமை (Communism) பற்றிய கருத்துக்களையும்கூட, ஒருவகையில் திருவள்ளுவர் இவ்வதிகாரத்தில் விளக்குகின்றார் எனக் கொள்ளவும் இடமுள்ளது. சோஷலிஸம் அல்லது சமதர்மம் என்னும் சொற்களுக்குத் தூய இனிய நேரான செந்தமிழ்ச் சொல், **ஒப்புரவு** என்பதே எனலாம். பொதுமையறம் பொதுவுடைமை ஆகியவற்றின் கொள்கைகளும், இயக்கங்களும், முதலாளித்துவத்தினை ஒழித்தற்குப் பெரிதும் முயன்று போராடி வருகின்றன (2). ஆனால் பொருட் செல்வம் மிக்க முதலாளிகள், ஊருணி போலவும், பயன்மரம் போலவும், மருந்தாகித் தப்பா மரம் போலவும் வாழ முற்பட்டால், அவர்களை வெறுப்பவரோ பகைப்பவரோ அழிப்பவரோ எவரும் இலராவர்; வர்க்கப் போராட்டங்கள் ஒழியும் என்பது திருவள்ளுவர் தரும் அறிவுரை.

'' **ஊருணி** நிறையவும், உதவும் மாடுயர்
பார்கெழு பயன்மரம் பழுத்தற் றாகவும்,
கார்மழை பொழியவும், கழனி பாய்நதி
வார்புனல் பெருகவும் மறுக்கின்றார்கள்
யார்?''

—கம்பர்.

பேரறிவாளன் உலகை அவாவுவான். உலகமும் அவனை அவாவும். அவன் திரு நிறையப் பெற்றால் எவரும் வெறாமல் விரும்பியே மகிழ்வர். ஊருணி நீர் நிறைந்தால், அது நிறைய வேண்டும் என விரும்புவதன்றி நிறைதலாகாது என்று எவரும் நினையார். அங்ஙனமே பயன் மரமும், மருந்தாகித் தப்பா மரமும் விரும்பிப் போற்றப்படும். செல்வமுடையோர் நயனுடையராகவும், பெருந்தகைமையுடையவராகவும், பேரறிவாளராக

---

(2) " A good example of the earlier notions of Socialism referred to by Pigou is provided by F.J.C. Hearnshaw's description of the essentials of Socialism as what may be called the Six E's : the exaltation of the community above the individual ; the equalization of human conditions ; the elimination of the capitalist ; the expropriation of the land lord ; the extinction of private enterprise ; and the eradication of competition."

—A. C. PIGOU,
Socialism versus Capitalism.

வும், யாவர்க்கும் இனியராய் நல்லராய் ஒப்புரவாளராய் வாழ்ந்து வர முற்பட்டால், தாமும் வாழ்ந்து பிறரையும் வாழ்வித்தல் கூடும் எனத் திருக்குறள் அறிவுறுத்துகின்றது.

## உலக உபகாரம் :

இத்தகைய ஒப்புரவு நெறியில் நிற்பவர்களே, பெருஞ் செல்வர்கள். நிற்கப் பெறாதவர்களே வறியவர்கள். தம் செல்வம் சுருங்கிய காலத்தும், தாம் செய்தற்குரியனவற்றை அறிந்த இயற்கையறிவுடையவர்கள், ஒப்புரவு செய்தற்குச் சிறிதும் தளரமாட்டார்கள். ஒப்புரவுச் செயலால், தம்முடைய செல்வம் முதலியவற்றிற்குக் கேடு நேரும் என்று சிலர் ஐயுற்று அஞ்சுவர். ஒப்புரவினால் ஒருபோதும் ஒரு கேடும் நேரவே நேராது. நேருமாயின், அத்தகைய அரிய நல்ல கேடு, நாம் நம்மை விலைக்கு விற்றாயினும் கொள்ளத் தக்க சிறப்புடையதாகும்.

''உண்டால் அம்ம இவ்வுலகம், இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத் தமியர் உண்டலும் இலர்; முனிவிலர்; துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சிப் புகழெனின் உயிரும் கொடுக்குவர்; பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்; அன்ன மாட்சி அனையராகித், தமக்கென முயலா நோன்றாட் பிறர்க்கென முயலுநர் உண்மையானே'' என வரும் புறநானூற்றுப் பாடல், ஒப்புரவாளர்களின் இயல்பினை உள்ளவாறு உணர்த்துவதாகும்.

இற்றைக்கு ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருந்த பாரி பேகன் நள்ளி குமணன் முதலிய சங்க கால வள்ளல்கள், தலைசிறந்த ஒப்புரவாளர்கள் ஆவர். இங்ஙனமே இடைக் காலத்தில் வாழ்ந்திருந்த ஆழ்வார்கள் நாயன்மார்கள் ஆகிய அருளாளர்களும் கூட, ஒப்புரவு நெறி போற்றிய உத்தமர்களே யாவர். ''உலக உபகாரம் ஞானிகள் விவகாரம்'' என்பது கைவல்ய நவநீதம். ஒப்புரவு எனத் திருவள்ளுவர் பெருமான் வழங்கிய பண்டைச் செந்தமிழ் இலக்கியச் சொற் பொருளே, உலக உபகாரம் என்று இந் நாளைய எளிய தமிழ் நடையில் குறிப்பிடப் பெற்றுள்ளது. Philanthropy, Altruism, Social Service, Service to the Humanity என இந்நாளில் வழங்கும் கருத்துக்களையே, ஒப்புரவு என்னும் பழந்தமிழ்ச் சொல் குறிக்கின்றது எனலாம். ஆழ்வார்கள் நாயன்மார்கள் ஆகிய அருளாளர்களின் வாழ்க்கை, தூய இனிய தெய்விக ஒப்புரவு வாழ்க்கையே யாகும்.

## முடிவுரை :

தமிழகத்தின் தலைசிறந்த அருட்பெருஞ் சான்றோர் ஆகிய திருநாவுக்கரசர் பெருமான், இளமையிலேயே எத்தகைய ஒப்புரவாளராக விளங்கியிருந்தார் என்பது,

''காவளர்த்தும், குளம்தொட்டும்,
கடப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன
மகிழ்ந்தளித்தும், விருந்தளித்தும்,
நாவலர்க்கு வளம்பெருக
நல்கியும், நானிலத்துள்ளோர்
யாவருக்கும் தவிராத
ஈகை வினைத் துறைநின்றார்''

எனவரும் பெரியபுராணச் செய்யுளில், தெய்வப்புலவர் சேக்கிழார் பெருமானால் விளக்கப் பெற்றிருத்தல் கொண்டு உணரலாம். இங்ஙனம் ஆழ்வார்கள் நாயன்மார்கள் அனைவருமே, தமக்கென முயலாமல் பிறர்க்கென முயன்ற பெருந்தகைமை சான்ற ஒப்புரவாளர்கள் ஆவர் என்பது, நாம் நம் கருத்தில் இருத்துதற்குரியது. அவர்களின் அடிச்சுவட்டினைப் பின்பற்றி, நாமும் இயன்ற அளவு ஒப்புரவுநெறி நின்று, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து உய்ய முயல்வோமாக!

—ஆசிரியர்.

# அருளுடைமை

மாட்சிமிகு திரு எஸ். மகராஜன் அவர்கள்
B. A., B. L.,
நீதிபதி, உயர்நீதி மன்றம், சென்னை.

'இந்த எலும்புக் கூட்டுக்குள்ளே எப்படி உயிர் வந்து குந்திக் கொண்டது? இதன் மர்மம் என்ன?' என்பதை ஆராயப் புகுந்தார் வள்ளுவர். பொருந்தாத இவ்விரண்டு சரக்குகளையும் பொருத்தி வைத்தது அன்பு என்ற சக்தி தான் என்று முடிவு கட்டினார்.

''அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போ டியைந்த தொடர்பு''

என்பது வள்ளுவர் தீர்ப்பு.

ஆனால், உடம்புக்குள் அடைபட்ட உயிர் ஊனுடம்புக்குக் குற்றேவல் செய்யத் தொடங்குகிறது. உடம்பே தான் உயிர் என்று கூட நாம் மயங்குகிறோம். இப்படி மயங்கும் நமக்கு வாழ்க்கையிலே பல திறப்பட்ட உறவுகள் ஏற்படுகின்றன. தாய் தகப்பன் உடன் பிறந்தோர் மனைவி மக்கள் சுற்றத்தார் சமுதாயம் நாடு உலகம்-இப்படியாக நம் உறவுகள் விரிந்து கொண்டே போகின்றன. நம் உறவு விரிய விரிய நமக்காகவே நாம் வாழ்கிறோம். என்ற உணர்வு தேய்ந்து கொண்டே போகிறது.

தொடக்கத்தில், ஆணவத்தை அதாவது நம்மையே அடிப்படையாகக் கொண்டிருந்த அன்பு, நாளாவட்டத்தில் பிறர் நலத்தையே அடிப்படையாகக் கொண்ட அன்பாக மலர்கிறது. மலர வேண்டும். தன்னலமற்ற இந்த அன்பையே அருள் என்று அழைக்கிறார் வள்ளுவர்.

அன்புக்கும் அருளுக்கும் உள்ள வேற்றுமையை ஒரு உதாரணத்தின் மூலம் விளக்கிக் கொள்ளலாம். ஆதியில் மகாத்மா காந்திக்கு உறுணையாக இருந்தவர்கள் இருவர். மகமத் அலி., ஷௌகக் அலி என்ற சகோதரர்கள். அவர்கள் மகாத்மாவைப் பிரிந்து அவருக்கு நேர் விரோதிகள் ஆனார்கள் பிற்காலத்திலே. பிரிவுக்கு என்ன காரணம்? அலி சகோதரர்கள் காந்திஜியிடம் அளவு கடந்த பற்று வைத்திருந்தார்கள். ஏகபோக உரிமையோடு அவரது நட்பை அனுபவிக்க வேண்டும் என்று துடித்தார்கள். காதலனுக்குக் காதலியிடமிருக்கும் அன்பைப் போன்றது அவர்களுடைய அன்பு. ஆணவத்தை அடிப்படையாகக் கொண்ட அன்பு அது. கற்கண்டைக் கண்டதும் சப்புக் கொட்டுகிற குழந்தையின் அன்பைப் போன்றது அது.

''கற்கண்டு எனக்கு ருசியைக் கொடுக்கிறது. அதனால் அது எனக்கு வேண்டும். கற்கண்டு என்னைப் பற்றி என்ன நினைக்கிறது என்பதைப் பற்றி நான் சிந்திப்பதில்லை'' அலி சகோதரர்களுடைய அன்பின் நிலை இப்பேர்ப்பட்டது.

இதே விதமான அன்பைக் காந்திஜியும் தம்மிடம் செலுத்துவார் என்று எதிர்பார்த்து அவர்கள் ஏமாறினார்கள். ஆனால், மகாத்மாவோ ஆணவச் சிறையினின்றும் விடுதலையடைந்தவர். ஆணவமற்ற அன்பு அவருடைய அன்பு. தான், தன் குடும்பம், தன் சமுதாயம், தன் நாடு, எல்லாவற்றையும் கடந்து நின்றது அவருடைய அன்பு. ''எல்லோரிடத்திலும் செலுத்துகின்ற அன்பைத் தானே இவர் நம்மிடம் செலுத்துகிறார். நமக்கென்று தனி அன்பைக் காட்டவில்லையே'', என்று மனம் நொந்து கொண்டார்கள் அலி சகோதரர்கள். தன்னலமற்ற காந்திஜியின் அன்பைத் தான் அருளுக்கு உதாரணமாகச் சொல்லலாம். நவகாளியில் இந்து முஸ்லிம் கலகம் நடந்தது. அந்தக் கலகத்தில் தலையிட்டால் தம் உயிருக்கு அபாயம் ஏற்படுமே என்று அவர் தயங்கவில்லை. குருதி வெள்ளத்தில் குதித்தார். அருள் வெள்ளத்தில் குதிப்பது போல், மற்ற உயிர்களைப் போற்றி வாழும் அருளாளர்களுக்குத் தம் உயிரைப் பற்றிக் கவலையில்லை; அச்சம் இல்லை. இந்த உண்மையை எவ்வளவு உணர்ச்சியோடு எடுத்துச் சொல்லுகிறார் குறளாசிரியர்.

''மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை''.

‡‡ * ‡‡

# "எந்நாளும் இன்பமே, துன்பம் இல்லை"

திரு. டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி, M.A., M.O.L., Ph.D.,
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர், மதுரைப் பல்கலைக் கழகம்

நாம் பெற்றுள்ள இப் பிறப்பில் இன்பம் எய்துதற்கு உரிய துணை நலன்களை யெல்லாம் மிக மிக விழிப்புடன் தொகுத்துக் கொண்டாலும், பிறப்புத் துன்பமே என்ற முடிவுதான் ஏற்படுகின்றது. எனவே, துன்பத்தைக் கடக்க வழி உண்டா என்று நாடுகிறோம். எப்பொழுதும் இன்பமாயிருக்க வழி உண்டா என்று தேடுகிறோம். எந்நாளும் துன்பமின்றி இன்பமாய் இருந்தவர் எவரேனும் உண்டா என்று எண்ணிப் பார்க்கிறோம். 'ஏன் இல்லை?' என்பது போல, அப்பர் பெருமானார் நம் மனக்கண்முன்னே எழுந்து காட்சியளிக்கின்றார்.

அப்பரைப் படாதபாடு படுத்தினர் என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், அப்பர் பெருமானைக் கேட்டால் அவர் கூறும் பதில் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. அவர் கூறும் பதில் யாது ?

''நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்;
நரகத்தில் இடர்ப்படோம்; நடலை இல்லோம் ;
ஏமாப்போம்; பிணியறியோம்; பணிவோம் அல்லோம்;
எந்நாளும் இன்பமே: துன்பம் இல்லை;
தாமார்க்கும்; குடியல்லாத் தன்மை ஆன
சங்கரன்நற் சங்கவெண் குழைஓர் காதிற்
கோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே''

என்பது அவர் கூறும் பதில். தம் பதிலில், ''எந்நாளும் இன்பமே துன்பம் இல்லை'', என்று இறுமாந்து கூறும் அப்பர், நாம் அவ்வாறு இருத்தற்கு வழியும் உணர்த்துகின்றார்.

சுருங்கக் கூறினால், ''சங்கரனுக்கு மீளா ஆளாயினமையால் எமக்கு எந்நாளும் இன்பமே: துன்பம் இல்லை'', என்று கூறும் வாயிலாக, ''நீவிரும் சங்கரனுக்கு மீளா ஆளாயின், உங்களுக்கும் எந்நாளும் இன்பமே; துன்பம் இல்லை'', என்று அவர் நமக்கு வழி உணர்த்தியுள்ளார். அவர் காட்டியுள்ள வழியைப் பின்பற்றினால், நாம் எந்நாளும் துன்பமின்றி இன்பமாய் இருக்கலாம் என்பது உறுதி.

உலகிற் பிறப்பெடுத்துள்ள அனைவரும் அடிமைகளே; பொறிகள் அறிந்துணர்த்தும் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற புலன்களுக்கு அடிமைகளே; தாம் அவற்றில் விருப்பம் கொள்ளாவிட்டாலும், வலிந்து அவற்றிடத்து இழுத்துச் செல்லும் பொறிகளுக்கு அடிமைகளே; பொறிகளை இயக்கும் மனத்திற்கு அடிமைகளே; மனத்தை அடக்கி ஆள வல்ல புத்திக்கு அடிமைகளே; இவற்றிற்கெல்லாம் முதலாகிய பாசம் என்னும் மாயைக்கு அடிமைகளே. இவ்வாறெல்லாம் அடிமையான ஒருவர்க்கு, வாழ்க்கை வருவாய் நாடி, மற்றோர் அடிமை, மீண்டும் அடிமையாகிறார்; குடியாகிறார். இவ்வாறான பின் விடுதலை ஏது? வாழ்க்கை முடிவில் வீட்டின்பம் பெற வழி ஏது? எனவே, இவர் ''நமன்வருவானே'' என்று அஞ்சுவர்; இவர்க்கு எந்நாளும் துன்பமே; இன்பம் இல்லை. வாழ்க்கை முடிவில் இவர் நரகத்தில் இடர்ப்படுவர்.

ஆனால், யாருக்கும் அடிமை ஆகாதவன் ஒருவன் உண்டு. அவனே இறைவன், தனக்கு அடிமையாகத் தன்னை நாடும் எவரையும் அடிமைத் தளையிலிருந்து நீக்கி அவன் ஆட்கொள்வான்; இன்பத்தை நல்குவான். சங்கரன் என்றே பெயர் வாய்ந்தவன் அவன். சுகத்தை, நலத்தை, இன்பத்தைச் செய்பவன் சங்கரன். எனவே அவனை அருட்கடல் எனலாம். அருளை வாரி வழங்குவதற்கு அறிகுறியாய், ஒருபால் அருள் தோட்டைக் காதில் அணிந்த உமாதேவியை உடையான் அவன்; ஒருபால் குழையணிந்த காதினனாய்த் திகழ்பவன் அவன். அத்தகைய இறைவனுக்கு முதலிலிருந்து ஆளாயிருந்தவர் இடையில் பாசத்திற்கு ஆளாய்த் துன்புற்று மீண்டு, இப்போது இறைவனுக்குத் தாம் என்றும் மீளா ஆளாய்க் கொய்ம் மலர்ச் சேவடி இறையைக் குறுகினமையால், தமக்கு எந்நாளும் இன்பமே துன்பம் இல்லை என்று இறுமாப்புடன் கூறுகிறார் அப்பர்.

கோமாற்கே மீளா ஆளாதல், கொய்ம் மலர்ச் சேவடி இணையே குறுகுதல் என்ற இரண்டு தொடர்களும் பொருள் நயம் மிகப் பொதிந்தவையாகும்.

என்று இறைவன் உண்டு, அன்றே நாமும் உண்டு; பாசமும் உண்டு. இறைவன் என்றும் நமக்குத் தலைவன். நாம் என்றும் அவனுக்கு

அடிமை; ஆள். இத்தொடர்பை நன்கு மனத்திற் பதித்துக்கொண்டு, நாம் அவனுக்கு என்றும் ஆளாய்; அவன் பணி செய்து கிடப்போமானால், அவன் நம்மைத் தாங்குதலைத் தன் கடனாகக் கொண்டு, நமக்குப் பிணியோ நோயோ வாராமல் காத்து எந்நாளும் இன்பம் அளிப்பான். அப்போது நமக்கு எந்நாளும் இன்பமே; துன்பம் இல்லை.

ஆனால் பாசம் நம்மைச் சும்மா விடுவதில்லை. பலப்பல வகையாக நமக்குக் கவர்ச்சியூட்டி அது நம்மைத் தன்பால் ஈர்த்து விடுகின்றது. அதனால், ஆண்டவனுக்கு அடிமையான நாம், அவனை மறந்து, பாச காரியங்களான உடல் பொறிபுலன், மனம், புத்தி இவற்றிற்கு அடிமையாய் விடுகிறோம். அதனால் ஏற்படும் விளைவை முன்பே பார்த்தோம்; துன்பம்; எந்நாளும் துன்பம்; இன்பம் இல்லை.

இழந்த இன்பத்தை மறுபடியும் அடைய வேண்டுமானால் இறைவனுக்கு ஆளாக வேண்டும். அங்ஙனம் ஆளானபின், மறுபடியும் பாசத்தின் கவர்ச்சிகளுக்குக் கண்ணையும் மனத்தையும் பறிகொடுத்தல் ஆகாது. மறுபடியும் பாசகாரிய உலகியற் பொருள்களை நோக்கி மீளுதல் கூடாது. இறைவன் கோமான்; தலைவன்; எல்லோர்க்கும் தலைவன். அக் கோமாற்கே மீளா ஆளாதல் வேண்டும்! சிறிது கண்ணயர்ந்தாலும், மறுபடியும் பாசவலைக்குள் வீழ்ந்து விடுவோம். ஆதலினால், இறைவனைக் குறுகி நிற்றல் வேண்டும். ஆளானதற்கு ஏற்பப் பணிவுடன் குறுகி நிற்றலே பணிவைக் குறிக்கும் அடையாளம் ஆகும். அவன் இணையடிகள், அன்றலர்ந்த தாமரை மலர்களை ஒப்பனவாகும். அதனால், அவை கொய்ம்மலர்ச் சேவடிகள் எனப் பாராட்டப் பெறுவன. அத்தகைய சேவடிகளைக் குறுகி நின்றால், எந்நாளும் இன்பமே துன்பம் இல்லை. கோமாற்கே மீளா ஆளாய்க் கொய்ம் மலர்ச் சேவடி இணையைக் குறுகி நின்றால் எந்நாளும் இன்பமாம்; துன்பம் இல்லை.

குறுகி நிற்றல் எதற்கு ? அண்மையில் நெருங்கி நிற்றல் எதற்கு? இறைவன் எப்போது என்ன ஏவல் இடுவானோ என்று நெருங்கி நின்று காத்திருந்து, அவன் ஏவலைச் செய்து அவன் அன்பும் அருளும் பெற்று அவனைப்போல் ஆகி எந்நாளும் அவனைப்போல் இன்பம் எய்துதற்கேயாம்.

முத்திநிலையை நான்கு படிகளாக வடமொழியாளர் கூறுவர்: அவை சாலோகம், சாமீப்யம், சாரூபம், சாயுச்சியம் என்பன. அவற்றுள் குறுகி நிற்றல் என்பது, ஈண்டுக் குறித்தவற்றுள் சாமீப்யம் ஆகும். இனி அடுத்தது சாரூபம். சாரூபம் எய்தப் பெறின், அடுத்த நிலையாகிய இரண்டறக் கலத்தலாம் சாயுச்சிய முத்திதானே வந்தெய்தும்.

இறைவன் உறைவிடம் கயிலையாகும். உலகில், கோயில்களெல்லாம் இறைவன் உறைவிடங்களே. எனவே, கோயிலையடைதல் சாலோகம் ஆகும். கோயிலில் இறைவன் திருமுன்பை அடைதல் சாமீப்யம் ஆகும். இறைவனுடைய திருமேனி உணர்வாலே சாரூபமாகும். உண்மை வழிபாடு ஈதேயாகும்.

கோயிலில் இறைவன் திருமேனியை-மூர்த்தத்தை — உயிரோவியமாகக் கொள்ளுதல் உண்மை உணரப் பெற்றார்க்கெல்லாம் உடன்பாடாகும். காண்பவனாகிய தான், காணப்படுவனாகிய இறைவன், தனக்கும் இறைவனுக்குமிடையே காட்சி என்ற முப்புடை-திரிபுடி-உணர்வு, இறைவழிபாட்டின் முதற்கண் இருக்கும். வழிபாட்டின் முதிர்ச்சியில் காணப்படும் இறைவன் மட்டும் நிற்கக், காண்பானாகிய தானும், காட்சியும் நழுவிவிடும். காணப்படும் பொருளேயாய் நிலைத்து நிற்றலே வழிபாட்டின் பயனாகும். இத்தகைய வழிபாட்டின் உண்மையையும் அப்பர் பெருமானார் நன்கு விளக்கியுள்ளார். அதனை ஈண்டு நினைவு கூர்வோம்.

> உயிரா வணமிருந்து உற்று நோக்கி
> உள்ளக் கிழியில் உருவெழுதி
> உயிரா வணம்செய்திட் டுன்கைத் தந்தால்
> உணரப் படுவாரோ டொட்டி வாழ்தி
> அயிரா வணமேறா தானே றேறி
> அமரர்நா டாளாதே ஆரூர் ஆண்ட
> அயிரா வணமே என்அம் மானேநின்
> அருட்கண்ணால் நோக்காதார் அல்
> லாதாரே.

இதன் முதலிரண்டடிகளும் மனத்தைப் பார்த்துக் கூறுவன என்பது, இதற்கு அடுத்த பாடலில் நன்கு விளங்கும். ''மனமே, நீ உணரப்படுவாரோடு ஒட்டி வாழ்தி'', என்கிறார் அப்பர். உணர்வார், உணர்வு, உணரப்படுவார் என்ற திருவடியில், உணரப்படுவார் வடிவமாக ஆதலே வழிபாட்டின் பயனும். அதுவே சாரூப்யமாம் என்பதும் நன்கு விளங்கும். ''பகவதாகார விருத்திபக்தி'', என்று வடமொழியாளர்கள் பக்திக்கு இலக்கணம் கூறும்போது பகவான் வடிவமாக அந்தக்கரண விருத்தி ஆவதே பக்தி என்று விளம்புவர், அவ்வாறு ஆவது அவ்வளவு எளிதா?

கோயிலில் உயிரோவியமான இறைவன் திருமேனியை, உயிராவண்ணம் இருந்து, உற்று நோக்க வேண்டும். வேறொன்றையும் கருதாமல், மறைப்பொன்றும் இல்லாமல்

ஒரே எண்ணமாக நோக்கத் தலைப்பட்டால், உயிர்ப்பு வெளியே செல்லாமல் உள்ளேயே அடங்கி மிக மிகச் செம்மையாக உள்ளேயே இயங்கும். சித்தர்கள் செய்யும் சித்தயோகம், தன்னால் இங்கே கைவந்துவிடும். அவ்வாறிருந்து கொண்டு நோக்குங்கால், தலைமுதல் அடிவரையில் ஒவ்வொர் உறுப்பின் அழகிலும் ஈடுபாடு ஏற்படும். அப்போது அந்தக் கரணமாகிய திரைச்சீலையில் இறைவன் உருவம் பதிந்துவிடும். அப்பதிவு அழுந்த அழுந்த, உணர்கின்ற தான் கெட்டொழியும். இதுவே உயிரை ஆவணம் செய்து கொடுத்தலாம்; உயிரை ஒற்றி வைத்தல் அல்லது விற்று விடுதல் ஆகும்.

உணர்வோன், உணர்வு, உணரப்படுவோர் என்ற திருவடியில், உணர்வோர் முதலில் அற்றொழிய, உள்ளக்கிழியில் எழுதப் பெற்ற உருவோடு உணர்வு சிறுபோது நிற்கும். அந்நிலையே, உயிர் ஆவணம் செய்யப்பெற்ற நிலையாம்; உயிர் அடிமையாய்த் தன்னை இழந்து நிற்கும் நிலையாம்.

உணர்வு வடிவாம் அந்தக் கரணத்திடம் இறைவன் உருவைத் தந்து நீங்கும் உணர்வோனாகிய தான், உணரப்படுவோனாகிய இறைவனோடு ஒட்டி வாழ்தலாகிய சாரூப்ய நிலையை அடையும்படி கூறி நிற்கும் நுட்பம் ஊன்றிக்கருதிப்போற்றத்தக்கதாகும். உணரப்படுவோராக அந்தக் கரண விருத்தி யாதலாவது, உணர்வோன், உணர்வு இரண்டும் கெட்டொழிந்து உணரப்படும் இறைவனேயாகி நிற்றலேயாகும்.

முயன்றால் இவ்வாறு உயிரோவியமாகும் இறைவன் திருமேனியாக நிற்றல் எளிதேயாகும். ஆனால், அவ்வாறு நெடிது நிற்றல் இறைவன் திருவருளால் தான் கூடும். அங்ஙனம் நெடிது நிற்றல் கைவரக் கைவரப் பாசத்தின் நீகக்ம் உறுதியாகும். பாசம் அடியோடு நீங்கினால்தான் எந்நாளும் இன்பமாம்; துன்பம் இல்லை.

அனைவருக்கும் தலைவன் இறைவன். எனவே, அயிராவணம் ஏறுதற்கு அமைந்தவன். ஆனால் உயிர்களைக் காப்பாற்றுவதற்கு எளியவனாக வருபவன் அவனே. ஆதலால் அவன் அயிராவணமாகிய வெள்ளை யானையின் மீது ஏறாமல், ஆன்ஏறு (இடபம்) ஏறி வருபவன் ஆகின்றான். இதனை வடமொழியாளர், சௌலப்யசிலத்வம் என்பர்.

தலைவனாகிய அவன், அமரர்களாகிய தேவர்கள் நாடு ஆளுதற்கு அமைந்தவன். ஆனால், அங்ஙனம் ஆளவிரும்பாது உயிர்களைக் காப்பதற்கு, 'ஆரூரைக் கோயில் கொண்டு எழுந்தருளுபவன். அவனை நாம் அன்புப் பெருக்கால் அயிராவணம் என்றும், என் அம்மான் என்றும், பிறன் என்றும் அழைத்து மகிழலாம்.

அத்தகைய இறைவன் தன் அருட்கண்ணால் நோக்குவானானால், திரிபுடிக் காட்சியில் உணர்வோனும் உணர்வும் அற்று உணரப்படுவோனாகிய இறைவனோடு ஒட்டி வாழ்தலாகிய பேறும், அதனால் எந்நாளும் இன்பமும் உண்டாகும் என்பது உறுதி. எனவே, ''நின் அருட்கண்ணால் நோக்காதார் அல்லாதாரே'' என்று முடித்தார் அப்பர்.

இத்தகைய வழிபாடாற்ற இன்றைய நிலையில் கோயில்களில் வாய்ப்பு உண்டா என்று எண்ணிப் பார்த்தால், திகைப்பே ஏற்படுகின்றது. மாலை, தேங்காய், பழம், அர்ச்சனைக் காசு, ஆரவாரம் என்ற இவற்றிற்கு நிலைக்களனாய்த் திகழும் கோயில்கள் உண்மை வழிபாட்டால் எந்நாளும் இன்பமே, துன்பம் இல்லை என்ற நிலைபெற, இறைவனே தன் அருட் கண்ணால் நோக்கிச் செய்தருள வேண்டும் என வேண்டிக் கொள்ளுதலையன்றி வேறு வழியில்லை. இதுகாறும் கூறியவாற்றால் எந்நாளும் இன்பம் பெற்று நிற்க, அப்பர் பெருமான் ஓதிய இந்த இரண்டு பாடல்கள் சிறந்த துணையாகும். இவற்றினும் வேறு துணை வேண்டுவதில்லை என்பதை உறுதியாகக் கொள்ளலாம்.

# சங்க காலப் பொங்கல் விழா

முன்னுரை :

தமிழக மக்கள் கொண்டாடிவரும் பண்டிகைகளுள், பொங்கல்விழா என்பது, மிகவும் சிறப்புடையதாகப் புகழ்பெற்று விளங்குகின்றது. ஒரு நாட்டின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் விளக்குவன வற்றுள், அந்நாட்டு மக்களால் கொண்டாடப் பெறும் பண்டிகைகளும் விழாக்களும், சிறப்பிடம் பெறுகின்றன. அம்முறையில் பொங்கல் விழாவானது, தமிழ் மக்களின் பலவகைச் சிறந்த பண்பாடுகளை விளக்கும் நிலையில் அமைந்துள்ளது.

மருதத் திணை

ஆராய்ச்சி அறிஞர்கள், உலகில் முதன் முதலாக மனிதன் குறிஞ்சி நிலத்தில் தோன்றி, அதனை அடுத்த முல்லை நிலமாகிய காடுகளில் காய் கனி வகைகளை உண்டு வசித்து வந்தான் என்றும், பின்னர் அவன் காலப்போக்கில் உழுதற் றொழிலை உணர்ந்து, பயிரிடக் கற்றுக் கொண்டு, ஓரிடத்தில் நிலையாக வாழத் தலைப்பட்டான் என்றும் கூறுவர். மனிதன் வயல்களில் உழுது பயிர்த் தொழில் செய்ய முற்பட்ட நிலப் பகுதியே, மருதத்திணை எனப் பெறுவதாயிற்று.

மருதத்திணைப் பகுதியிலேயே மக்கள் நகரங்கள் அமைத்து, மிகப் பெரிய அளவில் சேர்ந்து வாழத்தலைப்பட்டனர். மருத நிலத்தில்தான் நகரங்கள் அமைந்தன. நகரங்கள் அமையத் தொடங்கிய காலம் முதல்தான் மனிதன் நாகரிக வளர்ச்சி பெறத் தொடங்கினான். நாகரிகம் என்னும் சொல், நகர் என்ற சொல்லினின்றே தோன்றிய தாதலைக் காணலாம். Civilization என்னும் ஆங்கிலச் சொல்லும் City எனப் பெருள்படும் Civitas என்னும் சொல்லினின்றே தோன்றியது என்பர். உழவுத் தொழில் செய்யத் தலைப்பட்ட பின்னரே, மனிதன் பண்பாடு வளரப் பெற்றான். பண்பாடு என்னும் பொருளுடைய Culture என்னும் சொல், உழவுத் தொழிலைக் குறிக்கும் Agriculture என்னும் சொல்லோடு மிகவும் நெருங்கிய தொடர்பு உடையதாகும்.

உழவர் திருநாள்

இம்முறையில் ஆராய்ந்தால், பொங்கல் விழா நமது நாகரிகப் பண்பாட்டு விழாக்களுள் தலைசிறந்ததாதலை உணரலாம். பொங்கல் விழாவை 'உழவர் திருநாள்' என்றும், 'தமிழர் திருநாள்' என்றும் குறிப்பிடலாம். உழவுத் தொழிலின் உயர்வும் இன்றியமையாமையும் பற்றி யாவரும் உணருவர். அதனைப் போற்றும் முறையிலேயே பொங்கல்விழா பொருத்தமுற அமைந்துள்ளது. உழவுத் தொழிலுக்கு மழை இன்றியமையாதது. ஆதலின், உரிய காலத்தில், வேண்டும் அளவு மழை பெய்வித்து உதவிய, மழைக்கடவுள் ஆகிய போகி என்னும் இந்திரனுக்கு, நன்றி செலுத்தி வழிபாடாற்றும் நாளே போகிப் பண்டிகை ஆயிற்று. அந்நாளில் தூசு நீக்கியும், மாசு போக்கியும் வீடு முதலியனவற்றைத் துப்புரவு செய்து, புதுமைப் பொலிவுறுத்துதல் வழக்கம். தைம் மாதத்தின் முதல் நாளே பொங்கல் விழா நாளாகும்.

சூரியன் மகர ஓரையில் புகும் நன்னாள் அதுவே. அந்நாளிலேயே சூரியன் தட்சிணாயனம் கழிந்து உத்தராயணம் செல்லத் தலைப்படுகின்றான். ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரை தேவர்களுக்கு இரவு என்றும், தைம்மாதம் முதல் ஆனி மாதம் வரை பகல் என்றும் பெரியோர்கள் கூறுவர். அம் முறையில் தைம்மாதத்தின் முதல் நாளானது, இரவு கழிந்து பகல் தொடங்குவதற்கு இடைப்பட்ட வைகறைப் போதாக அமைகின்றது. வைகறை வேளை கடவுள் வழிபாட்டுக்குச் சிறந்தது என்பர். 'உத்தராயண புண்ணிய காலம்' என்பது பெரு வழக்கு. இந் நன்னாளில் உழவுத் தொழிலுக்குப் பலவகைகளில் பேருதவி புரிந்த சூரிய வழிபாடு நிகழ்வது சாலப் பொருத்தமாகும்.

சூரிய வழிபாடு ;

சூரிய வழிபாடு (Heliolatry) என்பது, ஒரு நாட்டிற்கோ ஒரு சமயத்திற்கோ மட்டும் உரியதன்று; அஃது உலகம் அனைத்திற்கும் பொதுவானது; உலகம் எங்கணும் நிகழ்வது. *(1)* 'உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு பலர் புகழ்ஞாயிறு' என்று நக்கீரர் சூரியனைப் புகழ்ந்திருத்தல் காணலாம். 'ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்' என இளங்கோவடி

(1) " In the words of Diadorus Siculos : man in earliest times struck with the beauty of the universe, with the splendour and regularity which everywhere were in evidence made, no doubt, that there was some divinity who therein presided and then presented the sun as expressing the likeness of the deity."

—WILLIAM TYLER OLCOTT,
(Sun Lore of All Ages, p. 42.)

*சென்னைத் தியாகராய நகர்த் தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில், தைப்பொங்கல்—தமிழர் திருநாள் விழாவில் ஆற்றிய சொற்பொழிவினைத் தழுவியது *(14—1—74)*. —ஆசிரியர்

களும் பாடுவர். சிவசூரியன், சூரிய நாராயணன் முதலிய பெயர்களும் சூரியனின் சிறப்பை உணர்த்தும். புதிதாக அறுவடை செய்த நெல்லின் அரிசி கொண்டு பாற்பொங்கலிட்டு மக்கள் சூரியனை வழிபடுவர். பயிரிட்டுப் புதிதாகக் கிடைத்த பொருள்களே, அன்று இறைவனுக்கு வைத்துப் படைக்கப்படும். ஆதலின் 'பொங்கற் புதுநாள்' எனவும் இதனைக் குறிப்பிடுவர். வாழ்க்கை வளர்ச்சி பெறுதற்கு அவ்வப்பொழுது தேய்ந்து சிதைந்து போன பழையனவற்றைக் கழித்து, புதிய புதிய நலங்களை நாம் தழுவிக்கொண்டு நன்மை பெறுதல் வேண்டும் என்பதனை, இவ்விழாவின் அமைப்புப் புலப்படுத்துகின்றது.

### மாட்டுப் பொங்கல்

உழவுக்கு இன்றியமையாதனவாக மாடுகள் விளங்குதலின், அவற்றைத் தக்கவாறு போற்றும் முறையில், மறுநாள் மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுகின்றது. நாணயப் புழக்கம் இல்லாத மிகப் பழங்காலத்தில், மாடுகளே மக்களின் செல்வமாக விளங்கின. ஒருவருடைய செல்வத்தின் மதிப்பு அவருக்கிருந்த மாடுகளின் எண்ணிக்கையைக் கொண்டே மதிப்பிடப்பெற்றது. ஆதலின் 'மாடு' என்னும் சொல்லுக்கே 'செல்வம்' என்று ஒரு பொருள் உண்டு. 'கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு மாடு அல்ல மற்றையவை' என்னும் திருக்குறளில், 'மாடு' என்னும் சொல் 'செல்வம்' என்னும் பொருளில் வந்திருத்தல் காணலாம். இவ்வாறே 'பசு' என்னும் சொல்லுடன் தொடர்புடைய Pecus என்னும் சொல்லினின்றே, பண சம்பந்தமான என்னும் பொருளுடைய Pecuniary என்னும் ஆங்கிலச் சொல் வழக்காறு ஏற்பட்டுள்ளமையும் காணலாம் (2). இவ்வாற்றுல் நாட்டு வளம் பெருகுதற்கு நன்கினிது பயன்படும் கால்நடைச் செல்வங்களைப் போற்றும் முறையிலேயே, மாட்டுப் பொங்கல் தொன்று தொட்டுக் கொண்டாடப் பெற்று வருதலையுணரலாம்.

நம் தமிழகத்தில் சில பகுதிகளில், 'மஞ்சு விரட்டு விழா' மிகச் சிறப்பாக நடைபெறும். அடங்காத காளைகளை அஞ்சாது எதிர்த்து ஆண்மை காட்டி அடக்கும் வீரப் பெருவிழாவாக, அஃது இந்நாளிலும் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றது. சங்க இலக்கியங்களுள் ஒன்ருகிய 'கலித்தொகை' என்னும் கவின் மிகு நூலின்கண் உள்ள 'முல்லைக் கலி' என்னும் பகுதியைச் சேர்ந்த பாடல்கள் பலவும், இவ்வீரப் பெருஞ் செயலைச் சிறப்பித்துப் பாடும் முறையிலேயே அமைந்துள்ளன. ஆடு மாடுகளை மேய்க்கும் ஆயர் குலத்தில் தோன்றியருளிய கண்ணபிரான், நப்பின்னைப் பிராட்டியை மணந்து கொள்ளுதற் பொருட்டு, ஏழு வலிய காளைகளை அடக்கி வெற்றி கொண்டான் என்பது வரலாறு. கண்ணபிரானின் இவ்வரிய வீரச் செயலை ஆழ்வார்கள் மிகவும் போற்றித் துதித்துள்ளனர்.

### காணும் பொங்கல்

அடுத்ததாகிய மூன்ரும் நாள், 'காணும் பொங்கல்' என வழங்கப் பெறும். சமுதாய வளர்ச்சிக்கு மக்கள் ஒருவரை ஒருவர் அறிந்து தொடர்பு கொள்ளுதலும், அவ்வப்போது ஒருவரை ஒருவர் சந்தித்து அன்புடன் கலந்து பேசி உறவாடுதலும், மிக மிக இன்றியமையாதனவாகும். சமுதாய நலமும் வளர்ச்சியும் குறித்து, நம் பண்டைச் சான்ரேர்கள் தொன்று தொட்டே, 'காணும் பொங்கல்' திருநாளை மிகச் சிறப்பாகக் கருதிப் போற்றி வந்துள்ளனர். ''கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய சுற்றத்தாற் சுற்றப்படும்''; ''அளவளா இல்லாதான் வாழ்க்கை குளவளாக் கோடின்றி நீர் நிறைந்தற்று'' என்பன போன்ற திருக்குறள்களின் அடிப்படையில் 'காணும் பொங்கல்' அமைந்துள்ளது.

இவ்வாறு பற்பல சிறப்புக்களை உடைய பொங்கல் விழாவானது, நம் தமிழகத்தில் தொன்று தொட்டே நிகழ்ந்து வருகின்றதாயினும், நம் பழந்தமிழ் நூல்களில் இவ்விழாவைப் பற்றிய குறிப்புக்கள் ஏதும் காணப்படவில்லை. 'சிஷ்டாசார சித்தம்' எனப்படும் முறையில், 'மேலையார் செய்வனகள்' எனத் தக்கபடி, நிகழ்ந்து வருவனவற்றில் ஒன்ருகவே பொங்கல் விழா காணப்படுகின்றது.

இலக்கியங்களைச் சமுதாயக் கண்ணுடிகள் எனலாம். சமுதாயச் செழிப்புக்கும், சூழ்நிலைக்கும், வரலாற்றுக்கும் ஏற்ப இலக்கியங்கள் தோன்றுகின்றன. ஒரு சமுதாயத்தின் உயர்வு

---

(2) "Among pastoral peoples wealth naturally consists in flocks and herds, and wealth is counted by so many heads of cattle. Thus the cattle became a kind of legal tender. This happened among the Indo-Europeans, and Indo-European languages have preserved many traces of this primitive state, in which cattle, a man's only wealth were used as money.

Homer speaks of girls who 'bring oxen' to their fathers . . Irish law ordinarily fixed penalties and prices by the head of cattle ; a female slave was worth three cows.

In many languages, the same word signifies both money and cattle. The Latin 'pecunia,' for instance, is merely derived from 'pecus.' In German, the word 'Vieh' now applies only to cattle, but the corresponding English 'fee' refers to a certain kind of earned wage. Here the word can be traced to the name for cattle."

—J. VENDRYES, Language

தாழ்வுகளையும், வெற்றி தோல்விகளையும், வாழ்க்கை முறைகளையும், நடையுடை பாவனை களையும், அவ்வச் சமுதாய இலக்கியங்கள் அழகுறப் புனைந்து காட்டி விளக்குகின்றன. இஃது உண்மையே யாயினும், தமிழ் மக்க ளின் சமுதாய வாழ்வில் சிறப்பிடம் பெறும் ஒரு பெரும் விழாவாக விளங்குகின்ற பொங் கற் பண்டிகையைப்பற்றித் தமிழிலக்கியங் களில் யாதொரு குறிப்பும் காணப்படாமை, மிகவும் வியப்பும் திகைப்பும் விளைவிப்பதாகவே உள்ளது.

## புறநானூற்றுப் பாடல்

என்றாலும், சங்ககால நூல்களுள் மிகவும் புகழ் பெற்றதாகத் திகழும் 'புறநானூறு' என்னும் பழந்தமிழ்ப் பெரு நூலின் இடையில் அமைந்துள்ள ஒரு பாடல், இப் பொங்கல் விழாவைப்பற்றி ஒரு வகையிற் குறிப்பிடுவது போல அமைந்து காணப்படுகின்றது. இப் பாடல், இந்நாளைய பொங்கல் விழாவின் இயல்புகளை நேரே குறிப்பிட்டு நிரல்பட எடுத்து விளக்கும் தன்மையில் அமைந்திலது. எனினும் கூட, ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க காலத்தில், தமிழகத்தின் மலைநிலப் பகுதியைச் சார்ந்து வாழ்ந்திருந்த மக்களின் வாழ்க்கையினை விளக் குவதாக இருக்கின்றது. 'கருவூர்க் கதப்பிள்ளை சாத்தனார்' என்பவர் ஒரு சங்க காலப் புலவர். அவர் 'பிட்டங்கொற்றன்' என்னும் வள்ளல் ஒருவனைப் புகழ்ந்து பாடுகின்றார். பாரிக்குப் பறம்பு மலையும், குமணனுக்கு முதிர மலையும், பேகனுக்குப் பொதினி மலையும் போல, குதிரை மலை என்பது பிட்டங்கொற்றனுக்கு உரிமை யுடையதாகும். குதிரை என்பது ஊர்ந்து செல்லும் பரிமாவினையும் குறிக்கும். ஆதலின், அதனினின்று பிரித்துக் காட்டக் குதிரை மலைக்குத் தலைவனாகிய பிட்டங்கொற்றன் என் னும் வள்ளலைச் சாத்தனார் 'ஊராக் குதிரைக் கிழவன்' எனச் சிறப்பிக்கின்றார்.

## குதிரை மலை

அக்குதிரை மலையில் பற்பல அருவிகள் உள்ளன. அவ்வருவிகளில் இடைவிடாது நீர் பெருகிப் பேரொலி யெழுப்பிக் கொண்டு வந்து விழும். அம்மலை எங்கணும் மூங்கிற் காடுகள் பரந்து நிறைந்திருக்கும். அதன் சரிவுகளில் மிளகுக் கொடிகள் படர்ந்து விளங் கும். காந்தட் பூக்கள் மலர்ந்து நறுமணம் பரப்பும். அதன் அடர்ந்த காடுகளில் காட்டுப் பன்றிகள் கூட்டமாக வசிக்கும். அவைகள் கொழுமையான பலவகைக் கிழங்குகளின் பொருட்டு, மலைப் பகுதிகளில் ஆங்காங்கே ஆழமாகக் கிளறிக் கொண்டிருக்கும். அதனால் மலைப் பகுதிகள் எங்கணும் ஏர்கொண்டு உழுதாற்போலப் புழுதி மிக்குத் திகழும். அப் புழுதியில், மலை நில மக்களாகிய குற வர்கள், தினை விதைகளைத் தூவி விதைப்பர். அவர்களின் முயற்சி யில்லாமலே நிலத்தின் செழுமையால் தினைக் கதிர்கள் ஓங்கி வளரும். குறவர் குலமக்கள் அத்தினைக் கதிர்களைக் கொய்வர். நல்ல பண்டிகை நாள் வரும் செவ்வியை நோக்குகின்றனர். முதல் முதலாக விளைந்து வரும் தினையை நல்ல நாளில் புதிதாக உண்ண விரும்புகின்றனர். அதன் பொருட்டு அம் மலைநிலக் காடுகளில் வாழ்ந்து பெருகி வளர்ந்து வரும் மானினங்களின் மடி யினின்று பால் கறப்பர். கறந்த நுரை மிகுந்த இனிய பாலைக் கொண்டு, சந்தன மரங்களின் கட்டைகளை விறகாக இட்டு மூட்டிய அடுப்பில் ஒரு பெரும் பானையை ஏற்றிப் பொங்கல் அடுகின்றனர். கூதளஞ் செடிகள் அழகுற வளர்ந்து, காட்டு மல்லிகைகள் மலர்ந்து மணங் கமழும் நல்ல இனிய சூழலில், அகன்ற பெரிய வாழை இலையில், தாம் அட்டிய பொங் கலைப் பலருக்கும் பகிர்ந்து கொடுத்துப் பல ராகக் கூடி உண்டு மகிழ்கின்றனர். அத்தகைய இயற்கை வளம் நிறைந்த குதிரை மலைப் பகுதிக்குத் தலைவன் பிட்டங்கொற்றன் எனப் புலவர் பாடிச் செல்கின்றார்.

''அருவி ஆர்க்கும் கழைபயில் நனந்தலைக்
குறிவளர் அடுக்கத்து மலர்ந்த காந்தட்
கொழுங்கிழங்கு மிளிரக் கிண்டிக், கிளை
யொடு
கடுங்கட் கேழல் உழுத பூழி
நன்னாள் வருபதம் நோக்கிக் குறவர்
உழாஅது வித்திய பரூஉக்குரற் சிறுதினை
முந்துவிளை யாணர் நாட்புதிது உண்மார்,
மரைஆன் கறந்த நுரைகொள் தீம்பால்
மான்தடி புழுக்கிய புலவுநாறு குழிசி
வான்கேழ் இரும்புடை கழாஅது ஏற்றிச்
சாந்த விறகின் உவித்த புன்கம்,

கூதளம் கவினிய குளவி முன்றிற்
செழுங்கோள் வாழை அகலிலைப் பகுக்கும்
ஊராக் குதிரைக் கிழவ! கூர்வேல்
நறைதார்த் தொடுத்த வேங்கையங்
கண்ணி
வடிநவில் அம்பின் வில்லோர் பெரும!
கைவள் ஈகைக் கடுமான் கொற்ற!
வையக வரைப்பில் தமிழகம் கேட்பப்
பொய்யாச் செந்நா நெளிய ஏத்திப்
பாடுப என்ப பரிசிலர்! நாளும்
ஈயா மன்னர் நாண
வீயாது பரந்தநின் வசையில்வான் புகழே!

—புறநானூறு, 168..

இப்பாடல், இந்நாளைய பொங்கல் விழா நிகழ்ச்சியைக் குறிப்பிடும் ஒரு சிறந்த இலக் கியச் சான்று என நாம் கொள்ளலாம். இந்

நோக்குடன் இப்பாடலை ஆராய்ந்தால், இப்பாடல் அறிஞர்களுக்குத் தேனும் பாலும் அமுதமுமாய்த் தித்திப்பதாகும். பொங்கல் விழாவின் பழமைக்கும், அது உழவர்களின் திருநாள் என்பதற்கும், இப்பாடல் சான்று பகர்கின்றது. மருதத் திணை வாழ்க்கைக்கு முன்னர்க் குறிஞ்சி திணை முல்லைத்திணை வாழ்க்கையே மக்கட்குத் தொடக்கத்தில் அமைந்திருந்தது என்பதும் இதனாற் புலனாகின்றது. முதன் முதலில் மக்கள் (Primitive men) எங்ஙனம் உழவு தொழிலைக் கற்றுக் கொண்டனர்? அவர்களின் வாழ்க்கை எவ்வாறு இயற்கையோடு இயைந்திருந்தது? என்பன போன்ற செய்திகளையும், இப்பாடல் உணர்த்துகின்றது.

பொங்கற் பண்டிகையை 'நன்னாள் வருபதம்' என்றும்; அறுவடையான பயிரை 'முந்துவிளை யாணர்' என்றும்; பாற்பொங்கல் இட்டு உண்ணுதலை,

''நாட்புதிது உண்மார்
மனையோள் கறந்த நுரைகொள் தீம்பால்,
சாந்த விறகின் உவித்த புன்கம்''

என்றும்,

158589

நல்ல இனிய சூழலில் எல்லோருடனும் கூடியிருந்து உண்ணுதலை,

''கூதளம் கவினிய குளவி முன்றில்
செழுங்கோள் வாழை அகலிலைப் பகுக்கும்''

என்றும், இப்புறநானூற்றுப் பாடல் குறிப்பிட்டிருத்தல், அறிந்து மகிழத்தக்கது.

முடிவுரை :

தமிழ் மக்களின் கடவுளுணர்ச்சி, நன்றியுணர்வு, சிற்றுயிர்களுக்கு இரங்கிப் பரிவு காட்டும் தன்மை, விருந்தோம்பல், சுற்றம் தழுவுதல், பிறருடன் கலந்து பழகி உறவு கொள்ளுதல், முதலிய சிறந்த பல பண்புகளை விளக்குவதாகவும், அவற்றிற்கு மேன்மேலும் ஆக்கம் அளிப்பதாகவும், 'பொங்கல் விழா' அமைந்து விளங்குகின்றது எனச் சுருக்கமாகத் தொகுத்துக் கூறலாம்.

—ஆசிரியர்.

## ஒரு முக்கிய வேண்டுகோள்.

தேவாரத் திருப்பதிகங்கள் பாடப்பெற்ற திருத்தலங்களில், அத்திருப்பதிகங்களின் பாடல்களைக் கோயில்களில் சலவைக் கற்களில் பொறித்து வைக்கும்பணி, ஒரு சிறந்த நல்ல பணியாகும். அந்தப் பணி, இன்னும் சில திருக்கோயில்களில், நிதிவசதி குறைவாக உள்ள காரணத்தாலோ, அன்றி வேறு மற்ற காரணங்களாலோ, நடைபெறாமல் உள்ளது.

அவ்வாறு உள்ள தேவாரப் பாடல் பெற்ற திருக்கோயில்களின் பெயரை, அவ்வக் கோயிலின் அறங்காவலர்கள் அல்லது நிர்வாக அதிகாரிகள், பின்வரும் முகவரிக்கு எழுதித் தெரிவித்தால், அத்திருக்கோயில்களுக்கு எவ்வித செலவும் இல்லாமல், அவ்வக் கோயில்களின் திருப்பதிகங்களைச் சலவைக் கல்லில் பதித்துக் கொடுக்க விரும்பித் தயாராக இருக்கின்றனர்.

ஆதலின், தேவாரப் பாடல் பெற்ற கோயில்களின் அறங்காவலர்களும், நிர்வாக அதிகாரிகளும், கீழ்க்காணும் முகவரிக்கு உடனே தொடர்பு கொள்ள வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

'' திரு. லா. ஆ. பரமன் செட்டியார் அவர்கள்,
பன்னிரு திருமுறை மன்றம், 14-13, நந்தி கோயில் தெரு திருச்சிராப்பள்ளி-2''.

—ஆசிரியர்.



இராமேசுவரம் அருள்திரு. இராமநாத சுவாமி திருக்கோயிலில் நிகழ்ந்த ''பாவைவிழாவில்'', ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I.A.S. அவர்கள், பாவைப்பாடற் போட்டியில் வெற்றிபெற்ற குழந்தைகளுக்குப் பரிசுவழங்குதல் *(10—1—74)*



இராமேசுவரம் அருள்திரு. இராமநாத சுவாமி திருக்கோயிலில் நி த
''பாவை விழா''வில், மதுரைத் துணையாணையர் திரு. ம. அ. முருகேசன், B. A
அவர்களும், ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன் B. A., B. L., I. A. S. அவர்கள
கலந்துகொண்டு உரை நிகழ்த்துதல் (10—1—74)

Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras-600034.
Printed at Tamil Arasu Press, Madras-600002. Editor: N. R. Murugavell, M.A., M.O.L.